
ழக ழல்
கம், பி.ஏ.
புதுமலர்
நிலையம்

# வாழ்க்கைச் சுழல்

Complimentary Copy.

171

ஆசிரியர்

ஏ. ஷண்முகம் பி. ஏ.

ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா.

காமராசர் பல்கலைக்கழக
அன்னை

புதுமலர் நிலையம்

கோயமுத்தூர்

பதிப்புரிமை பெற்றது:
முதல் பதிப்பு 1947 ஜன.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 518
எண்: 518



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

மதுரை காமராசர் பல்கலைக்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

விலை ரூபாய் இரண்டு

# முகவுரை

தமிழ் நாட்டின் கிராமக் காட்சிகளையும் வாழ்க்கையையும் கலை அழகுடன் சித்திரிக்கும் இந்நாவலைப் படித்து இன்பமடைந்தேன். பழங்கதைகளின் சுவை ததும்ப, எளிய இனிய நடையில் மனதைக் கவரும் வண்ணம் ஏ. ஷண்முகம் அவர்கள் எழுதி இருக்கின்றார்.

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் வேதாந்தத் தத்துவமும் கவித்துவமும் நிறம்பியிருக்கின்றது. ஆனால், இந்த சிறந்த செல்வத்தை மக்கள் அனுபவிப்பது கடினமாயிருக்கின்றது. ஏனென்றால் இவற்றை விளக்கிய பண்டைய ஆசிரியர்கள் கடினமான இலக்கண நடையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். தமிழ் உலகத்திற்கு நல்லகாலம் பிறந்து விட்டது. தமிழ் இலக்கியச் செல்வத்தை சாமான்ய மக்கள் அனுபவிக்கக் கூடிய விதத்தில் எளிய வசன நடையில் எடுத்துக் காட்டும் சக்தி வாய்ந்த பல எழுத்தாளர்களும் பிரசங்கிகளும் இப்போது தோன்றியிருக்கின்றனர். (மக்களின் அன்றாட வாழ்வை இயற்கைக் காட்சியுடன் படம்பிடித்து அப்படத்தில் தற்கால உலகின் நவீன தத்துவங்களையும் சேர்த்து சித்திரித்துக் காட்டும் சக்தி இவர்களுக்கு இருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயம்)

சமீபத்தில் ஷண்முகம் அவர்கள் லண்டன் பிரயாணம் செய்த போது, அவருடைய இலக்கிய ஆர்வம் பூர்த்தியடைந்த தாகத் தெரிகின்றது. இந்த உணர்ச்சி மேலும் மேலும் வளர வேண்டுமென்று அவருக்கு என் மனமார்ந்த ஆசி கூறுகின்றேன்.

"பக்தி விலாஸ்"
திருவாங்கூர்
30-12-46

ஸர். சி. பி. ராமஸ்வாமி அய்யர்

## மதிப்புரை

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி என்ற மலர்ச்செடியில் புஷ்பித்த இரு புஷ்பங்களுள் சிறு கதை ஒன்று. மற்றொன்று, நாவல் எனப்படும் நவீனம். இவை இரண்டுமே மேல் நாட்டு இலக்கிய வழியில் தோன்றியவை யாயினும், தற்காலத்துத் தமிழ் இலக்கியத்துடன் இரண்டறக் கலந்து விட்டன. இவற்றுள், 'சிறு கதை' என்ற தமிழ் இலக்கிய வடிவம் இக்குறுகிய காலத்துக்குள் அடைந்திருக்கும் வளர்ச்சி, இலக்கியத்தின் சரித்திரத்திலேயே உவமையில்லாத ஒரு நிகழ்ச்சியாகும். பெரும்பாலும் பத்திரிகைகளில் வெளி வருதலாலும், விரைவில் படித்து முடித்து விடக் கூடியவையா யிருப்பதாலும், சிறு கதைகள் வாசகர்களின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டன. இளந் தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பான்மையினர், இத்துறையிலேயே மிகவும் உழைத்து எண்ணற்ற அழகிய சிறு கதைகளை எழுதி, தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிந்து வருகின்றனர்.

'நாவல்' என்ற இலக்கியத்தைக் குறித்து இவ்வாறு கூறுவதற்கில்லை. தமிழில் நூற்றுக் கணக்கான நாவல்கள் இன்றுவரை வெளி வந்திருப்பினும், அவற்றில் பெரும்பான்மையான வற்றைத் 'தமிழ் இலக்கியம்' என்ற வகுப்பிலேயே சேர்க்கமுடியாது. அவற்றுள் பல, ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுள்ள நாவல்களின் மொழிபெயர்ப்புகளாகவும், எஞ்சியவை வங்காளி, ஹிந்தி, மராட்டி முதலிய இந்திய பாஷைகளிலுள்ள நவீனங்களைத் தழுவி எழுதப்பட்ட கதைகளாகவுமே இருக்கின்றன. தமிழ் நாட்டவரின் வாழ்க்கையை அடிப்படை

யாகக் கொண்டு, தமிழ் எழுத்தாளர்கள் தமிழிலேயே நினைத்து எழுதிய நவீனங்கள் வெகு சிலவே யாகும். சுமார், 50 வருஷங்களுக்கு முன், பால்ய மேதாவியான ஸ்ரீ ராஜம் அய்யரவர்களால் எழுதப்பட்ட "கமலாம் பாள் சரித்திரம்" என்ற நாவலுக்கு இணையான தமிழ் உரை நடை நூல்கள் அதிகம் வெளிவர வேண்டும்.

இதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவதாக, நாவலுக்கு இயற்கையாக நிகழும் அழகிய சம்பவங்கள் நிறைந்த நீண்ட கதை ஒன்று மிகவும் அவசியம். இரண்டாவதாக, புத்தகம் அலுப்புத் தட்டாத, இனிய நடையில் எழுதப்படவேண்டும். இவை இரண்டும் அமையாத ஒரு நாவல், எந்த நாட்டின் இலக்கியத்திலும் ஓர் உயரிய இடம் பெறுவது துர்லபம்.

இத்தகைய கடினமான இலக்கியத்துறையில், எனது நண்பர், திரு. ஷண்முகம் அவர்கள் அடைந்துள்ள வெற்றியைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். அவர் சிருஷ்டித்த "வாழ்க்கைச் சுழல்" என்ற இந் நவீனம், தமிழ்நாட்டுக் கிராமங்களுள் ஒன்றில் 'உழுதுண்டு வாழ்ந்து வந்த' ஒருவரின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதை. தமிழ் மொழி இவ்விருபதாம் நூற்றாண்டில் எவ்வளவு எளிமையும் வன்மையும் ஒருங்கே பெற்று விளங்குகிறது என்பதற்கு இவ்வாசிரியரின் நடையை ஓர் உதாரணமாகக் கூறலாம். மாசற்ற கிராம வாழ்க்கையைச் சித்திரித்தாலும், கதாபாத்திரங்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வருணித்தாலும், கதாநாயகனின் மேனாட்டு விஜயத்தை விவரித்தாலும், இன்னும் சங்கீதம், சமூகம் முதலிய விஷயங்களைக் குறித்துத் தன்னுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டாலும், ஸ்ரீ ஷண்முகம் அவர்களின் நடையில் ஒரே தெளிவையும்

இனிமையையும் காண்கிறோம். கதா நாயகனும், நாயகியும் ஒருவருக்கொருவர் ஆங்கிலமும் சங்கீதமும் கற்பிக்கு மிடத்தில் ஆசிரியர், "கலைக்காட்டிலே இருவரும் அழகிய மலர்களைக் கொய்து விதவித மணங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர்" என்று எழுதியிருப்பதை உரை நடைக் கவிதை என்றே சொல்ல வேண்டும்.

இத்தகைய அழகிய, தெள்ளத் தெளிந்த தமிழ் வாக்கியங்கள் இந்நூலில் பல இடங்களில் மிளிர்கின்றன.

தமிழ் விருந்தாகிய இந் நாவலைத் தமிழர்கள் அனைவரும் படித்து இன்புறுவார்களென்று திடமாக நம்புகிறேன்.

மாலூர். சர். ஆர். எஸ். ஸர்மா



ஆசிரியர் :

**ஏ. ஷண்முகம், பி.ஏ.**

# தர்ம சீலர்கள்

ஒரு நாட்டின் வளத்தை அறிய வேண்டுமாயின் அந் நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்தால் போதுமானது. அவர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதமாவது போதுமான உணவுடனும், உடையுடனும், சுகாதார விடுதிகளுடனும் வாழ்ந்தால் வளமாக மக்கள் வாழ்கிறார்களென்றும், நூற்றுக்கு இருபத்தைந்துபேர் அபரிமிதமான பாக்யங்களுடன் வாழ்ந்து, மிகுதி எழுபத்தைந்து பேர் வறுமையுடன் வாழ்ந்து வந்தால் அது அந் நாட்டின் கீழ் நிலையைக் குறிக்கிறதென்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். இதை மனதில் வைத்துக் கொண்டு நம் நாட்டின் இன்றைய நிலையை நோக்குமிடத்து பஞ்சத்துக்கும், வறுமைக்கும், பிணிக்கும் நம் நாடு உலகத்திலேயே முதன்மை ஸ்தானம் வகிக்கிறதென்றுதான் கொள்ளவேண்டும்.

கோயமுத்தூர் ஜில்லாவில், ரங்கப்பம்பாளையம் என்னும் ஒரு சின்னக் கிராமம் இருக்கிறது. இவ்வூர் மக்கள் அநாசாரப் பழக்க வழக்கங்களிலும், ஒழுங்கீனமான நவீன நாகரிகங்களிலும் ஈடுபடாதவர்கள். நீர்வளம் நிலவளம் ததும்பியிருந்ததன் காரணமாக இவ்வூர் மக்களில் பெரும்பான்மையோர் 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை' என்ற உறுதி மொழிப்படி, விவசாயத் தொழிலில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வந்தனர். அவர்கள் தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். தானதர்மங்கள் செய்வதில் தலை சிறந்தவர்கள். நயவஞ்சகப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கையில்லாதவர்கள். 'தம்மைப்போல் பிறரையும் நினை' என்ற அருள்வாக்குக்கு அடிமைப் பட்டவர்கள்.

இவ்வூரில், தர்மசாமிக் கவுண்டர் என்ற வேளாளப் பெருந்தகையார், ஏராளமான நன்செய் நிலங்களுக்கு உடமையாளராய்த் தம் தர்மபத்தினியான திலகக்காள் என்றவளுடன் சகல சம்பத்துக்களுடனும் தம் இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தார். ஏராளமான சொத்துக்களிருந்தும், கல்யாணமாகி வெகு காலமாகியும் தங்கட்கு மக்கட் பேறில்லையே யென்று தம்பதிகள் இருவரும் சதா கவலையில் ஆழ்ந்திருந்தனர். அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஆத்மாக்கள் ஏராளமான சிசுக்களுடன் அங்கலாய்த்துக் கொண்டிருக்க, ஆயிரம் வேலி நிலங்கள் படைத்த தர்மசாமிக்கவுண்டருக்கு இப்பாக்யக் குறை ஏற்பட்டது விதியின் செயல் என்று தான் சொல்லவேண்டும்.

அவர் பேருக்கேற்ற குணம்படைத்தவர். கைமாறு கருதாமல் தர்மத்தை ஏற்பவர்களுக்குச் செய்யும் வள்ளல். தான தர்மங்களைச் செய்து பிறர் நன்மதிப்பையும் நாகரிகப்பட்டங்களையும், பதவிகளையும், அடைய ஆசைப்படாதவர். அவருக்கு வாய்த்த மனைவியோ என்றால் பேருக்கேற்ற திலகம்.

இத்தகையோருக்குக் குழந்தைப் பேறில்லையே யென்று அவ்வூர் வாசிகள் தம்பதிகளைக் காட்டிலும் அதிகக் கவலை யுற்றிருந்தனர். காசிக்குப் போனால் கர்மவினை தீரும் என்றார் பலர். ராமேசுவரத்தின் எல்லையில் அடி வைத்தால் குழந்தைப் பேறு கிட்டுவதில் ஐயமில்லை என்றார் சிலர். முழுமுதற் கடவுள் ஒருவர் மேல் முழு நம்பிக்கையுடன் வாழ்ந்த இத் தம்பதிகளுக்குத் தீர்த்தயாத்திரை சென்று, தம் கர்மத்தைத் தீர்த்து, தாம் வேண்டும் பயனை அடைவதில் நம்பிக்கை ஏற்படவில்லை. 'நானிருக்க பயமேன்' என்று சதா தன் பக்த கோடிகளுக்கு எச்சரித்

துக் கொண்டிருக்கும் சர்வேச்வரன் மேல் எல்லாப் பாரத்தையும் போட்டு விட்டுத், தங்கள் நிலபுலன்களைச் சரிவரக் கவனித்து, ஏழைகளுக்குத் தம்மாலான உதவி செய்தலே, தாம் மக்கட்குச் செய்யும் பேருதவியென்று நம்பியிருந்தனர்.

வாழ்வின் லட்சியங்கள் பல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் ஈடுபாடு. இவர்கள் கனவு ஏழைகள் உள்ளத்தில் குடியிருத்தல் ஒன்றேதான்.

# பேராசைப் பேய்

செல்வமோகம்! பேராசைப் பித்து! நஞ்சின் வீரம்! இவைகளில் கொடிதெது? ஈகையிற் சிறந்த தர்ம சாமிக் கவுண்டருக்கு, கோயமுத்தூர் ஜில்லாவில் அநேக பாகங்களில் உற்றார் உறவினர் இருந்த போதிலும் அவருடன் கூடப்பிறந்த செல்லக்காள் என்று ஒரு சகோதரியும் இருந்தாள். அவள் தன் அண்ணனைக் காட்டிலும் சிறந்த தனவந்தரான ரங்கப்பம்பாளையம் வீரப்ப கவுண்டருக்கு வாழ்க்கைப்பட்டாள். ஒரு ஆண் மகவையும் பெற்றெடுத்தாள். திரிபுரசுந்தரன் என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தாள்.

தன் அண்ணனுக்கு மக்கட்பேறில்லையே யென்று சகோதரி வருத்தப்படுவதற்குப் பதிலாக ஆனந்தத்தில் ஆழ்ந்தாள். தப்பித் தவறிக் குழந்தைப்பேறு கிடைத்து விட்டால் அண்ணன் சொத்தில் தனக்குள்ள உரிமை போய் விடுமே என்று சதா கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். கோயில் குளங்களுக்குச் சென்று, தன் அண்ணனுக்குக் குழந்தைப் பேறு கொடுத்தருளக் கூடாதென்று இறைவனை வேண்டினாள். தன் அண்ணன் புத்திரபாக்யமில்லாமல், வார்சு அற்றவனாய் விண்ணுலகேகினால், ஆஸ்தி முழுமையும் தன் கைவசப்படும். தங்கத்தாலும், வைரத்தாலும் ஆகிய ஆபரணங்களை தெய்வங்களுக்குச் சமர்ப்பணம் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

மந்திர மாயக்காரர்களையும், ஆரூடம்பார்க்கும் ஜோதிடர்களையும் பல பாகங்களினின்றும் தன் விடுதிக்குத் தருவித்து, தன் எதிர்கால நிலையை உள்ளபடி உணர்த்தும்படி வேண்டினாள். மூடர்களை முழு மூடர்களாக்கும்

இத்தனிப்பட்ட கூட்டத்தினர் செல்லக்காள், செல்வத்தில் சிறந்தவளாகும் காலம் நெருங்கி விட்டதென்று சொல்லி அவளைக் குளிர்வித்துத் தங்களுக்கு வேண்டிய பரிசுகள் பெற்றேகினர்.

செல்லக்காளின் கணவர் வீரப்ப கவுண்டர் பெயருக்கேற்ற வீரம் படைத்தவரல்ல. மிகவும் கோழை; பயந்த சுபாவமுடையவர். பெண்ணுலகில் தன் மனைவியின் திறமைக்கு மீறியவர் யாருமில்லை என்று மனக்கோட்டை கட்டும் மன்மதசிகாமணி. மனைவி சொல்லுக்கு மீறி நடக்கச் சக்தியற்றவ ராயிருந்தார். கவுண்டர் தான் யதேச்சையாக ஒன்றும் செய்யாமல், மனைவியின் மந்திரோபதேசத்தின்படி நடக்கக் கட்டுப்பட்டவர். தப்பித் தவறிக் கவுண்டர் தன் சொந்தப் பொறுப்பில் ஏதேனும் செய்துவிடின், அம்மையார் திரிசூலம் ஏந்தித் துஷ்டர்களை அழித்த பராசக்தியைப் போல், தன் வெண்சாமரையை ஏந்திக் கணவனைத் தாக்க எத்தனிப்பாள். தானதர்ம கைங்கரியங்களுக்கும் இத்தம்பதிகளுக்கும் வெகு தூரம்.

இத்தகையோர் இல்லத்துக்கு உற்றார் உறவினர் வருவதே கிடையாது. ஏதேனும் சில துரதிர்ஷ்டமுள்ள ஆத்மாக்கள் வீடுதேடி நுழையின், தங்களுக்குச் செல்லக்காள் சூட்டும் பட்டங்களையும், வரவேற்புபசாரங்களையும், பார்த்துச் சொல்லாமல் கம்பி நீட்டி விடுவார்கள். செல்லக்காள் மட்டும் தனக்கிருப்பது போதாதென்று, தன் அண்ணன் வீட்டுக்கு அடிக்கடி சென்று, தனக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் 'சுமட்டிக் கொண்டு' வருவாள். தர்மசாமிக் கவுண்டரும் சகோதரவாஞ்சையால், சகோதரி விரும்பிய வஸ்துக்களைப் போதுமென்ற மட்டும் கொடுத்து வந்தார்.

இவ்வுலகில் செல்லக்காளைப் போல் அநேக பிசாசு அக்காக்கள் பேராசைப் பித்துக் கொண்டு குடும்ப

க்ஷேமங்களைக் குலைப்பதற்கென குழுமி யிருக்கின்றனர். தாம் சம்பாதித்துப் பாதுகாக்கும் பணம் பாதாளத்திற்குத் தம்முடன் வராதென்று நினையாப் பிடாரிகள். 'அறம் செய விரும்பு' என்னும் ஆதி மூதுரையைக் கேட்டறியா மூடங்கள்!

இத்தம்பதிகளின் செல்வக்குமரன் திரிபுரசுந்தரனுக்கு வயது ஐந்து ஆகியும், 'அம்மா! அப்பா!' என்று சரிவர உச்சரிக்கச் சக்தியற்றவனு யிருந்தான். குழந்தையின் அழகைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. குழந்தையைச் சரிவரப் பாதுகாத்து வளர்க்காததால் அது சதா நோய்வாய்ப் பட்டிருந்தது. குழந்தையின் வளர்ச்சிக்கேற்ற ஆகாரத்தைக் காலாகாலங்களில் கொடுக்காததால், குழந்தையின் உடல் வளர்ச்சியில் குன்றுதலேற்பட்டது. பணப்பித்துத் தலைக்கேறி வெறிபிடித் தலைந்த தம்பதிகளுக்குக் குழந்தையைக் கவனிக்க அவகாசம் ஏற்படவில்லை போலும்!

செல்வத்தைச் சேகரித்துத் தாங்களும் அநுபவியாமல், பிறருக்கும் கொடுக்காமல் தங்களைத் தாங்களே குபேரப் பிரபுக்கள் ஆக்கிக்கொள்ளும் சீமான்கள் நம் நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுபவர்களே யாவார்கள். வீரப்ப கவுண்டரைப் போன்றவர்களிடம் பணம் பதுங்கிக் கிடப்பது மக்கள் செய்த பாபமாகும்.

## ஈகையும் வறுமையும்

ரங்கப்பம்பாளையம் என்னும் கிராமத்துக்குச் சுமார் பன்னிரண்டு மைல் தூரத்தில் செல்லப்பம்பாளையம் என்னும் பெயர் கொண்ட மற்றொரு கிராமம் இருக்கிறது. இவ்வூரில் ராமசாமிக் கவுண்டர் என்னும் ஒரு வேளாளக் கவுண்டர் புகையிலை வியாபாரத்தில் ஏராளமான பணம் சம்பாதித்துத் தன்மனைவி வள்ளியக்காளுடன் இன்புற்று வாழ்ந்து வந்தார். இத்தம்பதிகளுக்குக் கோயில் குளம் போகாமலே பிறந்த நடராஜன் பன்னிரண்டு வயது தான் என்றாலும் சூட்டிப்புட னிருந்தான். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த இப் பாலகனுக்குப் பெற்றோர்கள் 'இளமையில் கல்' என்னும் வாக்குப்படி, தக்கவயதில் பாடசாலைக் கனுப்பி, சிறந்த முறையில் வித்தியாப்பியாசமும் செய்து நல்ல முறையில் வளர்த்து வந்தனர்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப நடராஜனும் தன் ஆரம்பக்கல்வியை ஆர்வத்துடன் கற்றுத்தன் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பன்முறை புகழ்ந்து பேச செல்வக் குமரனாக வளர்ந்து வந்தான்.

வயதாக ஆக மைந்தனின் நுண்ணறிவும் வளரத் தொடங்கியது. வயதுக்கேற்ற வளர்ச்சி. பருவகாலத்திற்கேற்ற உடல் வலிமை. பிணியறியாப் பேதை; ஆசையின் மிகுதியால் அமுதூட்டி ஊட்டிப் பெற்றோர்களால் சீராக வளர்ந்து வந்தான். பரந்து விசாலமான நெற்றியையும் அழகிய கண்களையும் யாரும் பல முறை பார்க்க ஆசைப்படுவார்கள். நாள் தவறாமல் திருஷ்டி கழிக்காவிட்டால் வள்ளியக்காளுக்குத் தூக்கம் வராது.

ராமசாமிக் கவுண்டர், தானதர்ம கைங்கரியங்களில் தர்மசாமிக் கவுண்டரைக்காட்டிலும் ஒரு கை உயர்ந்தவர் என்றே சொல்லவேண்டும். பிறர் பசித்திருக்கத் தாம் உண்டு வாழச் சகியாதவர். சாதிமத பேதமின்றித் தம்மை அண்டினோர்களை ஆதரிக்கும் ஆத்மா. தம்மைப் போல பிறரையும் நினைக்கும் பரமபுருஷர். துரதிர்ஷ்டமுள்ள தம் பந்துக்களுக்கு வேண்டியமட்டும் பண உதவி செய்து, ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சம்பளம் கொடுத்துக் கல்விகற்கச் செய்தார்.

பாத்திரமறிந்து பிச்சை இடாததாலும், அளவுக்கு மீறித் தானதர்மக் கைங்கரியங்களில் ஈடுபட்டதாலும், தம் வியாபாரத்தில் சரிவரக் கவனத்தைச் செலுத்தாத தாலும், கவுண்டர் நாளுக்கு நாள் கடன்காரர்களின் ஆளு கைக்குட்பட்டார். தம் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டுத் தம்வியாபார வரவு செலவு, கணக்குகளைக் கண்காணித்து வந்த தம் பந்துக்கள், கவுண்டரின் உதார குணத்தை உதறித் தள்ளிவிட்டு, கவுண்டரை ஆண்டி ஆக்கி தாம் மேன்மையாக வாழும் மேலான கைங்கரியங்களில் மும் முரமாகத் தம் கவனத்தைச் செலுத்தி வந்தனர். சூது வாது அறியாத கவுண்டருக்கு தம் உண்மையான நிலை, தெளிவுறத் தெரிந்தபின், செய்வதின்ன தென்று தெரியா மல் திகைத்தார். தம்முடன் நெருங்கிப் பழகி, கொஞ்சிக் குலாவிக் கூத்தடித்த லேவாதேவி அண்ணன்மார்கள் கடனைத் தீர்க்காவிடின் சிறைவாசத்துக்குத் தயார் செய்து கொள்ளும் என்று தம் தம்பிக்கு தயவு தாட்சண்யம் இல்லாமல் சொல்லிவிட்டனர்.

கடன்காரக் கவுண்டர் தம் நிலபுலன்களை விற்று, கூடியமட்டும் தம் கடனைச் செலுத்த முயன்றும் தம்மை யறியாமல் தம்மை நெருக்கிய அளவுக்கு மீறிய கடனை

அடைக்க முடியவில்லை. மானமிழந்து வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்தார். கவுண்டரை ஆபத்தினின்றும் நீக்கும் பொருட்டு, காலன் கடுமையான க்ஷயரோகத்தைக் கொடுத்து அவரைத் தன் வசமாக்கிக் கொண்டான். கொடைவள்ளலாக வாழ்ந்த ராமசாமிக் கவுண்டர் தம் மனைவி வள்ளியக்காளையும், அருமை மைந்தன் நடராஜனையும், ஓட்டாண்டிகளாக விட்டு விண்ணுலகேகினார்.

கணவனைப்போல் மானம் மரியாதைக்குக் கட்டுப் பட்டு வாழ்ந்த வள்ளியக்காளும், மீதியிருந்த நிலபுலங்களையும் விற்றுத் தனக்குத் தெரிந்த தெரியாத கடன்காரர்களுக்கெல்லாம், இல்லையென்று சொல்லாமல் பங்கிடிட்டுக் கொடுத்து விட்டு, உள்ளூரில் வாழமனமில்லாதவளாய்த், தன்மைந்தன் நடராஜனுடன் வெளிக் கிளம்பினாள்.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற மொழி பழமொழியேயன்றிக் காரியத்திற்கு உதவா மொழி! கலிகாலத் தர்மத்திற்குப் பொருத்தமில்லா மொழி. 'உப்பிட்டவரை உடனே உதறித்தள்' என்ற லௌகீக சம்பிரதாயத்தில் ஈடுபட்ட நம் ராமசாமிக் கவுண்டரின் பந்துக்கள் கவுண்டர் காலமானதற்கும் வருத்தப்படவில்லை; அவர் மனைவியின் வேற்றூர் பிரயாணத்திற்கும் துக்கப்படவில்லை.

செய்நன்றி மறந்து, மானத்தையும் மரியாதையையும் காற்றிலே பறக்கவிட்டு, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நம்பிக்கையில் நாட்டம் கொண்டு வாழ்பவர்களின் ஆடல் பாடல்கள் நிலையற்றவை. தர்மத்தில் சாந்தியும், ஆனந்தமும் அடைந்து வாழ்பவர்களின் வாழ்க்கை, மாண்டபின்னும், மண்ணுலகில் நிரந்தரமாக நிற்கும். இவர்களே பிறப்பு இறப்பால் பீடிக்கப் படாத புண்யாத்மாக்கள். உலகம் போற்றும் உத்தமர்கள்.

## பூ மலர்ந்தது

ஒரு நாள் மாலைப்பொழுதினிலே தர்மசாமிக் கவுண்டர் ஆனந்தத்தில் ஆழ்ந்தவராய் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார். ஆனந்தத்திற்குத் தம் மனைவி திலகக்காள் பூரண கர்ப்பிணியாயிருப்பதே காரணம். இச்சமயத்தில் தம் சொத்துச் சுதந்தரங்களை இழந்து, கூலிவேலை செய்தேனும் அயலூரில் மானமரியாதையுடன் வாழ்வதென்று ஊர் ஊராய்த் தன் பாலகன் நடராஜனுடன் திரிந்து வந்த, வள்ளியக்காள் அவ்வழியே வந்தாள்.

கவுண்டர் வள்ளியக்காளைச் சந்திக்க நேர்ந்தது. வள்ளியக்காள் தன் வரலாற்றைக் கூறினாள். அடைக்கலம் புகுந்த தங்களை ஆதரிக்கும்படி வேண்டிக் கொண்டாள்.

உயர் குடும்பத்தில் பிறந்து, உயர் நிலையில் வாழ்ந்து, பிறருக்கு உபகாரம் செய்வதே வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட பெண்ணிடம் தர்மசாமிக் கவுண்டர் பரிதாபம் கொண்டு, தம்பூரண ஆதரவை அளிப்பதாக வாக்களித்தார். தன் மனைவி திலகக்காளிடம் அவர்களை அழைத்துப்போய் அவர்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் தாமதமின்றிச் செய்யவும் கட்டளையிட்டார். பெண் மக்களிருவரும் அக்காள் தங்கை வரிசை கொண்டாடவும் ஆரம்பித்து விட்டனர். நடராஜன் எல்லோருக்கும் குழந்தையாகி விட்டான்.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்,' 'தர்மம் தலை காக்கும்' என்னும் மூதுரைகள் வள்ளியக்காள் விஷயத்தில் மெய்மொழிகளாக விளங்கின. அச்சமின்றித்

தமக்கு அடைக்கலமும் கொடுத்து, ஆதரவையும் அளிப் பதாக வாக்களித்த தம்பதிகளுக்கு வள்ளியக்காள் தன் மனப்பூர்வமான அன்பைத் தெரிவித்தாள்.

அடைக்கலம் புகுந்த வீட்டில் வள்ளியக்காள் அதி காரம் புரியவில்லை உதவி செய்தவர்களுக்குப் பிரதியுப காரம் செய்யும் புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டாள். பூரண கர்ப்பிணி திலகக்காளுக்குப் பூரண உதவி செய் தாள். தன் மனைவியும், வள்ளியக்காளும் அன்னியோன் னியமாய் வாழ்வதைப்பார்த்து தர்மசாமிக் கவுண்டர் அள விலா மகிழ்ச்சி கொண்டார்.

எல்லாம் வல்ல இறைவனருளாலும் வள்ளியக் காளின் விடாமுயற்சியாலும் நாளடைவில் திலகக்காள் யாதொரு கஷ்டமுமின்றி ஒரு பெண்மகவை ஈன்றெடுத் தாள்.

ஒரு நல்ல நாளில் குழந்தைக்கு கண்ணம்மாள் எனப் பெயரிட்டனர். செல்லக்காளும் அவள் கணவனும் நாலோடொன்ருக விருந்தில் கலந்து கொண்டார்கள்.

தர்மசாமிக் கவுண்டர் நடராஜனை தன் சொந்த மக னைப்போல வளர்த்து வந்தார். ஊரார் அனைவரும் கவுண் டரைப் போலவே நடராஜனை விரும்பினர். அந்த அன் புக் கெல்லாம் அவன் புன்னகையே பதில் சொல்லும்.

## நல்ல காலம்

தர்மசாமிக் கவுண்டர் வீட்டு வேலையாட்கள் நடராஜனை எஜமானர் குழந்தையாகவே பாவித்து மிகவும் மரியாதையுடன் நடந்து வந்தனர். பொதுவாகக் கூறுமிடத்து நடராஜன் தன் வயதிற்கு மேலான அறிவுடையவனாய் விளங்கினான்.

ரங்கப்பம்பாளையப் பள்ளிக்கூடத்தில் எல்லா வகுப்புகளிலும் முதன்மையாகத் தேறி முடித்தான். கணித சாஸ்திரத்திலும், ஆங்கில பாஷையிலும் தனக்குள்ள அபரிமிதமான ஞானத்தை எல்லோரும் வியக்கும்படி விளக்கிக் காட்டினான். கல்வியறிவை செழுமைப்படுத்தும் பொருட்டு தர்மசாமிக் கவுண்டர் தம் ஊருக்குச் சுமார் பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள ஈரோட்டுக்கு மெட்ரிகுலேஷன் படிப்பிற்கு அனுப்புவதாகத் தீர்மானித்தார்.

ஒரு நல்ல நாளிலே கவுண்டர் நடராஜனுடன் ஈரோட்டிற்குச் சென்று அங்குள்ள மிஷின் பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்பில் சேர்த்தார். அப்பள்ளித் தலைமை உபாத்தியாயர் மிஸ்டர் ஹெக்டர் துரையவர்கள் இந்திய மாணாக்கர்கள் கல்வி விஷயங்களில் மிகவும் சிரத்தையெடுத்துக் கொண்டதுமல்லாமல், ஏழைக் குழந்தைகள் மேல் படிப்பிற்குப் போக விரும்பி பணக்கஷ்டத்தால் போக முடியாமலிருந்தால், மேல் அதிகாரிகளுக்கு எழுதி இலவசப் படிப்பிற்குச் சிபார்சும் செய்வார்.

நடராஜனைப் பார்த்ததுமுதலே, பையன் மேலான பதவிக்கு வரத் தகுதியுள்ளவன் என்று ஊகித்துக் கொண்டு தம் விசேஷ கவனத்தைப் பையன்பால் செலுத்த ஆரம்பித்தார். நடராஜனும் தன் பாடங்களை மிகவும்

கவனமாகவும் ஊக்கமாகவும் படித்து, பள்ளியின் இடைக் காலப் பரீட்சைகளில் வகுப்பிலே எல்லாப் பாடங்களி லும் முதன்மையாக நின்றான். தன் பள்ளிப்பாடங்களைப் பரீட்சையில் தேறுவதற்காகப் படித்தது மன்றி, விசால மான நோக்கத்தையும் பரந்த அறிவையும் பெரும் பொருட்டு தினசரிப் பத்திரிகைகளைத் தவறாமல் படித்து வந்தான். பத்திரிகைகளில் தோன்றிய தன் அறிவுக்கு எட்டாத கட்டுரைகளைத் தன் உபாத்தியாயர்கள் மூல மாகத் தெரிந்து கொண்டான்.

நடராஜன் மற்ற மாணவர்களைப் போல் இரவும் பகலும் ஓயாமல் தன் பாடங்களைத் திருப்பித் திருப்பிப் படித்து மறு நாட்காலையில் படித்ததை மறக்கும் இனத் தைச் சேர்ந்தவன் அல்ல. ஒரு முறை படித்தால் விஷயங் களைக் கிரகிக்கும் ஞான சக்தியுள்ள இளைஞன். தேகாப்பி யாச விஷயங்களிலும் விசேஷ கவனத்தைச் செலுத்திய தால் மிகக் கட்டுமஸ்தான தேகாரோக்கிய முள்ளவனாக ஆகியது மன்றி, பள்ளியில் நடந்த விளையாட்டுப் பந்தயங் களில் முதற்பரிசும் பெற்றான். ஒரு மாணாக்கன் கல்வி யிலும், ஓடி ஆடும் விளையாட்டுக்களிலும் முதன்மையாக ஒரு பாடசாலையில் இருப்பது அபூர்வம்.

நடராஜன் பள்ளியில் சேர்ந்த ஒரு வருஷத்தில் உபாத் தியாயர்களின் நன் மதிப்பையும், தன் சகோதர மாணவர் களின் வாஞ்சையையும் மிக எளிதில் பெற்று எல்லோரா லும் போற்றப்பட்டான். கடினமானதும் கரடு முரடான துமான விஷயங்களை மிகச் சுலபமாகக் கிரகிக்கும் ஆற்ற லுள்ள இவ்விளைஞன் சகோதர மாணவர்களுக்கு எளிதில் விஷயங்களைத் தெளிவுபடுத்தி உதவி புரிந்து வந்தான்.

பொறாமை, சுயநலம் என்ற இரு தீய குணங்கள் பொதுவாக மக்கள் எல்லோரிடமும் குடி கொண்டிருக் கிறது. இக் குணங்கள் உற்பத்தியாகி வளர்ச்சி பெறு

வது குறிப்பாக குழந்தைகள் பாடசாலைகளில் கல்விகற்கும் காலத்திலேதான். இக்கால முதற்கொண்டே பொருமை, சுயநலம் என்ற தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்ட நம் இளைஞர்கள் ஒருவர்க்கொருவர் பிறர் அபிவிருத்தியில் கவலை எடுத்துக் கொள்ளாமல் தாங்கள் முன்னேறும் முறைகளில் அதிக சிரத்தையெடுத்துக் கொள்ளுகின்றனர்.

நடராஜனோ எனின் தான் கற்றதைப் பிறருக்கும் கற்பித்து மகிழும் பெருநோக்கு உடையவனாக இருந்தான்.

நடராஜனைத் தன் குழந்தைகளில் ஒருவனாகப் பாவித்து வந்த மிஸ்டர் ஹெக்டர் துரையவர்கள், மைந்தன் மிக உயர்ந்த பதவிக்கு வரத் தகுதி யுள்ளவனென்று எண்ணியதுமல்லாமல் தாமே அவனை மேல் படிப்பிற்காக சீமைக்கு அனுப்பவேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்வதென்றும் தீர்மானித்தார்.

மெட்ரிகுலேஷன் பரீட்சையும் முடிவு பெற்றது. அவ் வருஷத்திய கேள்விப் பத்திரங்கள் மிகக் கடினமாயிருந்ததால் நடராஜன் சென்னை மாகாணத்திலேயே முதல் மாணவனாகத் தேறுவதில் ஐயமில்லை என்று எல்லோரும் தீர்மானித்தனர். நடராஜன் ஹெக்டர் துரையவர்களின் அறைக்கு விடை பெற்றுக்கொள்வதற்காக வந்த பொழுது, துரையவர்கள் அவனை ஆசீர்வதித்து தாம் அவனை மேல்படிப்பிற்காக சீமைக்கு அனுப்ப முயற்சி செய்வதாகவும் சொல்லி அனுப்பி வைத்தார். நடராஜனைப் போற்றிப் பாதுகாத்து வந்த ஆசிரியர்கள் மிகுந்த அன்பு பாராட்டி அவனுக்கு ஒரு தேனீர் விருந்தளித்து உபசரித்தனர்.

## பொருமைத் தீ

தன் அண்ணன் மகள் கண்ணம்மாள் சீரும் சிறப்பு மாய் வளர்வதைக் கண்டு செல்லக்காள் மிகுந்த பொருமை கொண்டாள். தனது சகோதரனின் பெருஞ் செல்வம் தனக்குக் கிடைப்பதற்கு இடையூருய் வந்த கண்ணம் மாளை ஒழிப்பதற்கு மந்திர தந்திர உதவிகள் அனைத்தை யும் நாடினுள். ஆனுல் அவைகள் ஒன்றும் பலிக்காமல் போகவே இவைகள் தன்னைப்போன்ற அறிவில்லாதவர் களை ஏமாற்றும் பொருட்டு சில சுயநலவாதிகளால் சிருஷ் டிக்கப்பட்ட சாஸ்திரங்கள் என்று முடிவுக்கு வந்து அவை களில் தனக்குள்ள நம்பிக்கையை இழந்தாள். அறியா மையால் அறிவிழந்த பலர் அனுதினமும் கடவுளைத் தூஷிப்பதை நாம் அநேக முறை கேட்டிருக்கிருேம். இக் கூட்டத்தினரை நொந்து கொள்வதைக் காட்டிலும் இவர் கள் மேல் பரிதாபம் கொள்வதே மேல். கடவுள் எப் பொழுதும் தர்மத்தின் பக்கம் நிற்பார் என மானிடர்கள் உணர்வரேல் இவ்வுலகில் நியாயஸ்தலங்களுக்கும் உலக மகாயுத்தங்களுக்கும் இடமே இல்லையல்லவா?

தனது அருந்தவப் புதல்வன் திரிபுர சுந்தரன் பதி னைந்து வயதடைந்தும் சரியாகப் பேசினபாடில்லை. கல்வி யின் பொருட்டு மிகச் சிரமப்பட்டு செலவு செய்து பார்த் தும், வாணி திரிபுரசுந்தரன் மேல் தன் கடாட்சத்தைச் செலுத்த மறுத்து விட்டாள். விஷமங்கள் செய்து, பிற ருக்குத் துன்பத்தை விளைவித்து அதனுல் மகிழ்ச்சி கொள் ளும் திருக் குழந்தை கல்வி கற்பதில் கவலை கொள்ள வில்லை. கருத்து உருண்டை வடிவம் கொண்ட திரிபுர னுக்குக் கடவுளைத் தூஷிப்பதில் பரமானந்தம். எப்படித் தன் அன்னை புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடவாளோ,

அதேபோல் மைந்தன் தன் தாய் தந்தையர் இருவருக்கும் கீழ்ப்படிந்து நடவாமல் வீட்டில் சர்வாதிகாரியாய், தன் மனம்போனபடி காலத்தைக் கழித்து வந்தான். பள்ளிக்கு மாதம் ஒரு முறை சென்றால் அது ஓர் புனித தினமாகப் பெற்றோர்களால் கருதப்பட்டு வந்தது. உபாத்தியாயர்களைத் திட்டுவதும், பள்ளி மாணவர்களை ஹிம்சிப்பதுவும்தான் வித்தியாப்பியாசத்தின் அர்த்தம் என்பது அவன் கொள்கை. எனவே பள்ளியில் இவன் எல்லோராலும் துஷ்ட சிகாமணி என்றும் பழிகாரச் சுந்தரன் என்றும் அழைக்கப்பட்டு வந்தான். மூடனாகிய திரிபுரசுந்தரன், தன் வீரத்தையும் சாமர்த்தியத்தையும் புகழ்ந்து இத்தகைய பட்டப் பெயர்களிட்டு தன்னை அழைக்கிறார்கள் என்று நினைத்தான்.

இத்தகைய பிரகஸ்பதிக்குத் தம்பதிகள் தங்கள் அளவு கடந்த அன்பையும் ஆதரவையும் காட்டியதுமல்லாமல், தம்பி தினம் தோறும் புரியும் லீலாவிநோதங்களுக்கெல்லாம் சபாஷ்போட்டு தட்டிக்கொடுத்தும் வந்தனர். பெற்றோர்களால் அடக்கி வைத்து வளர்க்காத ஆண் குழந்தை சுயேச்சையான போக்கிரிப் பயலாய் மாறி வளர்ந்து வந்தது.

பொறுமைப் பிணியால் பீடிக்கப்பட்டவர்கள் தாம் விரும்பும் காரியங்களைச் சாதிப்பதற்குப் பல உபாயங்களை நாடுவர். செயலால் காரியத்தைச் சாதித்துக் கொள்ள இவர்களுக்குச் சக்தி கிடையாது. தங்கள் முயற்சியில் ஒரு முறைதோல்வி அடைந்தால் மனத் தளர்வையும் சோர்வையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், விடா முயற்சியின் உதவியால் திரும்பத் திரும்ப தங்கள் எண்ணங்களை ஆட்டத்திற்கும் ஓட்டத்திற்கும் விடுவது வழக்கம். செல்லக்காளும் தன் கோரிக்கைக்கு விரோதமாகக்

குழந்தை பிறந்ததைக் குறித்துச் சில தினங்கள் மட்டுமே உள்ளூர வருத்தம் கொண்டாள். பின்பு மேற்கொண்டு தான் செய்ய விருக்கும் காரியங்களைக் குறித்து யோசிக்கலானாள். தன் அண்ணன் சொத்து முழுவதும் தன் குடும்பத்தையே சேரும் பொருட்டு, கண்ணம்மாளை தன் மகனுக்கு மனைவியாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

## சங்கீத ஆர்வம்

தர்மசாமிக் கவுண்டரும் அவரது மனைவி திலகக் காளும் தங்கள் புதல்வி கண்ணம்மாளை அழகுக்கு அழகு செய்து அருமையாக வளர்த்து, சகல வித்தியாப்பியாசங் களையும் தம் வீட்டிலேயே கற்றுக் கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளையும் செய்து வந்தனர். கண்ணம்மாளுக்கு வயது பன்னிரண்டு; எழில்பூத்த இளமங்கையாக விளங் கினாள். ஆரம்பக் கல்வியை அதிசிரத்தையுடனும் முயற் சியுடனும் கற்று வந்ததால் தக்க வயதிலே சகலகலா வாணியாய் விளங்குதற்குரிய அறிகுறிகள் எல்லாம் அவளிடம் தோன்றின. மற்றெல்லாக் கல்வியையும்விட, சங்கீதத்தில் தனக்குள்ள அபார விருப்பத்தைத் தன் தந்தையிடம் அடிக்கடி தெரிவித்ததால், தந்தையும் தன் மகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தஞ் சாவூரிலிருந்து பைரவ சுந்தரன் என்னும் பெயர் பெற்ற ஒரு சங்கீத உபாத்தியாயரைத் தருவித்துச் சங்கீதம் கற்கச் செய்தார்.

கண்ணம்மாள் கோகில கானத்தோடு பிறந்தவள். அலை மேல் அலை வந்து மோதுவது போன்ற இனிய சாரீ ரம். கேட்கக் கேட்கத் தெவிட்டாத தெள்ளமுதக்குரல். சங்கீத உபாத்தியாயரின் திறமையாலும் கலைவாணியின் கடாட்சத்தாலும், குழந்தையினிடம் சம்பூரண நட்புக் கொண்டு விட்டது இசை ஞானம்! தியாகய்யர் கீர்த்தனை களில் ஐம்பதும், தமிழ்ப்பதங்கள் நாற்பதும் மிகக் கஷ்ட மின்றி சங்கீத சிட்சை ஆரம்பித்த ஒரு வருஷத்துக்குள் கண்ணம்மாள் மனப்பாடம் செய்து கொண்டாள்.

சங்கீதத்திற்கு 'அடாமிக் பாம்மை' விட அரிய சக்தி யுண்டு. 'அடாமிக்பாம்' அழிவிற்கறிகுறி. சங்கீதமோ

வென்றால் உள்ள முருக்கும் இன்பத்திற்கறிகுறி. தன வந்தர்கள், ஏழைகள், பாமரர்கள், பண்டிதர்கள் என்ற வித்தியாசமின்றி சகலருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கும் சக்திவாய்ந்தது சங்கீதம். தீராப்பிணியைத் தீர்க்கும் திருமருந்து. இன்னும் வைத்திய சாஸ்திரத்தில் சற்று சிந்தையைச் செலுத்திஞல், இசைக்கலையின் அருமை பெருமை நன்கு விளங்கும். வைத்திய ரத்தினங்கள் சங்கீதத்தை ஔடதத்தோடு சேர்க்கவும் பின்வாங்க மாட்டார்கள்!

மனக்கவலையை மாற்றவல்ல சங்கீதத்தை அனுதினமும் கற்று ஆத்மசாந்தியையும் அன்பையும் கொண்டாள் கண்ணம்மாள். பகவானின் கல்யாண குணங்களைப் போற்றிப் போற்றிப்பாடி அகமகிழ்ந்தாள். இன்பங்களிலெல்லாம் மேலான பேரின்பம் சங்கீதத்துள் அடங்கியிருக்கிறது. ஊன், உயிர் சர்வமும் சங்கீதம். கட்டுக்கடங்காமல் எல்லை மீறிப்போகுமிடங்களிலெல்லாம் தன் பக்த கோடிகளை ஆசீர்வதித்து ஆனந்தத்தில் ஆழ்த்தி வைத்து நித்தியத்தை நிலை நாட்டும் சக்திவாய்ந்தது, சங்கீதம் என்பதில் என்ன சந்தேகம்? அவளது இனிய இசையைக் கேட்போர், பசியறியார், பந்தபாசமறியார், பிணி அறியார், தம்மையே அறியாமல் மெய் மறந்தோராவர்! உள்ளத்து உணர்ச்சிபாவம் இதய வெளியீடாகப் பரிணமித்தது. மலர்குலுங்குவதுபோல் இருக்கும் அவள் எடுக்கும்பாணி. நட்சத்திரங்களைப் பதித்தது போல் சகலரும் தான் பாடும் பாடல்களைச் சுலபமாக அர்த்தம் புரிந்துகொள்ளுமாறு தெளிவுறப் பாடுவாள். துளிக்கூட சங்கோஜமோ சங்கடமோ, இன்றிப் பாடுவாள். பிறருக்கு அர்த்தம் புரியுமாறு எளிய நடையில், இசையோடு பாடியதால் இன்னிசையைக் கேட்டோர் பிருந்தாவனக் கண்ணனே குங்கும வாய்திறந்து கானமழை பெய்கிருனே என்று அதிசயிப்பர்.

'தங்கள் பெண்ணுக்கும் சங்கீதப்பயிற்சி உண்டு' என்று சம்பந்திமார்களைத் திருப்தி செய்வதின் பொருட்டுச் சில பெற்றோர்கள் சில நாட்களுக்கு மட்டும், சிக்கனச் செலவில் சங்கீத ஞானமே இல்லாத உபாத்தியாயர்களைக் கொண்டு தங்கள் பெண்களுக்குச் சங்கீத சிட்சை செய்து வைக்கின்றனர். இத்தகைய மகானுபவர்கள் சம்பந்திமார்களையும், மாப்பிள்ளைமார்களையும் ஏமாற்றுவதற்குப் பதிலாகத் தாமே இறுதியில் ஏமாற்றமடைகின்றனர். ஏனென்றால், கலைகளிற் சிறந்த சங்கீதக்கலை எளிதில் கற்கக் கூடியதன்று. அதிலும் அரை குறையாகப் படித்த சங்கீதபாகவத சிகாமணிகள் சங்கீதக்கலையைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கச் சற்றும் அருகதையற்றவர்கள். இம்மாதிரி சிட்சை பெற்றுத் தைரியமாகச் சபைகளில் தங்கள் கானத்தைப் பொழியும் பெண்மணிகளின் பாடல்களைக் கேட்டால் சங்கீதத்தில் பற்றுதலுள்ளவர்களுக்கும் அதன் மேல் வெறுப்பேற்பட்டு சபாமண்டபங்களிலிருந்து வெளியேறிக் காற்று வாங்க வெளியில் உலவுவதில் வியப்பொன்றுமில்லை!

சங்கீதக்கலையைப் பெண்மணிகள்தான் விருத்தி செய்யக் கடமைப் பட்டவர்கள். சங்கீதத்துக்குப் புத்துயிர் அளித்தவர்கள், அளிக்கக்கூடியவர்கள் நம் நாட்டுப் பெண்மணிகள் தான். தக்கமுறையில் சங்கீத ஞானமுள்ள பண்டிதர்களின் உதவியால், கண்ணம்மாளைப் போல் ஊக்கத்துடனும், சிரத்தையுடனும் கற்றுப்பாடினால் எல்லோரும் சுவைத்துத் திளைக்கும் அமுதத்தை அளித்தோராவார்கள்.

# காதலுக்குப் பேதமில்லை

தர்மசாமிக் கவுண்டரின் அருந்தவப்புதல்வி கண்ணம்மாள் சங்கீதத் திலகமாய் விளங்கித் தன் பெற்றோரையும் ஏனையோரையும் மகிழ்வித்ததுமல்லாமல், நாளுக்கு நாள் அழகுமிக்க சௌந்தர்யவதியாக வளர்ந்து வந்தாள். சூதுவாது இன்னதென்றறியாத இளமங்கை. மங்கையின் மனம் கோணுமல் இஷ்டப்பட்டுக் கேட்டவைகளையெல்லாம் பொருட் செலவைக் கவனியாமல் பெற்றோர்கள் வாங்கித் தந்தனர். விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணியக் கண்ணம்மாள் விரும்பியதில்லை. அன்னிய நாட்டுத் துணிமணிகளை பகிஷ்கரித்து உள் நாட்டுக் கைத்தறியால் நெசவு நெய்த ஆடைகளையே விரும்பினுள்.

சங்கீதப் பயிற்சியிலும் வீட்டு வேலைகளைக் கவனிப்பதிலுமே காலத்தைக் கழித்து வந்த இப்பெண்மணியின் அழகு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. நாட்டுப்புறத்தில் வாழ்ந்து, நல்ல காற்றையும் உடலுக் குறுதி தரும் மரக்கறி வஸ்துக்களையும் சாப்பிட்டு வந்ததின் பயனுய் சுகவீனம், வைத்திய சிகிச்சை என்பவைகள் இன்னதென்றே அறியாமல் வானத்திலே பூக்கும் புது வண்ணமுதமான வளர்பிறைச்சந்திரனைப்போல் வளர்ந்து வந்தாள்.

பருவகாலமங்கை யாதலால் பருவ காலத்திற்கேற்ற அங்க அவயவச் சின்னங்களெல்லாம் செவ்வனவே பொருந்தி யிருந்தன. வயதிற்கேற்ற வளர்ச்சியும் வளர்ச்சிக்கேற்ற தேகக்கட்டு முடையவள். காலைச் சூரியன் கரத்தால் மலர்ச்சி பெற்ற தாமரை போன்ற முக விலாசத்தினள். கருகரு வென்ற கண்கள் பார்ப்போரை மதிமயங்கச் செய்துவிடும்.

நடராஜனும், கண்ணம்மாளும் குழந்தைப் பருவத்தி லிருந்தே ஒருவரையொருவர் அரைக்கணமும் பிரியாம லிருந்தனர். கூடப்பிறந்த ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை கள் போல்வளர்ந்து வந்தனர். எனவே தன் அண்ணன் நடராஜன் தன்னை விட்டகன்று ஈரோட்டுக்குச் சென்றது கண்ணம்மாளுக்கு வருத்தத்தை அளித்தது. அண்ணன் என்று வருவான் என்று கண்ணம்மாள் எல்லோரையும் கேட்ட வண்ணமா யிருந்தாள்.

நடராஜனும் மெட்ரிகுலேஷன் பரீட்சையை முடித்துக்கொண்டு கோடைக்கால விடுமுறையின் பொருட்டு வீடுவந்து சேர்ந்தான். ஹெக்டர் துரையவர் கள் தர்மசாமிக் கவுண்டருக் கெழுதிய கடிதமொன்றில் நடராஜனைத் தாம் சீமைக்கு மேல்படிப்பின் பொருட்டு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாக எழுதியி ருந்ததை நடராஜனுக்குத் தெரிவித்து அபிப்பிராயத் தைக் கேட்டார். இதற்கு நடராஜன் கவுண்டரின் அபிப் பிராயப்படி நடக்கத் தயாரா யிருப்பதாக பதிலளித் தான்.

தன் தகப்பனுருக்கும் நடராஜனுக்கும் நடந்த சம்பா ஷணைகள் அனைத்தையும் கண்ணம்மாள் மறைவாகநின்று கேட்டுக் கொண்டிருந்தாள். அண்ணனின் உருவத்தில் அநேக மாறுதல்களைக் கண்டாள். அழகே உருவெடுத்து வந்த இளம் காளையைத்தான் அனுதினமும் கண் குளிரக் கண்டு ஆனந்தப்படும் காலம் நெருங்கி விட்டதென்று உளம் பூரித்தாள். அண்ணனிடம் பேச உவகை கொண் டாள்! கண்ணம்மாள், நடராஜனைப்பார்த்து, "ஏன் அண்ணு! எனக்கொரு கடிதமும் ஈரோட்டிலிருந்து எழுத வில்லை? எழுதினுல் உன் கௌரவம் குறைந்துவிடுமோ?" என்று கோபத்துடன் கேட்டாள்.

நடராஜனுக்கு சட்டென்று பேசத்தோன்றவில்லை. "நீ ஒன்றும் அறியாச் சின்னஞ் சிறுமியா யிருப்பா யென்று எழுதவில்லை. அதுஎன் தப்பிதம் தான், மன்னிக் கவும். இவ்வளவு பெரிய பெண்ணுகி இருப்பாய் என்று எனக்குத் தெரிந்திருந்தால் அவசியம், ஒன்றல்ல, நூறு கடிதங்கள் எழுதியிருப்பேன்" என்ருன்.

கண்ணம்மாள் உள்ளம் குளிர்ந்துவிட்டது. "வாய் நிறைய நீ சொன்னதே போதும் அண்ணு. என் வாயில் நீ விரலை வைத்தால், நான் நிச்சயமாய்க் கடிக்கும் பருவத்தை அடைந்து விட்டேன் என்னும் விஷயத்தை நீ அறிந்து கொண்டதைப் பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம். அதிருக்கட்டும். அப்பா, நீ இங் கிலீஷ் பாஷையில் கெட்டிக் காரனென்று அடிக்கடி எங் களிடம் சொல்லுகிருரே! அது உண்மையா"? என்ருள்.

"விளையாட்டாக அப்பா உங்களிடம் சொல்வதை நீங்கள் நம்பலாமோ!"

கண்ணம்மாள் பாடு சங்கடமாகி விட்டது. என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மேலும் கீழும் விழித் தாள்.

"நிஜம் பொய் என்பதை நானே அறிந்துகொள்கிறேன். நாளை முதற் கொண்டு எனக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதாகச் சொல்லு!"

"ஒரே ஒரு நிபந்தனையில் உனக்குக் கற்றுக் கொடுக் கத்தயார். நீ எனக்குச் சங்கீத உபாத்தியாயராக இருக்க வேண்டும். சரி என்று சொல்லேன்."

முதலில் நடராஜன் பேசட்டுமே என்று தயங்கித் தயங்கி நின்ருள். மனசில் ஊசலாடும் இனிய கனவுகளை லேசில் சொல்லிவிட முடிகிறதா?

கடைசியாக விருப்பத்திற்கேற்ற இந்த நிபந்தனைக் குட்பட்டாள். நடராஜன், கண்ணம்மாளைத் தன் மாணவியாக மாற்றி ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும் கைங்கரியத்தை ஆரம்பித்தான்! கள்ளம் கபடம் மாசு மறுவில்லாத இரு உள்ளங்களும் ஒன்றையொன்று விரும்பியது. இருவர் கண்களும் பேசாமல்ப் பேசித் தங்கள் ஆவலைத் தெரிவித்துக் கொண்டன. உதடுகளிரண்டும் உள்ள உவகையைப் பூரித்துக் காட்டின. இருவர் கைகளும் ஆலிங்கனத்திற்கு ஆயத்தமாயிருந்தன!

இத்தகைய அங்க உள்ள நெகிழ்வுக்கு மத்தியில் கற்பதா? கற்றுக் கொடுப்பதா? அல்லது காதலிப்பதா! தண்ணீரை விட ரத்தம் கடினமெனின், காதல் சகோதர பாவத்தை விடக் கடினமானது. எனவே நடராஜனும் கண்ணம்மாளும் தங்களுக்குள் உண்டாகும் மாறுதல்களை அறியாமல், உணராமல், அனுபவிக்காமல், காதலர்களாக மாறினர். காதலுக்குப் பேதமேது? பந்தமேது? இல்லைதான். காமக் கலப்பில்லாத உண்மைக் காதல் அழிவற்றது. பந்தபாசங்களால் கட்டுப்படாமல் கரைபுரண்டு நிற்கும் சக்தி வாய்ந்தது. சமூகக் கட்டுப்பாடுகளுக்கும், மனிதர்களால் சட்ட சபைகளில் நிறைவேற்றப்படும் நிபந்தனைகளுக்கும் நாமத்தைச் சாத்தும் சக்தி வாய்ந்தது. இந்திரலோக பதவியையும், மன்னர் பிரான் பதவியையும் ‘சீ’ என்று உதறித் தள்ளக் கூடியது. முள்ளின் மேல் நடந்து உண்மைக் காதலர்கள் இறுதியில் லட்சியத்தை அடைவர். இது அனுபவ உண்மை.

## அன்புள்ள மாமன்

நாட்கள் சில சென்றன. நடராஜனும், கண்ணம்மாளும் ஒருவரையொருவர் சற்றேனும் பிரியாமல் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகி வெகு சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்தனர். எதிர்பார்த்தபடி மிஷன் கல்லூரியின் தலைமை உபாத்தியாயர் மிஸ்டர் ஹெக்டர் துரையவர்கள் தர்மசாமிக் கவுண்டருக்கு நடராஜனைக் குறித்து ஒரு கடிதம் எழுதி யிருந்தார். அதில் அவர் நடராஜன் மேல்படிப்பிற்காகச் சீமைக்குச் செல்வதென்றால், இண்டர் மீடியட் பரீட்சையில் தேற வேண்டுவது அவசியமென்றும் அதற்காக அவனைத் திருச்சிறுப்பள்ளியிலுள்ள எஸ். பி. ஜீ. காலேஜில் சேர்க்கத் தாம் சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். இச் சமாச்சாரத்தைக் கேள்வியுற்ற கண்ணம்மாள் அடைந்த ஆனந்தத்திற் களவே இல்லை. யாருமறியாமல் மறைவான இடத்திற்குச் சென்று ஆடினாள், பாடினாள் தன்னை மறந்த லயத்தில் சும்மா உட்காரவும் செய்தாள். நடராஜன் கவுண்டரைப் பார்க்காததால் ஹெக்டர் துரையவர்களின் கடித சமாச்சாரத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. கண்ணம்மாள் மிகவும் சந்தோஷமாய் இருப்பதைக் கவனித்து வாயைக்கிளற ஆரம்பித்தான்.

"ஏது! இன்றைக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறாயே! பெரிய வீட்டுக்காரர்கள் யாரேனும் பெண் கேட்டுக் கடிதம் வந்திருக்கிறதோ?"

மனதை ஊசிகொண்டு குத்தும் கேள்வி அல்லவா அது?

"அவ்வித துக்ககரமான விஷயத்தைப் பற்றி கடிதம் வரவில்லை. இது உன்னைப் பொருத்த விஷயம். தற்சமயம்

நீ சீமைக்கு என்னை இங்கே தவிக்கவிட்டுப்போக முடியாதென்று உங்கள் உபாத்தியாயருக்கு அப்பா கடுதாசி எழுதியிருக்கிறார்.''

''இதற்கேன் இவ்வளவு சந்தோஷம்? என் அபிவிருத்தியில் உனக்குக் கிஞ்சித்தேனும் கவலை யிருக்குமானால் நீ இச் சமாச்சாரத்தைக் கேட்டதும் துக்கம் கொண்டாடியிருப்பாய்.''

''ஒருவருக்குச் சந்தோஷமாகத் தோன்றும் விஷயம் மற்றவருக்குத்துன்பமாகவும்,மற்றவருக்குத் துன்பமாகத் தோன்றுவது மூன்றும் மனிதனுக்குச் சந்தோஷமாகவும் மாறி மாறி வருவது இயற்கை. இதையறியாமல் வருத்தப் படுவது சிறுபிள்ளைத்தனம். பூஜை வேளையாய் விட்டது. பூஜை அறைக்குச் சென்று கடவுளைத் துதிப்போம்!''

''கடவுளைத் துதிப்பதா? நெஞ்சின் குமுறலைத் தெய்வ சன்னதியில் எளிதில் போக்கிவிட முடியுமா? அப்படியானால் செல்ல வேண்டியதே'' என்று மெதுவாக நடராஜனை அழைத்துப் போய்விட்டாள். கண்ணம்மாளின் மிருதுவான கரங்கள் தன் மேல் படவும் நடராஜன் ஒரு புத்துணர்ச்சி அடைந்தான்.

கண்ணம்மாள் அன்று நடராஜனுக்கு மகிழ்ச்சி அளிக்கும் பொருட்டு, ''பேராதரிக்கும் அடியார்தம் பிறப்பையொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவரும் பிள்ளைப் பெருமானென்னும் பேராளா'' என்ற பாடலை, ராக மாலிகையாக, அன்புததும்ப, மிக்க உருக்கமாகப் பாடினாள்.

நாதப்ரம்மமே இன்னிசையுடன் உள்ளத்திலிருந்து உணர்ச்சிபெற்று எழுமாயின் மாந்தர்களின் மனக்கவலை

பறந்துவிடாதோ? நடராஜன் பாடலின் பொருட் சுவையிலும் கீதத்தின் இனிமையிலும் ஈடுபட்டவனாய், மெய் மறந்து அசைவற்று, கண்கள் இரண்டையும் இறுக மூடிக் கொண்டு நின்றான். சில நிமிஷங்களுக் கப்புறம் தன் சுய உணர்வைப் பெற்றுத் தன் முன்நிற்கும் சுந்தரியை நோக்கிச் சொன்னான். "சேவற் கொடியோன், முருகனை என்மனக் கண்ணால் கண்டேன். இன்னிசைக் குயிலின் இனிய கானத்தை என் செவிகளால்க் கேட்டேன். ஆனந்தம் கொண்டேன். உணர்ச்சி ததும்பப் பாடினாய். என்னைப் போன்ற கல் நெஞ்சர்களையும் இளக வைக்கும் இனிமையுடன் பாடினாய். பாடல்களை இயற்றும் கர்த்தாக்கள், தாங்கள் இயற்றிய பாடல்களைப் பாடவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே இயற்றி யிருக்கிறார்கள். அம் முறைப்படி பார்த்தால்..." என்று மேலும் பேசிக் கொண்டிருக்கையில் கண்ணம்மாள் இடைமறித்து, "போதுமே! உன்புகழ் மாலை. நையாண்டி பண்ணிப் பேசுவதற்குப் புகழுரை என்றா அர்த்தம்?" என்றாள்.

"உள்ளதைச் சொன்னால் சிலருக்கு உள்ளம் பூரிப்பதில்லை. அது போகட்டும். இன்று முதற்கொண்டு நீ அனுதினமும் முருகனின் புகழ்மாலையை எனக்குப்பாடி, என்னைத் திருப்தி செய்யவேண்டும். புரிந்ததோ!"

"நன்றாகப் புரிந்தது. நீ எதை விரும்புகிறாயோ, அதை இன்றும், என்றும் செய்யத் தயார். நீ சந்தோஷமாயிருந்தால் அதுவே எனக்குப் பரமதிருப்தி" என்று சொல்லித் தன் அன்பனை சமையலறைக்கு இட்டுச் சென்றாள்.

இவ்விரு அன்னப் பறவைகளும் அனுதினமும் ஆங்கிலம் கற்பதிலும் சங்கீதம் கற்பதிலும் மெய் மறந்து

தங்கள் காலத்தை இனிது கழித்து வந்தனர். எந்தக் கலையையும் எளிதில் கற்கவல்ல சக்தி வாய்ந்த நடராஜன் வெகு சீக்கிரத்திலே சங்கீதக் கலையை கண்ணம்மாவிட மிருந்து கற்றுக் கொண்டான். இசை வெள்ளத்திலே தேங்கித் திளைத்த அவனது இதயம் ஒரு இனிய ராகத் தைப்போல் பண்பட்டு விட்டது. கலைக்காட்டிலே இருவரும் அழகிய மலர்களைக் கொய்து வித வித மணங்களை அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

ஒரு சுந்தரமான அந்தி வேளை. அழகிய தன் அளக பாரத்தைக் கோதி உலர்த்தும் பொருட்டு கண்ணம்மா மேன் மாடிக்குச் சென்றாள். இடுப்பு வரை நீண்ட அவளது கருங்கூந்தல் ஒரு புத்தழகைப் பரப்பிக் கொண் டிருந்தது. அங்குமிங்கும் ஒய்யாரமாக அவள் நடந்து கொண்டே கூந்தலைக் கோதி முடிகையில் தங்கள் காரிய மும் முடிந்த விட்ட தெனச் சொல்வது போல் மாலைக் கிரணங்கள் மெல்ல மெல்ல மறைந்தன. மாலை வெயி லுக்கு வழி அனுப்புக் கூற வந்தாற்போல் வெண் நிலா கீழ்வானில் விரிந்தெழுந்தது. பால் வெள்ளம் உலகை இரண்டற அணைத்துக் கொண்டது. பனிக்கால முன் இரவாதலால், இவ்வுலகமே ஒரு மோகனக் கனவில் மூழ்கி இருப்பது போலவும், அக்கனவுக்குத் தனி ஒளியைத் தீட்டும் கட்டழகி போன்றும் கண்ணம்மா மெய்மறந்து நின்றாள். அந்த அற்புதக் காட்சியைக் கண்டுதான், வெளியிலுள்ள பனி நீர்த்துளிகள், உள்ளம் உருகி பரந்த வெளியிலெங்கும் பனி முத்துக்களைத் தெளித்தன போலும்!

மெல்லிய தென்றலோசை தவிர எங்கும் நிசப்தம். அந்த நிசப்தத்தைக் கலைக்க ஆரம்பித்தாற்போல் மெது வாகத் தனக்குள்ளே பாடிக் கொண்டிருந்தாள். அவள்

ஒய்யார நடையையும், உன்னதத் தோற்றத்தையும், கம்பீரமான குரலினிமையையும், கவிச் சக்ரவர்த்தி கம்பரேனும், கவிரத்னகாளிதாசரேனும் கண்டு களித்திருப்பார்களேயானல் கண்ணம்மாவை காவிய நாயகிகளைவிட ஒருபடி உயர்த்தியே சிறப்பித்துத் தங்கள் கவிதா மண்டலத்தின் கற்பனை ஊற்றிலே குளிப்பித்திருப்பார்கள்.

தற்செயலாய் மேன்மாடிக்கு உலாவச் சென்ற நடராஜன் ஓரிடத்தில் கண்ணம்மா தன்னைக் கவனியா வண்ணம் மறைந்து நின்று, அழகியின் அழகையும், இசை இன்பத்தையும் பருகிக்கொண்டிருந்தான். இதைக் கவனித்த கண்ணம்மா மெதுவாகஅருகே வந்து, "என்ன? மான்போல் மருண்டு, மறைவாய் நிற்பதின் காரணம் என்னவோ!" என்ருள்.

"பருகப் பருகத் தெவிட்டாத தெள்ளமுத ஊற்றைத் தாகத்தோடு வந்தவன் உற்று நோக்குவதும் குற்றமா? நட்சத்திரம் நிறைந்த வானத்தை யாரும் பார்க்கலாகாதென தடையும் உண்டோ?"

"அப்பப்பா! கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிற்றே! உன் புகழ்மாலை போதும், அண்ணு. ஒரே ஒரு சங்கதி; ரொம்ப நாளாக மனசிலே ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு விஷயத்தைக் குறித்து உன் அபிப்பிராயத்தை அறிய ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தேன். இன்று தான் அதற்கேற்ற சந்தர்ப்பமும் வாய்த்தது. என்னுடைய கேள்வி உன்மனதுக்குப் பிடிக்காமலிருந்தால் அதற்காக என்மேல் தப்பான அபிப்பிராயத்தையோ, அல்லது மனத் தாங்கலையோ நீ கொள்ளக்கூடாதென்பது என் முதல் நிபந்தனை. இரண்டாவதாக 'உன்

ளொன்று வைத்துப் புறமொன்று' பேசுவாரைப் போல், பயங்கொள்ளித் தனமான பதிலே, என்னைத் திருப்தி செய் வதின்பொருட்டும் சொல்லக் கூடாது. மூன்ருவது நான் கேட்கும் கேள்விக்கு விடை இன்றே இப்பொழுதே இதே இடத்தில் பதினைந்து நிமிஷத்திற்குள் சொல்லியாக வேண்டும். என்ன தெரிந்ததா சொல்லு?'' என்று கேட்டாள்.

''வயது வந்தது முதற் கொண்டு நான் பல பிரசங் கங்களை, பேசுவதையே தொழிலாகக் கொண்டவர் களிடம் கேட்டிருக்கிறேன். ஆனல் சண்டப்பிரசண்ட, பிரசங்கமாரி பிரசங்ககேசரி நீ ஒருத்தி இருக்கிருய் என்பதை இன்றுதான் அறிந்துகொண்டேன். சரி ரொம்ப பலமா இருக்கே, திக்குமுக்கலாடும் போல் இருக்கு. உன் கேள்விக்கு எப்படித்தான் பதில் சொல்லப் போகி றேனே?''

''அண்ணு! அதைரியப்பட்டவன் போல் பேசி என்னை ஏமாற்ற முடியாது. சுலபமான கேள்விக்கேற்ற சுலபமான பதில் சொல்லவேண்டும்.''

''சரி, உன் பிரியம் போல் செய்'' என்று ஒன்று மறியாப் பார்வையுடன் சம்மதித்தான்.

''நாமிருவரும் கடந்த பல வருஷங்களாக ஒரே வீட்டில் சகோதரபாவத்துடன் வாழ்ந்து மிக அன்னி யோன்னியமாகப் பழகி வருகிருேமென்பது நீயும், நானும் அறிந்த விஷயம். சின்னஞ் சிறு வயதில் குழந்தைகளாக பால்ய விளையாடல்களில் பற்றுதல் கொண்டோம். அத்துடன் நம் வாழ்க்கையில் ஒருபகுதி முடிவடைந்தது. இரண்டாம் பகுதியில், நீ கல்வியின் பொருட்டு என்னை விட்டகன்று ஈரோடு சென்ருய். இனிமேல் நான் பேசுவது

என்னைக் குறித்த விஷயம். அதற்குத்தான் நீ உன் அபிப்பிராயத்தையும் தெரிவிக்க வேண்டும். நான் பருவ மங்கையானது முதல் அப்பா கல்வி கேள்விகளிலும் சங்கீத சாஸ்திரத்திலும் நான் தேர்ச்சி பெறும் பொருட்டு வேண்டியவைகளைச் செய்தார். எல்லா விஷயங்களிலும் சந்தோஷமாகவும் சௌகர்யமாகவு மிருந்த நான் ஒரு விஷயத்தில் மிகக் கவலையுடையவளாகவே இருந்தேன். அதாவது சிறுவயதில் உன்னைச் சகோதரனாகப் பாவித்த நான் பருவ மங்கையானவுடன் என் காதலனாய், என் வாழ்க்கைத் துணைவனாய் பாவிக்க ஆரம்பித்துவிட்டேன். குற்றம் என்னுடையதல்ல. ஏனெனில் அருமைக் குணங்கள் படைத்த உன்னைப்போன்ற உத்தமர்களை என்னைப் போன்ற இளம் கன்னிகைகள் காதலிப்பது சகஜம். சில பெண்கள் தங்கள் உள்ளக்கருத்தை இத்தகைய விஷயங்களில் வெளியிடாமல் ஊமைகளாக இருக்கின்றனர். குற்றம் இவ்வூமைப் பெண்களிடமில்லை. நமது சமூகக் கட்டுப்பாடுகளால் ஏற்படும் அனர்த்தங்கள் பலவற்றுள் பால்யவிவாகமும் கட்டாயத் திருமணமும் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. சமூகசீர்திருத்தம் செய்யும் தம்பிரான்களுக்கு இவ்விஷயத்தை நாம் விட்டு விடுவோம். நான் உன்னை என் மனமாரக் காதலித்து விட்டேன். நீ என் காதலை மறுத்தால் எனக்கு இனிமேற் கொண்டு புதிய காதல் ஏற்படப் போவதில்லை! கல்யாணமாகா கன்னி விதவையா யிருந்து இறப்பதென்ற உறுதியான தீர்மானத்துக்குப் பல நாட்களுக்குமுன்பே வந்து விட்டேன். உன் அபிப்பிராயத்தை இப்பொழுது நீ சங்கோஜமின்றித் தெரிவிக்கலாம். நான் இருப்பதா, இறப்பதா என்பது நீ கூறும் பதிலில் இருக்கிறது.''

''நான் சற்றும் எதிர்பாராததும் தர்மசங்கடத்திற்கேதுவானதுமான ஒரு பெரிய கேள்வியைக் கேட்டு அதற்கு இப்பொழுதே பதிலும் கேட்கிறாய். நானும் என்

அருமைத்தாயும் எங்கள் சொத்துக்களை யெல்லாம் இழந்து அன்னக்காவடிகளாய் உங்கள் வீட்டில் அடைக் கலம் புகுந்தோம் என்னும்விஷயம் உனக்குத் தெரியாம லிருக்கலாம் என்று இப்பொழுது நான் ஊகிக்கிறேன். எங்களுக்குப் புகலிடம் கொடுத்த உன் அருமைத் தந்தை எனக்கும் தந்தையாவார். சிறு வயது முதற்கொண்டு ஒன்ருய் வாழ்ந்து, விளையாடி வந்த நம் இருவரையும் எல்லோரும் சகோதர சகோதரியாகவே எண்ணி வருகின் றனர். என் விருப்பமும் நாம் சகோதர சகோதரியாய் என்றும் இருக்க வேண்டு மென்பதே. ஒரு தாய் வயிற்றில் பிறந்தால்தாஞ சகோதரத்வம்? மேலும் உன் தாய் தந்தைக்கும் என் தாய்க்கும் சமாச்சாரத்தை அறிவிக் காமலும், அவர்கள் சம்மதத்தையும் ஆசீர்வாதத்தையும் பெருமலும் கள்ளத்தனமாக நாம் ஏதேனும் சிறு பிள்ளைத்தனமாகச் செய்துகொள்ள நான் சம்மதிக்கின் என்னை நன்றி கெட்ட மிருகம் என்று இவ்வுலகம் பழிக் கும். அவசர அவசரமாகக் கல்யாணம் செய்துகொண்டு பின்பு தீராச் சங்கடங்களில் மாட்டிக்கொள்ளும் மர பினர்களின் சங்கத்தில் நாம் தலைமை ஸ்தானத்தையும் பெறவேண்டியதாயிருக்கும். என்மேலுள்ள வாஞ்சை யால் என்னை இந்திரனென்றும், சந்திரனென்றும், மனம் போனபடி எல்லாம் பேசுகிருய். தயவு செய்து, என் மேல் அன்பு கூர்ந்து, இன்று முதற்கொண்டு, நானும் நீயும் காதலர்களாக வாழ்வது முடியாத காரியம் என்ற தீர்மானத்திற்கு வரும்படி கேட்டுக் கொள்கிறேன். நீ உன் மனதிலுள்ள விஷயத்தை தைரியமாகத் தெரிவித்த தையும், நம் சமூக சம்பந்தமான உன் அபிப்பிராயங்களை யும் மிகவும் பாராட்டுகிறேன். உன்னிடமிருந்து இன் றிரவு நான் கற்றுக்கொண்ட சில அபூர்வமான விஷயங் களுக்கு என் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளு கிறேன்!'' என்று தன்பதிலைத் தெரிவித்தான்.

"என்மனதை உன் பேச்சிற்காக மாற்றிக்கொள்ள முடியாது. நீ எடுத்துக் காட்டிய விஷயங்க ளெல்லாம் எனக்குப் புதியவை யல்ல. நமது விவாகத்தால், ஏற்படும் நன்மை தீமைகளை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தே, ஒரு முடிக்கு வந்திருக்கிறேன். என் பெற்ருேர், சம்மதத்தை நான் பெற்றுக்கொள்ள எனக்கு வழி தெரியும். சீராட்டிப் பாராட்டி, ஊட்டிவளர்த்த பெற்ருேர்களை உதறித்தள்ளும் கொள்கை என்னிடம் இல்லே. என்னை மனைவியாக அடைவதில் உனக்கு விருப்பமா, இல்லையா என்பது தான் முக்கியபிரச்னை. அதற்கு நீதக்க பதிலளித்தால் மேற்கொண்டு விஷயங்களை நான் சீராக நடத்திவைக்க என்றும் கடமைப் பட்டவள் என்பதை நீ நிச்சயமாய் நம்பலாம். உனக்கொருவிதத்திலும் சங்கடமும் மனத்தாங்கலுமின்றி, மங்களகரமாக, நம் மணத்தை முடித்து வைப்பது என் வேலே. இப்பொழுதாகிலும் சரியென்று சொல்லேன்" என்று தன்னிரு கண்களிலும் நீர் ததும்பக் கூறினுள்.

பெண்களின் உணர்ச்சியை இன்னதென அறியாத நடராஜன் விளக்கொளியில் விழுந்த விட்டில் பூச்சிபோல் செய்வ தின்ன தென்று அறியாமல் ஊசலாடிக் கொண்டிருந்தான். பூர்வ வினைப்பயன் முன்னே வந்து நின்று நடராஜனை 'வினைப்படி நடக்கட்டும் சரியென்று சொல்' என்று தூண்டிற்று. நடராஜனும், "சரி உன் இஷ்டம் போல்எது வேண்டுமாளுலும் செய்துகொள்" என்று கண்ணம்மாளிடம் தன்முடிவான தீர்மானத்தைத் தெரிவித்து விட்டான்.

"விதி வசத்தால் செல்வச் சிறப்பை இழந்த என் மாமன் நீர்; கலேவாணியின் அருளால், கல்விச் செல்வத்துடன் சிறந்து வாழ்கிறீர். அழியும் செல்வத்தை இழந்து

அழியாச் செல்வத்துக்கு அதிபதியானீர். காதலும், செல்வமும், ஜென்ம விரோதிகள் அல்ல என்று நிரூபிக்கவும் போகிறீர். அன்புள்ள மாமா! எனக்கு வேறென்ன வேண்டும்? உமது நிரந்தர அன்பு, என்றும் வேண்டும் என்பதே என் கோரிக்கை'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

'' நீ வயதிற் சிறியவளாயினும் மதியிற் பெரியவள். என் நிரந்தரக் காதல் இன்றுமுதல் உன்னிடம் அடிமைப் பட்டுவிட்டது '' என்று சொல்லி முடித்தான். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

# உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பேது

தர்மசாமிக் கவுண்டரும் அவரது மனைவி திலகக்காளும், தம் மகள் கண்ணம்மாளுடனும், அடைக்கலம் புகுந்த வள்ளியக்காள், நடராஜனுடனும் குடும்ப பாரத்தை யாதொரு இடுக்கணுமின்றி சந்தோஷமாக நடத்தி வந்தனர். தானியப் பஞ்சத்தால், தானிய விலைகள் ஒன்றிற்குப் பதின் மடங்கு ஏறி பஞ்சாகப் பறந்து போயின. தர்மசாமிக் கவுண்டர் தாம் குறைந்த விலைக்கு வாங்கிய நிலபுலன்களை அதிக விலைக்கு விற்று, வந்த தொகையில் சாகுபடி செய்ய முடியாது என்று ஏனையோர் தள்ளுபடி செய்த அக்கம் பக்கத்திலுள்ள புன்செய் நிலங்களை யெல்லாம் மிகக் குறைந்த விலைக்குக் கிரயம் செய்துகொண்டு தமதாக்கிக் கொண்டார்.

இத்தகைய புன்செய் நிலங்களைத் தம் திறமையாலும் அநுபவ முயற்சியாலும் மிகச் சிறிய பொருட் செலவில் நன்செய் நிலங்களாக மாற்றினார். வர்ணபகவானும் வள்ளலைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் கருணையைப் பொழிந்து காட்டினான். கவுண்டர் தொட்டவிடமெல்லாம் தங்கமாய் விளைய ஆரம்பித்தது. நல்வினை செய்தோர் நன்மையையே அறுவடை செய்வர். தம்மைப் போல் பிறரையும் நினைக்கும் தாராள குணம் வாய்ந்த கவுண்டர், பொருளில்லாமல் கஷ்டப்பட்டுத் தவிக்கும் தன் சகோதர விவசாயிகளுக்குத் தம்மாலான பொருளுதவியைக் கைமாறு கருதாமல் செய்து வந்தார். பண்ட வசதிகள் இல்லாமல் கஷ்டப் பட்டோருக்குத் தம் பண்டங்களை இலவசமாகக் கொடுத்து உதவினார்.

தம் கிராமத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலுமுள்ள தம் சகோதர விவசாயிகளுக்கு உதவாக் கரை

பூமிகள் என்று ஒதுக்கப்பட்ட பூமிகளைப் பயன்படும் பூமிகளாக மாற்றிக் கொள்ளும் வகைகளைக் கற்றுக்கொடுத்தார். பூமிதேவி நம் நன்மைக்கென ஒப்புவித்திருக்கும் இப்பரந்தவெளியை நன்செய், புன்செய் என்று பாகு படுத்தி நிலங்களை ஒதுக்கி வைக்கவில்லை. நன்செய் புன்செய் என்னும் இருபதங்களும் அர்த்தம் இல்லாதவை. மிகப்பொருட் செலவில் அதிக சிரமத்தோடு எதிர் பார்த்ததற்குக் கீழ் விளைச்சல் கொடுக்கக்கூடிய நிலங்களை புன்செய் நிலங்களென்றும், சில நவீன பண்ணைக் காரர்கள் பாகுபாடு படுத்தியிருக்கின்றனர். கஷ்டப் பட்டு அறுவடை செய்து அதனால் உண்டாகும் பலனை அனுபவிப்பது சாலச்சிறந்தது; என்றும் நிரந்தரமானது. ஆத்ம சாந்தியையும் அளிக்கக்கூடியது.

சோம்பேறிகளாகவும், தான்தோன்றிக ளாகவும், வாழ்க்கையிலே வெறுப்புற்றவர்களாகவும் திரியும் இளைஞர்களைத் தம் பக்கத்தில் உட்காரவைத்து, உழுது உண்டு வாழ்வதின் பெருமையைக் கற்பித்தார் கவுண்டர். இவ்விளைஞர்களுக்கு உண்ண உணவும் தங்க இடமும் அளித்து, உழுது சாகுபடி செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்தார். இவ்வாறாக, சோம்பேறிகளைச் சுறு சுறுப் புள்ளவர்களாகவும். வாழ்க்கையில் வெறுப்புற்றவர்களை, விருப்ப முள்ளவர்களாகவும் மாற்றினார். வேலையில்லாமல் திண்டாடி, வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு கொலை, களவு செய்யும் துன்மார்க்கர்களை, எல்லோரும் அதிசயிக்குமாறு, சிறந்த மனிதர்களாக மாற்றினார். விடு முறைக் காலங்களில், உபாத்தியாயர்களையும், கல்வி பயிலும் மாணவர்களையும் தம் நிலங்களுக்கு அழைத்துச் சென்று, வாழ்க்கைக்கு இன்றியமையாததும், இனிது வாழக் கூடியதுமான உழுதுண்டு வாழ்தல் எவ்விதம்? என்னும் சிறந்த உண்மையைப் புகட்டினார்.

இவ்வித சுயநலமற்ற செய்கைகளால் தர்மசாமிக் கவுண்டர், தம் கிராமத்திலும், பக்கத்துக் கிராமத்திலும் வாழ்ந்தவர்களின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றுத் தமக்கு யாதொரு விரோதியுமின்றி வாழ்ந்துவந்தார். கவுண்டர் காலால் இட்ட வேலையை சிரமேற்கொண்டு செய்வதற்கு ஆண்பெண்கள் அனைவரும் தயாராகக் காத்துக் கொண்டிருந்தனர். 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை' என்னும் நீதி மொழியைத் தாம் கற்றுக் கொள்ள ஊன்றுகோலாயிருந்த கவுண்டரை மக்கள் மனமார வாழ்த்தினர்.

கவுண்டரின் நற்செயல்கள் நாலா திசைகளுக்கும் எட்டவே, சேலம் ஜில்லாவிலுள்ள ஒரு பிரபல ஜமீன் தார், பி. ஏ., பட்டதாரியான தம்மகனுக்கு கவுண்டரின் மகள் கண்ணம்மாளை விவாகம் செய்து கொடுக்க வேண் டும் என்று வேண்டிக் கவுண்டருக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார். கவுண்டர் இச் சமாச்சாரத்தைத் தம் மனை விக்கும் மகளுக்கும் தெரிவித்து அவர்கள் அபிப்பிராயத் தைக் கேட்டார். தாயார் இணங்கவும், மகள் மறுக்கவும் கல்யாணத்தை தற்போது நடத்துவதாக இல்லையென்று ஜமீன்தாருக்குப் பதில் எழுதிவிட்டார். இதே சமயத்தில் நடராஜனுக்குத் தன் சிபார்சின்மேல் திரிச்சிணுப்பள்ளியி லுள்ள எஸ். பி. ஜீ. காலேஜில் இண்டர்மீடியேட் வகுப் பில் படிப்பதற்கு இடம் கிடைத்து விட்டதாக ஹெக்டர் துரையவர்கள் கவுண்டருக்கு எழுதிய கடிதமும் வந்து சேர்ந்தது.

# உமை நாடி ஒரு மடந்தை

மாமன் நடராஜன் மறுபடியும் மேல்ப் படிப்பிற்காக திருச்சினுப்பள்ளிக்கு மறுதினம் போக வேண்டும் என்ற செய்தியைக் கேட்டதும் நமது கண்ணம்மாள் சிறிதளவு வருத்த மடைந்த போதிலும், எதிர்காலக் கணவனின் முன்னேற்றத்தில் மிகச்சிரத்தை கொண்டவளாய் சிறிது காலப் பிரிவாற்ருமையை எவ்வாறேனும் சகித்துக் கொள்வதென்று தீர்மானம் செய்துகொண்டாள். மற்றெல்லோரைக் காட்டிலும் தானே மிகக் கவனத்துடன் நடராஜனுக்கு வேண்டிய ஆடைகளையெல்லாம் துவைத்து, உலரவைத்துப் பெட்டிகளில் ஒழுங்காக அடுக்கி வைப்பதில் முன்னணியில் நின்ருள். ஊருக்கு அனுப்புவதற்கு வேண்டிய பட்சணங்களைச் செய்யச் சொல்லித் தன் தாயாருக்கு ஒரு 'ஆர்டரும்' போட்டு வைத்தாள்.

சாதாரணமாகத் தங்கள் குழந்தை கண்ணம்மாளும் நடராஜனும் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகி, ஒன்று கூடி எக்காரியத்தையும் செய்வதை சாதாரண விஷயமாகக் கருதிய பெற்ருேர்கள், இவ்விளம் காதலர்களிடம் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளைக் கவனிக்கவில்லை. தங்கள் தவக்குழந்தை எவ்விஷயத்திலேனும் தாறுமாருகவோ, தங்கள் இஷ்டத்திற்கு விரோதமாகவோ இதற்கு முன் நடந்திருந்தாலன்ருே சந்தேகங்களுக்கும், தப்பபிப்பிராயங்களுக்கும் இடமேற்பட்டிருக்கும். எனவே நடராஜன் கண்ணம்மாள் திருமண உடன்படிக்கை மிக ரகசியமாகச் சீல்போட்ட பத்திரமாகவே இருவரின் மனமெனும் இரும்புப் பெட்டிக்குள்ளே இருந்தது.

வெளியில் சென்றுவந்த நடராஜனை தன்னை மேன் மாடியில் அன்றிரவு சந்திக்குமாறு சமிக்கை செய்து விட்டுக், கண்ணம்மாள் தன் வீட்டுக் கருகாமையிலுள்ள விக்னேச்வரன் கோயிலுக்குச் சென்று, இறைவனைத் தான் எண்ணிய கருமத்தை இனிதே நிறைவேற்றிக் கொடுக்குமாறு வேண்டிக் கொண்டாள். மங்கையின் மனக்கோரிக்கை நிறைவேறும் காலம்நெருங்கி விட்ட தென்று ஆண்டவன் ஆசீர்வாதம் செய்து சொல்வதற்குப் பதிலாய், அக்கோயிலில் அங்குமிங்குமோடி விளையாடிக் கொண்டிருந்த எலிக்குட்டி ஒன்று கீச் கீச் சென்று சப்தம் செய்து மங்கையை மனத் திருப்தி செய்து அனுப்பியது.

அன்றிரவு தர்மசாமிக்கவுண்டர் தம் இல்லத்தில் சில ஆப்த நண்பர்களுக்கு அறுசுவை விருந்தளித்தார். விருந்துக்கு விஜயம் செய்த விருந்தாளிகளெல்லாம், நடராஜன் மேலான நுண்ணறிவையும், கம்பீரமான தோற்றத்தையும் மிகவும் பாராட்டிப் பேசினர். கவுண்டர் வீட்டாருக்கு உண்டான ஆனந்தந்திற்கோர் அளவே யில்லை.

நாள்முழுதும் விருந்திற்கு வேலை செய்த அலுப்பால், வீட்டிலுள்ள யாவரும், நித்திராதேவியை நாடினர். நடராஜனும் கண்ணம்மாளும் மாடிமேல் சந்தித்தனர். மட்டற்ற மகிழ்ச்சியால் இருவரின் நெஞ்சமும் கட்டுக் கடங்காத இன்பக்கிளர்ச்சி அடைந்தது. ஒருகணம் கழிந்தது, நாணத்துடன் ஒருபக்கத்தில் எட்டிநின்ற கண்ணம்மாளை நோக்கி நடராஜன் “கண்ணம்மா! என்ன விஷயம்?” என்று கனிவாகக் கேட்டான். “அத்தான்! யாரோ, சேலத்திலுள்ள ஒரு பிரபல ஜமீன்தாராம் அவர் அப்பாவுக்கு ஒருகடிதம் எழுதியிருக்கிறார். அதைப் பற்றிய தகவல் உங்களுக்கேதேனும் தெரியுமோ!”

"அப்படியா! கண்ணா, எனக்கு, ஒன்றும் தெரியாதே! நீ சொல்வது இன்னதென்றே எனக்குப் புரியவில்லையே" என்று திடுக்கிட்டவனாய்ச் சொன்னான்.

"நான் உம்மை ஏமாந்தவர் என்று நினைப்பேனென்று நீங்கள் பாசாங்கு செய்யஆரம்பித்து விட்டீர்களா? சமாச்சாரம் இது தான். சேலத்தில் யாரோ ஒரு பிரபல ஜமீன்தாராம்; அவர்மகன் சகலகலைகளிலும் வல்லவனாம். பீ. ஏ. பட்டதாரியாம் அழகில் மன்மதனாம். சத்திய நெறியில் அரிச்சந்திரனும், ஈகையில் கர்ணனும், செல்வத்தில் குபேரனும் இன்னும் இதைவிட எவ்வளவோ மேலான குணாதிசயங்களாம். நேரில் ஒரு முறை பார்த்தால் விவரங்கள் புரியுமாம். இத்தகைய குணாதிசயங்கள் படைத்த தம் புதல்வருக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்கு என் அப்பாவுக்குப் பிரியமிருப்பின் உடனே பதில் எழுதும்படி கேட்டிருக்கிறார். இதுவே கடிதத்தில் கண்டுள்ள செய்தி."

"கண்ணா! கடுதாசியில் கண்டுள்ளசெய்தியை உன் வாயால்கேட்கக் கேட்க எனக்கு பேரானந்தம் ஏற்படுகிறது. உன் அந்தஸ்துக்கும், புத்தி விலாசத்துக்கும் ஏற்ற வரன். உன் பெற்றோர்களும் நீயும் முன்பின் யோசியாமல், சம்பந்தத்திற்குச் சம்மதம் கொடுக்கத்தக்க மாப்பிள்ளை. அன்றொருநாள் அந்திவேளையில் இதேமாடத்தில் நம்மிருவருக்கும் நடந்த உடன் படிக்கையைப்பற்றி நீ சற்றேனும் கவலைகொள்ளத் தேவையேயில்லை. ஏனெனில் நீ இத்தகைய வரனை அடைந்து, அனுபவிப்பதைப் பார்ப்பதே நான் அடையும் இன்பங்களிலெல்லாம், பதவிகளிலெல்லாம் மேலானது,... ஆகையால்" என்று மேலும் பேச ஆரம்பிக்கையில் கண்ணம்மா இடைமறித்து 'சற்றுப்பொருங்கள். நடந்த விஷயத்தை முழுவதும் கேட்காமல் எனக் கேற்றவரன், என் தந்தைக்கேற்ற மருமக

னென் றெல்லாம் சண்டப் பிரசண்டமாக அடுக்கிக் கொண்டே போகிறீர்களே! ஜமீன்தார் மகனுடைய உன்னத குணங்கள் எனக்குக் கிஞ்சித்தும் பிடிக்கவில்லை. நான் மதனுக்கேற்ற ரதியாக இருக்கத் தயாராயில்லை என்று அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சொல்லிவிட்டேன். அப்பாவும் தற்பொழுது என் கல்யாணத்தைக் குறித்து யோசிப்பதற்கில்லை என்று பதில் எழுதிவிட்டார். ஆகையால் ஜமீன்தார் மகனும், நானும் கணவனும் மனைவியுமாக வாழ்வதைப் பார்த்து நீங்கள் அனுபவிக்க இருக்கும் இன்பத்திற்கு ஒரு பெரிய முற்றுப் புள்ளி போட்டு சும்மா இருங்கள்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி மேற்கொண்டு இவ் விவகாரத்தையே நடராஜன் பிரஸ்தாபிக்காம லிருக்குமாறு செய்து விட்டாள்.

''கண்களிரண்டையும் வேண்டுமென்றே இறுக மூடிக்கொண்டு, கிணற்றில் விழத் தயாராயிருக்கும் அபலைகளுக்கு'' என்று சொல்லி முடிக்குமுன் கண்ணம்மா சிரித்துக் கொண்டே, ''ஆண்டவன் அருள்புரிந்து கிணற்றைத்தாவிக் குதிக்கச் செய்வான். விழும்பொழுது நீங்கள் உதவி செய்தால் என் நன்றியறிதலை உமக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது கிடைத்தற்கரிய இச்சந்தர்ப்பத்தை சந்தோஷமாகக் களிப்போம். எனக்கு ஒருயோசனை தோன்கிறது. நீ ஒருபதம் பைரவி ராகத்தில் பாடு. நான் அபிநயம்பிடிக்கிறேன்'' என்று சொன்னாள்.

நடராஜனுக்கு உண்டான மனக் குழப்பத்தில் பைரவி ராகம் பாடுவதிலும், அபிநயத்தை அனுபவிப்பதிலும் சிந்தை சிறிதளவேனும் செல்லவில்லை. திக்பிரமை பிடித்தவன் போல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். கண்ணம்மா சேலம் விஷயத்தை நடராஜனிடம் பிரஸ்தாபித்ததே தப்பிதம் என்று தன்னை நொந்து

கொண்டாள். அவனுக்கு ஆறுதல் அளிக்கும்பொருட்டு, "எனதன்புள்ள மாமனே! உமை நாடி ஒருமடந்தை நடு நிசியில் காத்திருக்க நீர் மனம் சோர்வதென்ன" என்றதன் சொந்தப்பாடலைப் பாடிக்கொண்டே அபிநயம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். சுகபாவம் செவ்வனே அமையப் பெற்ற பாடலை கண்ணம்மாளின் இதழ்கள் அள்ளி அள்ளிக் கொட்டின. பாடலுக்கேற்ற அபிநயம். சமய சந்தர்ப்பத்திற்கேற்ற கானம்.

ஆட்டத்திலும் பாட்டிலும் சிறிது சிறிதாகத் தன் கவனத்தைச் செலுத்திய நடராஜன், பி. ஏ. பட்டதாரி யான ஜமீன்தார் மகன் மண விஷயத்தை மறந்தான். நாட்டியம் என்னும் இன்ப சாகரத்தில் மூழ்கினான். நெஞ்சை நெகிழச் செய்யும் நாட்டியம் அவனைப் புனித னாக்கியது, பித்தனாக்கியது. உள்ளத்தை அந்த உல்லாச உலகில் பறக்க விட்டான். அவன் மனம் ஆனந்தக் கூத்தாடுகையில், "கண்ணம்மா, தெரியாத்தனமாக, நான் சற்று முன் நடந்து கொண்டதை நீ மறந்துவிடவேணும். நான் மனக்கவலையுற்ற காலங்களிலெல்லாம், என் மனதை மாற்றி இன்பமளிக்கும் இனிய ரகசியம் உன்கையில் இருக் கிறது! அம்மருந்து அருமருந்துகளில் ஒன்றாகிய சங்கீத மருந்து. நான் நாளை திருச்சிக்குச் சென்றால் சில மாதங் களுக்கு உன் திருவதனத்தையும் தித்திக்கும் தேனிசை யையும் பார்த்துப் பருக முடியாதென்பதை நினைக்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. நான் இவ்விரண் டையும் காணாமல் வெளி ஊரில் இருப்பதெப்படி?" என்றான்.

"என்னை மறந்து கல்வியில் கவனத்தைச் செலுத்தி, பரீட்சையில் தேறி, மங்களகரமாகத் திரும்பி வரும் பொழுது, நீங்கள் குறித்த அமுதங்கள் இரண்டையும், இரட்டிப்பான தித்திப்புடன் தினம் தினம் பருகலாம்.

ஆனால் பாட்டை நினைத்துப் பாடத்தை அசட்டை செய்தால் போச்சு! கண்ணம்மா மட்டுமல்ல கலைவாணியும் தூர விலகிக் கொள்வாள். என்ன தெரிந்ததா? ஆகையால் மனக்கவலையை ஒழித்து நிம்மதியாகப் போய்வாருங்கள்" என்றாள் கண்ணம்மா. கீழ்வானில் இளம்பரிதியின் கதிர்கள் தோன்ற ஆரம்பிக்கவும் இரு இளம் உள்ளங்களும் பிரியாமல் பிரிந்து அப்புறம் சென்றனர்.

## கிட்டாதாயின் வெட்டன மற

மறுநாள் நடராஜன் அதிகாலையில் எழுந்து, தன் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு பிரயாணத் திற்கு ஆயத்தமானுன். கண்ணம்மாளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய, அவள் தாயார் ஒரு பெரிய பலகாரப் பார் சலையும் தயாராக வைத்திருந்தாள். நடராஜன் கனிவு டன் தன் தாயாரும், திலகக்காளும் செய்து வைத்து, கண் ணம்மாளால் பரிமாறப்பட்ட, சிற்றுண்டிகளை அருந்தி எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு ஈரோட்டுக் குப் புறப்பட்டான்.

உற்சாகமாகத்தான் கண்ணம்மா வழியனுப்பினுள். ஆனுலும் அவள் உள்ளம் மெல்ல மெல்ல துயரக்கடலில் மூழ்கிற்று. கொந்தளிப்பு அலைகளும் குமுறல்களும் சகிக்க முடியவில்லை. துயர அலைகளைத் தாங்காது இதயக்கரை வாடிச் சோர்ந்தது. தன் மனசுக்குச் சாந்தி அளிப்பது இன்னதென்றே தெரியவில்லை. எங்கு போனுலும் நிம் மதி இல்லை. காணுமிடங்களெல்லாம் நடராஜன் சாய லாகவே தோன்றியது. கோவிலுக்குப் போய், அங்குள்ள வேப்பமர நிழலில் தன்னை மறந்த லயத்தில் ஈடுபட்டிருப் பதிலே ஒரு நிம்மதியைக் கண்டாள். சாதாரணமாக துன்புற்ற போது ஈசனை மறந்து விடுவதை காண்கிருேம். ஆனுல் கண்ணம்மா அந்த ரகத்தைச் சேர்ந்தவள் அல்ல. தான் பெற்ற இன்பத்தைப் பெறுக இவ் வையகமெனஎண்ணுபவள். தனக்கு மன நிறைவைத் தந்த ஆலயம் மற்றவர்களுக்கும் அந்த ஆனந்தத்தைத் தரும் என்று நம்பினுள். தன் தோழியருக்கும் இதை நன்கு உணர்த் தினுள். ஒரு நாள் தர்மசாமிக் கவுண்டர் தங்கை செல்லக் காள் அத்திப் பூத்தது போல் அண்ணன் வீடுதேடி தன் மைந்தன் திருபுரசுந்தரனுடனும் வந்து சேர்ந்தாள்.

சுயநலத்தைதவிர வேறு நலம் கருதாத செல்லக்காள் தன் வீட்டை விட்டகன்று அரைக்கணமும் பிறர் அகத்திற்குக் காரிய காரணமின்றிச் செல்லமாட்டாள். தங்கை செல்லக்காளின் குணாதிசயங்களை நன்கறிந்த கவுண்டர் தங்கையின் திக்விஜயப் பிரயாணம் ஒரு அனர்த்தத்துக்கு அறிகுறி என்று நினைக்கலானார். என்றாலும் தங்கையை மரியாதையாக வரவேற்று உபசரித்து, "ஏது தாயி! இன்று தம்பியுடன் புறப்பட்டு விட்டாய்? உன் வீட்டுக்காரருக்கு உடம்பு சௌக்கியமில்லை யென்று கேள்விப்பட்டேன். இப்போது எப்படி இருக்குது?'' என்றார். "அவங்களுக்கென்ன! எல்லாம் நல்லாத்தான் இருக்குது. அவுங்க கூடவே பிறந்த வியாதி அவுங்களைவிட்டு எங்கே போகும்? சதா பண்டிதமும் பத்தியச்சோறும் தானே நாங்க கண்டது'' என்றாள் செல்வக்காள். "ஏன் தாயி! இந்தப்பக்கம் எட்டிப்பாக்க'றதே இல்லை! நாலில் ஒரு நாள் இங்கேவந்து நான் செத்தனா, பொழைச்சனான்னு பாக்கிறதுதானே?'' என்றார் கவுண்டர்.

"உன்னைப்போல எனக்கு ஆள் அம்பு ஒத்தாசையா? ஏதோ நானும் வீட்டுக்காரரும் சேர்ந்து கஷ்டப்பட்டால் தானே அரைவயித்துக் கஞ்சியாவது குடிக்கலாம். வெள்ளாமை வெளச்சல் அறுவடைகாலம். வேலையே தீர்ரதில்லை. அண்ணக்காரன் ரொணத்தைத் திங்க எல்லாரையும்போல எனக்கு குடுத்து வச்சிருக்குதா? உம், பாழாப்போன பகவான் என்னைப்பட்டுப் பட்டு மாஞ்சு பாடையிலே போண்ணு படச்சிட்டான்'' என்றுவேண்டுமென்றே தனக்கு இல்லாத பொல்லாத கஷ்டங்களையெல்லாம் புதுப்பித்துக் கொண்டு கண்ணீர்விட ஆரம்பித்து விட்டாள்.

"ஏன் தாயி! அழுகறே? தம்பி சுந்தரன் வயசுக்கு வந்திட்டான் பள்ளிக்கூடத்திலும் படிக்கிறதில்லேண்ணு சொல்றாங்க. ஏதோ பூமி காணியைக் கவனிக்கச் சொல்லறது தானே!'' என்றார்.

"அப்படியுஞ் சொல்றுங்களா? அட சாமி, பொறுமையினுலே ஊர்ச்சனங்கள் நம்ம பையன் படிக்காத உதவாக்கரைண்ணு சொல்றதை நீயும் நம்பரயே. அவன் பட்டணம் போய்ப் படிச்சு என்னென்னமோ வாயிலே நொழையாத வேலைக்கெல்லாம் வரோணும்ணு உழுந்து உழுந்து ராத்திரிப்பகலுண்ணு பாக்காமே,சோறு தண்ணி திங்காமே படிக்கிறுனே. நமக்குத்தான் படிப்பு வாசனையில்லேண்ணு அவனையும் தோட்ட வேலையிலே போடறதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன். சாமி, சாமி, எங்கிட்டே இந்தப் பேச்சைச் சொல்லாதீங்க" என்றுள்.

"என்ன தாயி, இந்தக்காலத்திலே பி. ஏ., எம். ஏ., படிச்ச பசங்களெல்லாம் வேலையில்லாமல்,அரைவயித்துக் கஞ்சிக்கும் அல்லப்பட்டு காடு கரைபாக்க வர்ராங்களாம். குடித்தனக்காரன் மகனை தாசில்வேலை செய்ய படிக்க அனுப்பராளாம். நம்ம பையன் புத்திக்கும் படிப்புக்கும் வெகுதூரம். ஏதோ ஒரு நல்ல இடத்தில் ஒரு புள்ளையைப் பாத்து கல்யாணம் காச்சி பண்ணிவைச்சு உங்க காலத்துக் கப்புறம் குடித்தனத்தைப் பாக்கச் செய்யறது தான் நல்லதுண்ணு நான் நினைக்கறே" என்றூர்.

"தம்பி கண்ணுலத்தைப்பத்தி உங்கிட்ட பேசத்தான் வந்தேன். ஊட்டிலே ஒரு வயசு வந்த பொண்ணை வைச்சிக்கிட்டு எங்கியோ நல்ல இடத்திலே ஒரு புள்ளையைப்பாருண்ணு சொல்றயே! எம்புள்ளைக்கு உன் மகளைக் கட்டிக்கலாமுண்ணு உனக்கு ஒரு பொட்டப் புள்ளை பொறந்தண்ணைக்கே முடிச்சு வச்சிட்டேன். வீட்டுக்காரருக்கும் உடம்புக்கு சரியில்லே. ஏதோ பையனுக்கு ஒரு கண்ணுலம் செய்து கண் குளிரப் பாத்திட்டு கண்ணை மூடிக்கலாமிண்ணு சொல்ருங்க. வர்ர தை மாசத்திலே ஒரு நல்ல நாளைப் பாரப்பா" என்று தன் மனதிலுள்ள

ரகசியத்தை அண்ணனிடம் வாய் கூசாமல் சொல்லி விட்டாள். அண்ணன் தங்கைக்கு நடந்த சம்பாஷணைகள் அனைத்தையும் அடுத்த அறையில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த திலகக்காளும், வள்ளியக்காளும் ஒருவர் முகத்தை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக்கொண்டார்கள். ஸ்தம்பித்து உட்கார்ந்து கொண்டிருப்பதைத் தவிர வேறு வழி என்ன?

நல்லவேளையாக, தன் அத்தை மகன் திரிபுரசுந்தரனுடன் பின் கட்டில் க்ஷேம சமாச்சாரங்களைப் பேசிக் கொண்டிருந்த கண்ணம்மாவுக்கு இது காதில் விழவில்லை. கேட்டிருந்தால் வெள்ளை மனம் படைத்த அந்தப் பேதைப் பிள்ளை உடனே தன் அத்தைக்குத் தக்க பதில் தயவு தாட்சண்யமின்றி அளித்திருப்பாள். திரிபுரனின் திருவிளையாடல்களைக் கேட்ட கண்ணம்மா குலுங்கக் குலுங்க நகைத்தாள். திரிபுரன் கதை அளப்பதில் கை தேர்ந்தவன். தான் சினிமாவில் ஒரு காமெடியனாக நடிக்க தீர்மானித்து விட்டதாகவும் தனக்குச் சரியான ஜோடி 'ஸ்திரீபார்ட்' கிடைக்காததால் சினிமாவில் சேரும் கைங்கர்யத்தை சில நாட்களுக்கு ஒத்தி வைத்திருப்பதாகவும் சொன்னான். சிரிக்காமல் அதையெல்லாம் அவள் கேட்டுக் கொண்டே இருந்தாள். நடிப்புத்தொழில் கலைகளிற் சிறந்தது. ரசனையை நிரப்ப வல்லது என்பதெல்லாம் படித்தறிந்த கண்ணம்மா மௌனமாகஅவன் சரடுகளுக்குச் செவிசாய்த்து 'கம்' மென்றிருந்தாள். திரிபுரன் கண்ணைமூடிக்கொண்டே கயிறு திரித்துக் கொண்டிருந்தான்!

தன் தங்கை செல்லக்காள் தன் பெண்ணை கலியாணம் செய்து கொடுக்கும்படி திடீரென்று கேட்டதினால் உண்டான அதிர்ச்சியை அடக்கிப் பதிலளிக்க சிறிது கால தாமதமேற்பட்டது. இல்லை யென்று உடனே சொல்லி

விடுவதா? அல்லது சாக்குப் போக்குகள் சொல்லித் தங்கை மனதைத் திருப்தி செய்து அனுப்பி விடுவதா? மேலே கண்ட விஷயங்களைக் குறித்தே யோசித்துக் கொண்டிருந்தார். கிளியை வளர்த்துப் பூனைவாயிற் கொடுக்க தன் தங்கையின் பொருட்டும் கூடக் கவுண்டருக்கு மனம் வரவில்லை. உரிமைப் பெண் என்ற உயரிய பந்தத்தின் பெயரால், பொருத்த மற்ற பல திருமணங்கள் நடக்கும் இக் காலத்திலும் கூட அனுபவஸ்தரான தர்மசாமிக் கவுண்டர் இந் நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப் படாமலிருந்தார். தன் தங்கையைக் காட்டிலும் தான் கையாளும் கொள்கை பெரிதெனக் கருதினர்.

தங்கையை நோக்கித், "தாயே! என் மகள் கல்யாண யோசனையே நாங்க இன்னும் செய்யிலே. அது ஒரு பெரிய முரடு. கல்யாணப் பேச்செடுத்தாலே சீறி உளுகுது. பினனாலே யோசனை பண்ணலாம்; நீ போய் கைகழுவீட்டு சோறு தின்னு" என்று சொல்லி மெதுவாக எழ ஆரம்பித்தார்.

"கொஞ்சம் உக்காரப்பா. உன்மவளுக்குத் தகுந்த அந்துசு இல்லேனு சொல்லு; எங்கிட்டே இல்லேண்ணு சொல்றதுக்குப் பதிலா சாக்குப் போக்குச் சொல்லீட்டியாக்கும். செல்லக்கா லேசுண்ணு நெனைக்காதே. நான் சாகாமப் பொளச்சிருந்தா, என் மவனையும் உன் மவளையும் புருசன், பொண்டாட்டி யாக்கிப் பாத்தே விடப் போறேன்" என்று விசுக்கென எழுந்து, தன் கோபத்தை நன்ருக உணரட்டுமென முகத்தைக் கடூரமாக வைத்துக் கொண்டு தன் மகனுடன் வீட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

செல்லக்காள் தற்கால உலகுக்கு, மிகவும் லாயக்கானவள். எதை எப்படிச் செய்யவேணும் என்பது

அவளுக்கு நன்ருகத் தெரியும். கண்ணம்மாவுக்கு மணவாளஞக வரத் தன் மகன் சற்றும் அருகதை யற்றவன் என்ற விஷயத்தை மிகவும் நன்ருகத் தெரிந்திருந்தாள். தட்பித்தவறி தன் முயற்சியால் அவர்கள் கணவனும் மனேவியுமாக வாழ்க்கைப் பட்டால் திரிபுரத் தம்பதிகள் சந்தோஷமாக வாழ மாட்டார்களென்ற விஷயமும் வெகு நன்ருக அவளுக்குத் தெரியும். எது எப்படியாஞலும், எப்படி இருந்த போதிலும் அதைப்பற்றிக் கவலேயில்லே. தான் விரும்பியது தன் அண்ணனின் சொத்துப் பிறர் வசம் போகாமல் தன்னேயே சேரவேணும். தன்னிடமே வந்தடைந்து விடவேணும். இக் கொள்கை நிறைவேற மகனேப் பலி கொடுத்தாலென்ன? மருமகளேப் பலி கொடுத்தாலென்ன? அக்கரையில்லே. நடப்பது நடக்கட்டும். தங்கள் கைக்கு எட்டாத கற்பகமே யாஞலும் முயற்சி செய்து அடையத்தான் பார்ப்போமே! முயற்சியின் விளேவைப் பற்றிச் சிந்திப்பானேன்? 'கிட்டா தாயின் வெட்டென மற' என்று யாரோ எழுதி வைத்துவிட்டுச் சென்ருல், அதை அப்படியே அனுஷ்டிக்க வேண்டுமோ? இம்மாதிரியான சிந்தனேகளே அவள் உள்ளத்தில் சுளித்துக் கொண்டிருந்தன.

# மேன்மக்கள் மேன்மக்களே

திருச்சிக்குச் சென்ற நடராஜன் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் படித்து இண்டர் மீடியெட் பரீட்சையையும் முடித்துக் கொண்டான். இரண்டொரு நாள் பிறகு ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய இடங்களுக்குச் சென்றான். அப்புறம் ஊர் வந்து சேர்ந்தான். அன்பனைக் கண்ட அழகியின் அகம் மகிழ்ந்தது. அவன் வருவதற்கு முன்பே சரிவர உண்ணவும் உடுக்கவும் ஆரம்பித்ததால் முன்பு இளைத்திருந்ததை இவனால் கண்டு கொள்ள முடியவில்லை. மழைக்குப் பின் துளிர்க்கும் இளந்தளிர் போல் பூரித்திருந்தது அவள் மேனி. கண்களின் கவர்ச்சியிலே காந்தம் குடி கொண்டிருப்பது போல அவனுக்குத் தோன்றியது.

நடராஜன் வீடு திரும்பிய சில நாட்களில் தர்மசாமிக் கவுண்டரின் உடல் நிலையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. வைத்தியர்கள் வேண்டுகோளுக் கிணங்கி கவுண்டர் சில மாதங்களுக்கு யாதொரு வேலையையும் கவனிக்காமல் ஓய்வு எடுத்துக் கொள்வதெனத் தீர்மானித்தார். ஓய்வு என்ற பெயரில் ஒன்பது மடங்கு வேலை செய்வது சிலர் வழக்கம். ஆனால் கவுண்டர் எண்ணியபடி செய்கிறவர். வைத்தியர் வாக்கைக் கடைப்பிடித்தார். அவ்வப்போது குடும்பக் கணக்குகளின் நுட்பத்தை விளக்கிக் காட்டி நடராஜனுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படுமாறு செய்து வந்தார். கண்மூடித்தனமாக எதையும் பின்பற்ற வேண்டாமெனச் சொன்னார். கணக்கு உலகில் நடராஜன் ஈடுபட்டிருப்பது கண்ணம்மாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்றாலும் விபரம் தெரியாத துயரமும் வாட்டிற்று. தங்கள் உள்ளப்போக்கை தந்தை உணர்ந்தால், தங்களிருவர்

மேலும் எவ்வித மனப்பான்மை கொள்வாரோ என்று அச்சமும் கொண்டாள். இருந்தாலும் உள்ளத்தே தெளிவு இருக்கும்போது, ஏன் சஞ்சலம் கொள்ள வேண்டும்? அடிக்கடி தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

கடினமான விஷயங்களையும் மிகச் சிரமமின்றி கற்றுக் கொள்ளும் வன்மை படைத்த நடராஜன் கவுண்டரின் குடித்தன முறையை எளிதில் கற்றுக் கொண்டான். எல்லோரும் அதிசயிக்குமாறு நிர்வாகங்களையும் நடத்தி வந்தான். இவை அனைத்தையும் படுத்த படுக்கையிலிருந்து கவனித்து வந்த கவுண்டர் உள்ளூர மட்டிலா மகிழ்ச்சியடைந்தார். நடராஜனைப் போன்ற மாப்பிள்ளை தனக்கு வாய்க்க வேண்டுமேயென்று வேண்டிக் கொண்டார். தம் குழந்தைக்கு மணவாளனாக வருபவன் யாராயிருந்தாலும், தமக்கப்புறம் தம் குடும்ப பாரத்தை நடத்துதற்கு நடராஜன் தான் தகுதியானவன் என்ற தீர்மானத்துக்கு வந்தார்.

வியாதியில் படுத்த படுக்கையில் இருப்பவர்கள் எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணுவது சகஜம். எட்டாத பேராசைக் கோட்டைகளையும் கட்டுவார்கள். நெஞ்சம் புண்ணாகப் பதைக்கவும் செய்வர். கவுண்டர் இவ்விதிகளுக்கு விலக்காக வில்லை. தமக்குப் பின் தம் சொத்துக்களைக் கண்காணிக்கவும், அநுபவிக்கவும், தமக்கென ஒரு புதல்வன் இல்லையே என்றெண்ணி வருத்தமுற்றார். சரி, மகன் இல்லா விட்டாலும் பரவாயில்லை. மகள் வருந்தலாகாது. தன் செல்வக் குழந்தை எங்கு சென்று கஷ்டப் படுவாளோ! தன் தங்கை மைந்தன் திரிபுரனுக்கு மனைவியானால் அவள் கதியென்னவது? ஐயோ பகவானே! என்றெல்லாம் நினைத்து மனமுருகினார்.

யாரோ பத்திரிகை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். பரீட்சையின் முடிவு பெரிய பெரிய எழுத்துக்களில் நன்ருகத் தெரியும்படி அதில் போடப்பட்டிருந்தது. இண்டர் மீடியெட் பரீட்க்ஷையில் சென்னை மாகாணத்திலேயே முதல் மாணவஞக நடராஜன் தேர்ந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்ட வீட்டிலுள்ள யாவரும் குதூகலத்தில் ஆழ்ந்தார்கள். கவுண்டர் மட்டும் வெளிக்குத் தம் திருப்தியைக் காண்பித்துக் கொண்டு உள்ளூர மிகவும் கவலை கொண்டார். அதே சமயம் தம் கல்லூரியில் மாகாணத்திலேயே முதல் மாணவஞகத் தேறி வெற்றி பெற்ற நடராஜனை மிகவும் பாராட்டிக் கல்லூரித் தலைமை ஆசிரியர், கவுண்டருக்கு எழுதிய கடிதமும் வந்து சேர்ந்தது. தமதெண்ணத்துக்கு மாருக இப்படியெல்லாம் காரியங்கள் நடக்கிறதே என்று அவர் சஞ்சலத்துக்குள்ளாஞர்.

இந்த சம்பவத்துக்குப் பத்துப் பதினைந்து தினங்களுக்கப்பால், நடராஜன் விலாசத்துக்கு சென்னை சர்க்காரிடமிருந்து வந்த நீண்டதொரு கடிதத்தில், இன்னும் பதினைந்து தினங்களில் மேல் படிப்பிற்காக லண்டனுக்குச் செல்லத் தயாராயிருக்க வேண்டுமென்றும், அதற்காக நேரிடும் சகல செலவுகளையும், தாங்களே ஏற்றுக்கொள்வதாகவும், புறப்பட வேண்டிய தேதி, முதலிய விவரங்களை தாமஸ் குக் அண்டு சன்ஸ் கம்பெனியார் தெரிவிப்பார்களென்றும் கண்டிருந்தது.

கடிதத்தை வாசித்த நடராஜன் சற்றே ஆனந்தத்தை அடைந்தான். ஆனல் சிறிது சிந்திக்க ஆயாசத்தையே அடையலாஞன். கண்ணம்மாளுக்கும், அன்னை வள்ளியக்காளுக்கும், திலகக்காளுக்கும், கடிதத்தில் கண்டுள்ள செய்தியை வாசித்துக் காட்டிஞன். ஒருவர்

முகத்திலும் சந்தோஷக் குறி என்பது எள்ளத்தனையும் தென்படவில்லை. இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற கவுண்டர் தாம் நினைத்தது போல் காரியமும் முடிந்ததென்று எண்ணி வருத்த முற்ருர். வீட்டோடு வாசலோடு நடராஜன் இருந்தாலே போதும் என்று நினைத்தார். ஆனால், கப்பலேறிக் கடலைக் கடக்க வேணுமே என நினைத்ததும் தலை சுற்றிற்று. கடைசியில், 'ஈசன் விட்ட வழி' என்று மனதைத் தேற்றிக் கொண்டார். வீட்டிலுள்ள மற்ற பெண்மக்களின் மனதையும் தேற்றும் வேலையும் அவரைச் சேர்ந்தது.

படுக்கையிலிருந்த கவுண்டர் சற்று கஷ்டத்துடன் எழுந்து அருகிலுள்ள இரும்புப் பெட்டியைத் திறந்தார். ஆயிரம் ரூபாய் எடுத்து நடராஜனிடம் கொடுத்து சீமையில் குளிர் தாங்குவதற்கேற்ற ஆடைகளை சென்னையில் வாங்கிக் கொள்ளும்படி சொன்னர். சர்க்கார் உதவியால் சீமைக்குச் சென்று கல்வி கேள்விகளில் தேர்ந்தவனாய் தாய் நாடு திரும்பினால், பின்னர் சர்க்கார் தாசனாக இருக்க நேருமென்றும் தமக்கு ஏராளமாகவுள்ள சொத்தை நடராஜன் கல்வியின் பொருட்டே உபயோகப்படுத்திச் சுயேச்சையாக வாழ விடுவதே தமது ஆர்வம் என்றும் எடுத்துச் சொன்னர். அதனால் சகல செலவுகளையும் தாமே ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

தர்மசாமிக் கவுண்டரை நடராஜன் மிகக் கனிந்த பார்வையுடன் பார்த்தான். அவன் கண்களில் நீர் தேங்கும் போல் இருந்தது. உணர்ச்சி வசமானன். என்னென்னவோ சொல்லவேண்டும் போல் தோன்றியது. தனக்குள்ளே கூறிக் கொண்டான்; "தந்தையை இழந்தோம். சகல சொத்துக்களையும் இழந்தோம். வாஸ்தவம். நம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. ஆனல், செய்வதின்ன

தென்றறியாமல் உங்களை அண்டினேம். எங்களுக்கு ஆதரவளித்தீர்கள். அனுதைகளான எங்களால் என்ன கைமாறு செய்ய முடியும்? நீங்கள் இதுவரையில் எங்களிருவருக்கும் மனம் கோணுமல் செய்தவைகளுக்கெல்லாம் நாங்கள் ஏழேழு ஜென்மங்களுக்கும் உங்களுக்கு அடிமைகளாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறேம். 'திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை' என்பார்கள். உண்மைதான். தெய்வமாகவே மதித்துப் பூஜித்துப் போற்றலாம். உங்கள் உதாரகுணத்தை என்னென்று சொல்ல? எனக்கு இவ்வளவு பணம் வேண்டியதில்லைதான்; என்றாலும் மறுப்பது அழகல்ல; ஆடையின் பொருட்டும், மற்ற செலவுகள் பொருட்டும் எனக்கு வேண்டியது சொற்பமே. ஏற்கனவே உங்களுக்கு அதிகச் சிரமம் கொடுத்துவிட்டேன்; கொடுத்து விட்டேன் என்று சொன்னேன்? சிரமம் கொடுத்து விட்டோம். இன்னும் எவ்வளவு கஷ்டங்கள் தரப்போகிறேமோ'' என்றெல்லாம் உள்ள முருகி நேருக்கு நேராக அவரிடம் சொல்லிவிடத் துடித்தான். ஆனல் உதட்டைவிட்டு வார்த்தைகள் வெளிவர மறுத்து விட்டன.

ஊரார் பணத்தை விரயம் செய்வதிலும் வெறும் கையில் முழம் போடுவதிலும் முதற் பரிசு பெற்ற மகான்கள் குழுமிய இந்த உலகில், அன்னியர் சொத்துக்கு ஆசைப்படாத நடராஜர்களும் இருக்கிருர்கள். கெட்டாலும் மேன்மக்கள் எக்காலத்திலும் மேன்மக்கள் தானே? இளமையிலிருந்து பொருளை ஒரு பொருட்டாக மதியாத நடராஜனுக்குத் தன்னைத் தேடிச் செல்வம் வந்தும் உதறித் தள்ளவே தோன்றியது. தனக்குக் கஷ்டமேற்பட்ட காலத்தில் ஆசைப்படுவது எப்படி? இப்படிக் குணம் படைந்தவர்களை அன்றாட வாழ்க்கையில் காண்பது அரிதுதான். சேர்க்கை வாசத்தால் சுய நலமும்

பேராசையும் பொருந்திய மிருகங்களாக, பிற்காலங்களில் மாறி விடுகிற சிலரையும் காண்கிறோம். ஆனால், பிறப்பிலே பெருங் குணம் படைத்தவர்கள் எதிலும் மாறுவதில்லை. எதாலும் அவர்களை மாற்றுவது முடியாத காரியம் என்பதில என்ன சந்தேகம்?

## முதல் விரதம்

தாமஸ் குக் அண்டு சன்ஸ் கம்பெனியாரிடமிருந்து நடராஜனுக்குக் கடிதம் வந்து சேர்ந்தது. அதில், "டிசம்பர் மாதம் பதினைந்தாம் தேதி பம்பாய் துறைமுகத்திலிருந்து லண்டன் நோக்கிப் புறப்படும் "என்னைநேசி" என்னும் கப்பலில் பிரயாணம் செய்வதற்கு நடராஜன் ஆயத்தமாக இருக்க வேண்டும். பிரயாணத்திற்கான செலவுகள் அத்தனையும் சர்க்காரே தங்களுக்கு அனுப்பி விட்டதால் சில முத்திரையிட்ட தாள்களை மாத்திரம் குறிப்பிட்ட இடங்களில் பூர்த்தி செய்து அனுப்பி வைத்தால் போதுமானது" என்று கண்டிருந்தது. கடிதத்தை இரண்டு மூன்று தரம் படித்தான். சரி, ஊரை விட்டு ஒரு வாரத்திற்குள் புறப்பட வேண்டியதுதான். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்ய வேணும். தாமதிப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்தான் நடராஜன்.

நாட்கள் நெருங்க நெருங்க நடராஜன் இதயத்து வேகமும் அதிகரித்தது. கண்ணம்மாவைப் பார்க்கும் போதெல்லாம், மனக்கிலேசம் பெருக்கெடுத்தது. அவள் நிலையோ சொல்லத் தேவையில்லை. அரைக் கணமும் பிரிந்திருக்க மனமில்லாத இரு மாடப்புறுக்கள் இரண்டு வருஷ காலம் பிரிந்திருப்ப தென்றால்? அடேயப்பா! இருவர் மனமும் படும் பாட்டை வார்த்தையால் வர்ணிக்க முடியாது! கல்யாணமாகி வெகு காலமாகி, பேத்துப்பிதிர் எடுத்து, அறுபதாம் கல்யாணத்தையும் அதிவிமரிசையுடன் நடத்திக்கொண்ட தம்பதிகளே தூர தேசப் பிரயாணம் என்றால் இசைவதில்லை! அப்படியிருக்க புதுமலர் இரண்டும் புன்னகை சூடி வாசமுள்ள புதுநீராட விருப்பங் கொள்வது நியாயந்தானே?

நடராஜன் புறப்படுமுன் தனியாகச் சந்தித்து தன் உள்ளத்தைத் திறந்து காட்ட வேணுமென்று கண்ணம்மா முடிவு செய்தாள். மனக்குகை ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டும் ஓவியனைக் காணுவிட்டால், தன் அழகிய சித்திரங்கள் உருப்பெறுவது எங்ஙனம்? எப்படியாகினும் சந்திக்க வேணும். அதற்கேற்ற தருணமும் வாய்த்தது. தோட்டத்து வேலையாட்களுக்குள் ஏதோ சிறு தகராறு. அந்தச் சச்சரவைத் தீர்க்க நடராஜன் தோட்டத்துப் பக்கம் சென்றான். நிழல் போல் கண்ணம்மாளும் தொடர்ந்தாள். நடராஜனைக் கண்டவுடன் சண்டை சச்சரவு 'கப் சுப்' பென்று நின்று விட்டது. நடராஜன் அதைக் கண்டு வாய்விட்டுச் சிரித்துவிட்டான். ஆனால், திரும்பிப் பார்த்துக் கண்ணம்மாளைக் கண்டதும் 'கல்போல்' அசையாது நின்று விட்டான்.

ஒரு மணல் மேட்டின்மேல் சற்றுப் பொறுத்து இருவரும் உட்கார்ந்தார்கள். முதலில் யார் பேசுவதென்ற சிந்தனைபோலும்! கண்ணம்மா புதுமணலில் சிறு வீடு கட்டிக்கொண்டும், அதைக் கலைப்பதுமாக சிறிது நேரம் போக்கினாள். அந்த விளையாட்டில் சலிப்புக்கொண்ட அவள், "போதும் மாமா! இந்தச் சிறுபிள்ளை விளையாட்டு. நான் சில விடுகதைகள் கேட்கிறேன், அதற்குப் பதில் சொன்னால், அந்த விளையாட்டில் கொஞ்சம் நேரம் போகுமே" என்றாள்.

"விடுகதைகளுக்குப் பதில் சொல்லும் வித்தையை நான் கற்றுக்கொள்ள வில்லையே! தவிர, விடுகதைகள் சில சமயங்களில் சச்சரவுகளையே விளைவிக்கிறதாமே!"

"அதொன்றுமில்லை. பயப்படாதீர்கள்" என்றாள்.

"சரி, பயப்படவில்லை" என்றான், வியப்புடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

"வாசமுள்ள மலர் எது தெரியுமா?" என்றாள்.

"நீதான்!" என்று சொல்லுவது போல் கையைத் தூக்கிச் சுட்டிக் காட்டினான்.

"உள்ளத்தைக் கவர்வது எது?" என்றாள், சிரித்துக் கொண்டே.

"உன் கண்களைச் சொல்வதா? அல்லது மேனி முழுவதையுமே சொல்வதா? தெரியவில்லையே?" என்றான் தயங்கிக் கொண்டே.

"உலகம் தலைகீழாகப் புரண்டாலும் அழியாதிருப்பது?"

"நம்மிருவர் காதல் தான்" என்றான் மகிழ்ச்சி பொங்க.

"இணைபிரியாமலிருப்பதோ?"

"நம்மிருவரின் உள்ளங்கள்!"

இந்தப் பதிலைக் கேட்டதும் அப்படியே அவள் சொக்கிப் போனாள். மெய் மறந்த ஆனந்தத்தில் ஆழ்ந்து விட்டாள். மகிழ்ச்சிக் கடலில் குளித்தெழும் அவள் கன்னங்களில் விழும் குழியையும், குறு நகையையும் கண்டு நடராஜன் களிப்படைந்தான். அவளை மேலும் வேடிக்கையாகத் தூண்ட எண்ணி, "எங்காவது புஸ்தகத்தில் படித்துவிட்டு விடுகதைகள் போடுகிறாயாக்கும் என்று நினைத்தேன். வாழ்க்கைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஏடுகளைப் புரட்ட ஆரம்பித்திருக்கிறாய். 'சபாஷ்' என்று சொல்லுவதைத் தவிர வேறு வார்த்தை கிடைக்கவில்லையே!" என்றான் நடராஜன்.

அவள் மிகுந்த வருத்தத்துடன், "நீங்கள் போகிறீர்கள். நீங்கள் லண்டனுக் கல்லவா போகிறீர்கள்?" என்றாள். நடராஜன் சிரித்துக் கொண்டு, "ஆமாம் உனக்குத் தெரியாதா?" என்றான்.

கண்ணம்மாள் மென்று விழுங்கி, "உம்... எத்தனையோ... எத்தனையோ... அழகிகள் இருப்பார்களே அங்கே!" என்றாள்.

"ஐயோ! அப்பாவிப் பெண்ணே! கழுத்தளவு விஷத்தில் நின்றாலும், விழுங்காதவரை அது கொல்லாது. யாராலும் என் விரதத்தை மாற்ற இயலாது" என்றான்.

சீமைக்குச் சென்றால் எவ்விதம் நடப்பாரோ, எந்த வலையில் விழுந்துவிடுவாரோ, எப்படித் தவிப்பாரோ, என்று அவள் தவியாகத் தவித்தாள். தன் கண்களில் பெருகும் நீர்ப் பெருக்கைத் துடைத்துக் கொண்டே 'முதல் விரதத்தை மறந்து விடாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டாள். கொஞ்சும் அவள் முகம் அவன் நெஞ்சில் பதிந்தது. நேரம் ஆகவே வீட்டிற்குப் புறப்பட்டனர்.

வழிநெடுக அவள் பாடிக் கொண்டே வந்தாள். மெல்லிய அவள் பாட்டினிமை அவன் இதயத்தை எங்கும் நிறைத்தது.

# சத்தியத்தின் சங்கநாதம்

டிசம்பர் மாதம் பத்தாம் தேதி; மறு நாள் மாலையில் நடராஜன் பம்பாய்க்குப் புறப்பட வேண்டும். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு புறம், மகிழ்ச்சி; மற்ெருரு புறம் துயரம். சற்று குணமடைந்த தர்மசாமிக் கவுண்டர் தம் குடும்ப சமேதராய் அருகேயுள்ள சில ஆலயங்களுக்கு நடராஜனுடன் சென்று வழிபாடுகளைச் செய்து வந்தார். அன்று இரவு சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்தவரான தர்மசாமிக் கவுண்டர் இளைஞன் நடராஜனுக்குச் சில புத்திமதிகளைச் சொல்ல விரும்பி, அவனைக் கூப்பிட்டுத் தம் அருகே உட்கார வைத்து அன்பு ததும்பிய குரலில் சொன்னுர்; அதன் சாரமாவது; "அப்பா, அன்னிய நாட்டுக்கு உயர் தரக்கல்வியின் பொருட்டுச்செல்லும் இளைஞர்கள் முதலாவதாக தம் நாட்டுக் கெளரவத்தையும். மதிப்பையுப் காப்பாற்ற வேண்டும். இரண்டாவதாக மேல் நாட்டில் குடிகொண்டிருக்கக் கூடியதான ஒழுங்கீனமான முறைகளை உதறித்தள்ளி விட்டு, நம் நாட்டிற்கேற்ற நல்ல முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். மூன்ருவது, மிகவும் முக்கியமானது. கவனமாகக் கேளப்பா! தொழிலாளி மக்கள் என்றழைக்கும் பாட்டாளி இந்திய மக்கள் இன்புற வாழ்வதற்கு நம் நாட்டில் எவ்விதச் சீர்திருத்தங்கள் செய்தால், இந்த இன்பத்தை அடையலாம் என்பதைச் சீர்தூக்கிக் கற்று, பக்குவத்தோடு திரும்பி வரவேணும். இந்த விஷயங்களை மனதில் வைத்துக்கொள். ஒருக்காலும் மறந்துவிடாதே, அப்பா"

அட்சரம் லட்சம் பெறும் உபதேசங்கள். ஒன்றைக் கூட துளியும் அசட்டை செய்வதற் கில்லை. மேலும் கவுண்டர், தம் சக்திக் கேற்பத் தெரிந்தவற்றைச் சொன்ஞர். நடராஜன் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அந்தப்படியே நடப்பதாகத் தன் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான். அவன் தனக்குள் பின் வருமாறு சொல்லிக் கொண்டான்:

"கண் கண்ட தெய்வங்கள் நீங்கள் தான். உங்களுக்கு வாயார மனமார நன்றி சொல்ல இது சந்தர்ப்பம் அல்ல. எனக்கு வார்த்தையும் கிடைக்கவில்லை. நீங்கள் செய்துள்ள உபகாரம் கணக்கில் அடங்காது. நான் உங்களுக்கு கடமைப்பட்டவன். வாழ்வளித்த உங்களிருவரையும் நான் மானசீகமாக அனுதினமும் பாதபூஜை செய்யக் கடமைப் பட்டவன். நீங்கள் இன்று எனக்குப் போதித்த உண்மை மொழிகளை என்றும் மறவேன். காலஞ் சென்ற என் தந்தைக்கும், அடைக்கலம் கொடுத்த உங்களுக்கும், இப் புண்ணிய நாட்டிற்கும் அகௌரவத்தை விளைவிக்கக்கூடிய செய்கையையோ, கருத்தையோ கனவிலும் கருதேன். உயர்தரக் கல்வியின் பொருட்டு நான் மேல் நாட்டிற்குச் செல்வதின் உள்ளக் கருத்து என்னவென்ருல், நான் கற்றுக் கேட்ட விஷயங்களை நம் நாட்டு ஏழை மக்களின் பொருட்டு உபயோகப் படுத்துவதற்காகவே. நம் நாட்டைக் காட்டிலும் மேல் நாடுகளில் தொழிலாளி மக்கள் மிகவும் வளத்தோடு வாழும் ரகசியத்தைக் கற்றுணர்வது எனது முதல் வேலையாகக் கொள்வேன். நான் கற்றுக் கேட்ட கல்வியறிவுகளை நம் நாட்டுப் பட்டாளி மக்கள் பொருட்டுப் பயன்படுத்தவும், அதற்காக எதுவும் தியாகம் செய்யவும் தயார்."

தர்மசாமிக் கவுண்டர் ஆனந்தக் கண்ணீர் பெருக நடராஜனைக் கனிவோடு பார்த்தார். கண்ணம்மா இந்தக்

காட்சிகளைக் கண்டு ஆனந்தப் பட்டாளா துக்கப்பட் டாளா என்பதை அவளிடம் தான் கேட்கவேண்டும். அக் காவியக் கண்கள் பேசுவதை நடராஜன் கவனிக்க வில்லை போலும்!

மறுநாட் காலையில் கண்ணம்மாவை பின்கட்டில் சந் தித்த போது, "போய் வரட்டுமா?" என்று புன்னகை தவழக் கேட்டான். "சரி" என்பதற் கடையாளமாகத் தலையை ஆட்டினாள். அந்தப் பவளச் செவ்வாய் அதரத் திலே தவழும் இளநகை சோபை இழந்த மாதிரி தென் பட்டது. இருந்த போதிலும், "நீங்கள் சுகமாகப் போய் வரவேணும்" என்று அவள் சொல்லியதைப் போல் இருந் தது அவனுக்கு.

அன்று மாலை எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு நடராஜன் பம்பாயை நோக்கிப் புறப்பட்டான்.

## திரைகடல் ஓடியும்...

கப்பல் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்தது. கப்பலைக் கண்டவுடன் நாலைந்து நாள் பிரயாணச் சலிப்பையும் மறந்தான். துறைமுகத்தில் டாக்டர்கள், கஸ்டம் ஆபீசர்கள் பரிசீலனை எல்லாம் முடிந்த பின், "என்னைநேசி" என்னும் கப்பலுக்குள் பிரவேசித்தான். துரைத்தனத்தார் செலவில் இலவசமாகச் செல்வதால், ஐம்பது பேர்கள் அடங்கிய ஒரு சிறிய அறையில் நடராஜனுக்கு ஓர் இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

அந்த 'என்னை நேசி' என்னும் கப்பல் மிகப் பெரியது பலவித நவீன நாகரிக வசதிகளுடன் கூடியது. சகல சௌகர்யங்களும் நிரம்பப் பெற்றது. எனவே பிரபல அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள் மனைவி மக்களுடன் அதில் பிரயாணம் செய்தார்கள். பிரபல சமஸ்தானாதிபதிகள் தங்கள் பரிவாரங்களுடன், தமக்கெனப் பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்ட ஒய்யார அறைகளில் வீற்றிருந்தனர். லண்டன்மா நகரம் அவர்கள் கண் எதிரே பம்பாயிலேயே தோன்ற ஆரம்பித்து விட்டது! ஈவு இரக்கமின்றி ஒரு ரூபாய் பெறுமான பண்டத்தை இருபது ரூபாய்க்கு ஏழை மக்களுக்கு விற்று அதனால் குபேரப் பிரபுக்களான, இந்திய வியாபார சிப்பாய்கள், இந்திர லோகப் பதவியை அடைய இங்கிலாந்தை நோக்கிச் சென்றனர்.

நடராஜனைப் போல் கல்வியின் பொருட்டுச் செல்லும் மாணவர் பலர் மமதையுடன் தாய் நாட்டின் அருமை பெருமைகளை மறந்து மேற்றிசையை நோக்கிப் பிரயாணமானார்கள். இந்தியாவில் ஏராளமாக உற்பத்தியாகும்

சரக்குகளை அன்னிய நாடுகளாகிய ஸ்பெயின், போர்த்து கல் போன்ற தேசங்களில் விற்று முதல் செய்வதன் பொருட்டுச் செல்லும் காரியஸ்தர்கள் பலர் தங்களைத் தாங்களே முதலாளிகள் ஆக்கிக் கொண்டு அந்தப் பெரு மையிலே உல்லாசமாகக் கயிறுதிரித்துக் கொண்டு பிரயா ணம் செய்தனர்.

யுத்தத்தின் பொருட்டுக் கீழ்த்திசையை நோக்கி வந்த ஆங்கிலச் சிப்பாய்கள் பலர் தங்கள் பெற்றோர்களையும் மனைவிமக்களையும் ஆவலுடன் காண, இக் கப்பலில் மேற்றிசையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். அபரிமிதமான திரவியத்தைச் சேகரித்து ஆங்கிலபாஷை யில் மோகம் கொண்டு அரை குறையாகப் பேசக் கற்றுக் கொண்ட பல இந்திய பிரகஸ்பதிகள் தங்களுக்கு ஆங்கில பாஷையின்பாலுள்ள ஆர்வத்தைப் பலருக்கும் பகட் டாகக் காட்ட ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டு பிரயா ணத்தை ஆரம்பித்தனர். இத்தகைய பிரகஸ்பதிகளின் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பிரமுகர் 'நான் லண்டனுக்குச் செல்லுகிறேன்' என்பதற்குப் பதிலாக,'நான் லண்டன்மா நகரங்களுக்குச் செல்லுவதில்லை!' என்று அழுத்தம் திருத்தமாக கப்பல் பிரயாணிகள் சகலருக்கும் தம் விருத் தாந்தத்தைக் கூற ஆரம்பித்தார்.

பார்க்கப் போனால், 'என்னை நேசி' என்னும் கப்பல் பிரயாணிகளில் அரைகுறை ஆங்கில வாசனையுள்ள தம்பிரான்கள்தான் எல்லோரது கவனத்தையும் கவர்ந் தனர். தங்கள் தாய் பாஷையை அலட்சியம் செய்த இம் மகான்கள், மற்ற பிரயாணிகளுக்கு மிகவும் இன்றியமை யாதவர்களா யிருந்தார்கள்.

இதே கப்பலில், இங்கிலாந்திலுள்ள பிரதம கட்சி களுள் ஒன்றாகிய "லிபரல்" கட்சியைச் சேர்ந்த லார்டு

ரின்னிங்டன் பிரபு தம் குடும்பத்துடன் லண்டனுக்குச் சென்று கொண்டிருந்தார். ஜின்ஜர் என்ற ஒரு ஸ்ரீமதியும் இதே கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். ஸ்ரீமதி ஜின்ஜருக்குப் பதினேழு பதினெட்டு வயதுதான் இருக்கும். பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள். ஸ்ரீமதி ஜின்ஜரும், ரின்னிங்டன் பிரபுவும் தன்னோடு பேச முயலுவதைக் கண்ட நடராஜனுக்கு சற்று சங்கடமாகவே இருந்தது.

## பெரிய பதவியும் பெரிய புத்தியும்

லார்டு ரின்னிங்டன் பிரபுவும் அவரது மனைவியாரும் வயது முதிர்ந்த தம்பதிகள். ஆங்கிலேயர்களேயாயினும் நம் இந்திய நாட்டின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் மிக்க கவலை கொண்டவர்கள். லிபரல் கட்சியினர் பதவியிலிருக்கும் காலத்தில் 'இந்தியர்களுக்குச் சுயேச்சையைக் கொடுங்கள்' என்று காமன்ஸ்சபையில் மிகவும் வற்புறுத்திப் பேசியவர் இப் பிரபு. பிரபுவின் புத்திமதியை மிக மேதாவிகளான பெரும் பான்மை லிபரல் கட்சியினர் அன்று அங்கீகரிக்க வில்லை. இன்று சற்று உணர்ந்ததால் ஏதோ 'கொஞ்சம்' கிடைத்திருக்கிறது போலும்! நம் நாட்டின் மேல் உள்ள பற்றுதலால் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து நாட்டின் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளுவதற்காக தமது தள்ளாத வயதில் புறப்பட்டு வந்த இப் பிரபு, தம் நாட்டை நோக்கித் திரும்பிச் செல்லுகிறார்.

பெரும் பதவி வகித்துப் பெரிய புத்தியை யுடைய, இந்தியர்களை நேசிக்கும் இத் தம்பதிகள் நமது நடராஜனுடைய அடக்க ஒடுக்கத்தையும், கம்பீரமான தோற்றத்தையும் கூர்ந்து கவனித்து, இவன்மேல் பற்றுதல் கொண்டார்கள். கப்பல் துறைமுகத்தைக் கடந்து சென்று அரபிக்கடலில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்த ஒரு நாள் மாலையில், பிரபுவும் சீமாட்டியும் உல்லாசமாகக் கப்பலின் மேல் தட்டிலுள்ள சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவ்வழியே உலாவச் சென்ற நடராஜனை, ரின்னிங்டன் பிரபு தம் அருகில் அழைத்து உட்காரும்படி வேண்டினார். உற்சாகமாகப் பேசும் பிரபுவோடு தானும் சற்றுப் பேச

உட்கார்ந்தான். அவர்கள் தோரணையிலே பேச்சைத் தொடங்கினுன். "பிரபுவே! தாங்கள் என்மேல் கொண்டுள்ள அபிமானத்துக்கு மிக்க வந்தனம். நான் மேல்படிப்பின் பொருட்டு லண்டனுக்குச் செல்லுகிறேன் இரண்டு வருஷம் நான் அங்கு தங்க நேரிடும்." என்ருன்.

"குழந்தாய்! நீ பேசும் தோரணையிலிருந்து நீ அதி உன்னத பதவிக்கு வரக்கூடியவன் என்று எனக்குத் தோன்றுகின்றது. நீ உன் காலத்தைச் செவ்வனே பயன்படுத்திக்கொள்ளுதல் அவசியம். நீ லண்டனுக்கு முதல் தடவையாகச் செல்வதால் உனக்கு அறிமுகமானவர்கள் யாரும் அங்கிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். என்ருல் ஆன உதவியை உனக்கு நான் செய்யத் தயாராயிருக்கிறேன். நீ சங்கோஜமின்றி என் ஜாகைக்கு அடிக்கடி வந்து வயதானவர்களாகிய எங்களைக் கண்டு போகவேண்டு மென்பதே எங்கள் விருப்பம்" என்ருர்.

"அன்புமிக்க பெரியோரே! 'நல்லாரைக் காண்பதுவும் நன்று, நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்று' என்பதாகத் தமிழிலே ஒரு பழமொழி உண்டு! நான் உங்களிடம் பேசிப் பழகும் பாக்கியத்தை பெற்றதிற்காக மிக மகிழ்கிறேன். முன் பின் நாம் சந்தித்ததில்லை. இருந்த போதிலும் தூய அன்பின் பாசம் நம்மைப் பிணைக்கிறது. இது இயற்கையின் நியதி போலும்! அம்மையாரையும் நான் அடிக்கடி வந்து தரிசிக்க ஆவலுள்ளவனுக இருக்கிறேன். ரொம்ப சந்தோஷம்" என்ருன்.

பிரபுவுக்கு ஒரே ஆச்சர்யமாகப் போய்விட்டது. "ஆங்கில பாஷையை ஆங்கிலேயரைக் காட்டிலும் அதி அற்புதமாகப் பேசக் கற்றுக்கொண்ட என் குழந்தாய்! ஆங்கிலேயர்களாகிய எங்கள் வாழ்க்கையில் நிலவிவரும் நல்ல பழக்க வழக்கங்கள் என்று உன்மனதிற் பட்டவை

களைக் கற்றுக்கொள். உன் தாய்நாட்டுக்குப் பயன் தரக்கூடிய கல்வியை மிகவும் ஊக்கத்துடன் கற்றுக் கொள்வதுமின்றி நீ கற்றுக் கேட்டறிந்த விஷயங்களை உன் தாய் நாட்டு ஏழை மக்களின் பொருட்டு பிரதிபலன் கருதாது உபயோகப் படுத்துவதே நீ தாய் நாட்டுக்குச் செய்யும் கடமைகளில் மிகவும் முக்கியமானது. சிறி தளவு சுயேச்சையை இன்று நாங்கள் உங்களுக்குக் கொடுத் திருக்கிறோம்! உன்னைப் போன்ற இளைஞர்கள் மூலம் உங்கள் நாடு முழுச் சுயேச்சையையும் சீக்கிரம் அடையுமென நம்புகிறேன்'' என்றார் ஆனந்தம் பொங்க.

"வயதிலும் அறிவிலும் சிறியவனான நான், அறி விலும் வயதிலும் பெரியோரான தங்களிடம் தேசீயப் பிரச்னையைப் பற்றிப் பேசினால், நான் தறுதலைக் கொம் பென்று நீங்கள் நினைப்பீர்கள். அரசியல் விஷயமாக ஒன்றும் பேச நான் விரும்பவில்லை. எங்கள் நாட்டுத் தேசீயத் தலைவர்கள் சாத்வீகத் தன்மையைத் தலைமை யாகக் கொண்டு இன்று சிறிதளவேனும் சுயஆட்சியின் எல்லையை எட்டிப் பார்த்தது உங்களைப் போன்ற சுயநல மற்ற ஆங்கில அரசியல் வாதிகளால் தான் என்பதை நான் அச்சமின்றிக் கூறுவேன். சிறிதளவு சுயஆட்சியை எங்கள் நாட்டினர் இன்று அனுபவிப்பதற்கு ஊன்று கோலாயிருந்த உங்களைப் போன்ற உத்தம ஆங்கிலேயர் களுக்கு எங்கள் நன்றி. இதற்குமேல் இது பற்றி நான் பேசினால் என் சுதந்திர ரத்தம் துடி துடிக்கும். உலகம் முழுவதற்கும் பரிபூரண சுதந்திரம் வழங்க வேண்டும் என்பதே எங்கள் லட்சியம். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்' என்ன ஒப்புக்கொள்ளு கிறீர்களா?'' என்றான். "ஆம்'' என்று பிரபு ஒப்புக் கொண்டார். மேலும் சற்று பேசிக் கொண்டிருந்து விட்டு நடராஜன் அங்கிருந்து எழுந்து சென்றான்.

# ஸ்ரீமதி ஜின்ஜர்

நடராஜன் அறைக்குப் பக்கத்தில் இருந்த ஸ்ரீமதி ஜின்ஜர் லண்டனுக்குப் பத்து மைல் தூரத்திலுள்ள பேட்டர்சி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவள். அங்கு அவளுக்குச் சொந்தமான அழகிய மாளிகை ஒன்று இருக்கிறது. அவளுடைய தந்தை லண்டனில் வெளியாகி வரும் பிரபலமான தினசரிப் பத்திரிகை ஒன்றுக்குச் சொந்தக்காரர். பத்திரிகை மூலம் அளவிறந்த பணம் சேர்த்தார். மகளிடத்தில் உயிருக்குயிராக இருந்தார். பெற்றோருக்கு ஒரே பெண்ணானதலால் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்க்கப் பட்டவள். நன்றாகப் படிக்கவும் வைத்தனர். இலக்கியத்திலும் சரித்திரத்திலும் இயற்கையிலே இவளுக்கு ஈடுபாடு அதிகம். ஆகையால் இந்தியாவைப் பற்றி நன்கறிந்திருந்தாள்.

ஸ்ரீமதி ஜின்ஜருக்காகத் தாய் தந்தையர் ஆடை ஆபரணங்களின் பொருட்டுச் செலவு செய்த தொகை கணக்கிலடங்காது! அந்தப் பணத்தில் ஆயிரம் ஏழை இந்தியக் குடும்பங்கள் அனேக வருஷங்களுக்கு சுகமாகச் சுகஜீவனம் செய்யலாம்! விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிவதில் நம்ம பெண்களையெல்லாம் தூக்கி அடிக்கக்கூடியவள் ஸ்ரீமதி ஜின்ஜர்! லண்டன் நகரிலுள்ள பெரிய பிரபுக்கள் குடும்பப் பெண்களிலெல்லாம், ஸ்ரீமதி ஜின்ஜர் மிகக் கட்டழகு வாய்ந்தவள் என்று கருதப்பட்டு வந்தாள். அதை நிரூபிக்க அவர்கள் அழகுப் போட்டிப் பந்தயங்களில் இவளுக்கு எத்தனையோ தரம் முதற் பரிசு கிடைத்திருக்கிறது. அழகி என எடுத்துச் சொல்ல வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

ஏராளமான பொருளை அரும்பாடு பட்டுச் சம்பாதித்த ஸ்ரீமதி ஜின்ஜரின் தாய் தந்தையர், வெண்ணை திரளும் சமயத்தில் தாழி உடைந்தது போல், தக்க வயதில் ஸ்ரீமதியைத் தனியே விட்டுக் காலமாகி விட்டார்கள். ஆக, எல்லாச் சொத்துக்கும் இவளே ஏகநாயகி ஆகி விட்டாள்! பெற்றோரை இழந்த துக்கத்தை மறக்கப் பூமித் தாயைச் சரணடைந்தாள். அதாவது நிலபுலன் களிலே தன் கவனத்தைச் செலுத்தினாள். உயர்தர ஊதியம் பெறும் காரியஸ்தர்களின் உதவியை வெறுத்துத் தானே சகல காரியங்களையும் கவனித்து வந்ததால், தன் பெற்றோர்கள் தனக்கு வைத்து விட்டுச் சென்ற சொத்துக்களை பதின் மடங்கு விருத்தி செய்ய அவளால் முடிந்தது.

ஸ்ரீமதி ஜின்ஜரின் அழகுக்காக ஆங்கிலப் பணக்காரப் பிரமுகர்களின் மக்கள் பலர் இவளைக் காதலித்தனர். ஜின்ஜரின் எண்ணிறந்த ஐசுவரியத்தில் காதல் கொண்ட ஒரு சில இளைஞர் இவளது நேசத்தைப் பெரிதும் விரும்பி நாடினர். மற்றும் சில காளைகள் அழகில் தங்களை மன்மத இனத்தில் இணைத்துக் கொண்டவர்கள், தங்கள் அழகுக்காக இப் பெண்மணி தங்களை நாடுவாள் என்று எதிர்பார்த்து, தினம் தவறாமல் தாங்கள் கோர ரூப சொரூபர்களாக நடமாடி வந்தனர். இதைப் போன்று இன்னும் எத்தனை எத்தனையோ மனப்பான்மை யுடைய மணமாகா மாணிக்கங்கள் அம்மையார் காலால் இடும் வேலையைக் கையால் செய்து, அவளது நன்மதிப்பைப் பெறக் காத்துக் கொண்டிருந்தனர். இக் கூட்டத்தினரை எள்ளளவேனும் ஏறெடுத்துப் பாராமல் வெறுப்புக் கொண்ட ஸ்ரீமதி இவர்களுக்கு 'நமஸ்காரம்' செய்து தனக்குக் கல்யாணத்தில் கடுகளவேனும் கருத்தில்லை யென்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

இப்போது ஸ்ரீமதி ஜின்ஜர் தனக்குச் சொந்தமாய் நீலகிரியிலுள்ள சில பெரிய தேயிலைத் தோட்டங்களை விற்று விட்டுப் போகவே இந்தியாவுக்கு வந்திருந்தாள். எப்போதோ தந்தைக்குச் சொல்ப விலைக்குக் கிடைத்தது. தற்போது வந்த வேலையை வெற்றிகரமாய் முடித்துக் கொண்டாள். பதினாயிரம் ரூபாய்க்கு என்று ஞாபகம் தந்தை வாங்கியது. இத்தனை காலம் ஆண்டு அனுபவித்த பிறகுதோட்ட மொவ்வொன்றையும் லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு விற்க முடிந்ததை எண்ணினால் அவளுக்கே வியப்பாகத்தான் இருந்தது. யுத்த காலத்தில் அபரிமித மான ஐசுவரியத்தைச் சாய்வு நாற்காலிகளில் உட்கார்ந்த படியே சம்பாதித்துக் கோட்டைகள் கட்டிக் கொண்ட கோடீசுவரப் பிரபுக்கள் சிலர் வாழும் இந் நாட்டிலே இந்த நாளில், ஸ்ரீமதி ஜின்ஜர் அதிக விலைக்குத் தன் தோட்டங்களை விற்றதில் அதிசயம் ஒன்றுமில்லை. அன்னிய நாட்டு அம்மையார் அதிகப்பணம் பெற்றுச் சீமைக்குச் சுழற்றிக் கொண்டு போகிறாள் என்று ஆத்திரப் படுவதில் அர்த்தமும் இல்லை! நம்மவர்கள் இண்டப்பிசினாரிகள், தேயிலைத் தோட்டங்களின் நன்மதிப்பை நன்கு அறியாதவர்கள் என்று தப்பு அபிப்பிராயம் கொண்ட ஜின்ஜர், தனக்கு இந்தியப் பணக்காரப் பிரபுக்கள் மேல் ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டு 'என்னை நேசி' என்னும் கப்பலில் ஆனந்தமாகப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறாள்.

அழகிலும் ஆதிக்கத்திலும் சிறந்த பல ஆங்கிலேயப் பிரபுக்கள் காதலை வெறுத்துத் தள்ளிய ஸ்ரீமதி ஜின்ஜருடைய வாழ்விலே ஒரு புது அத்தியாயம் இப்போது ஆரம்பமாகி இருக்கிறது. அவள் இதயத் தாமரை எந்தக் கதிர்களுக்காக ஏங்கி எதிர் பார்த்துக் கொண்

டிருந்ததோ அந்த இளம் கதிர் மெல்ல மெல்ல ஒளி வீச ஆரம்பித்து விட்டது. நடராஜனைக் கண்டது முதல் அவளுடைய கனவிலே ஒரு புது இனிமை தோன்ற ஆரம்பித்தது. அவனோடு பேசவேணும் என்று அவளுடைய இதயம் கீதமிசைத்தது. தனக்கே தெரியாமல் தன்னிடம் ஏற்பட்ட இம்மாறுதலைக் கண்ட அவளுக்கே ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருந்தது. இது காதலின் மந்திர சக்தி போலும்!

## கண்கள் உறங்கக் காரணமுண்டோ?

இயற்கை கண் எதிரே கட்டோடு விரிந்து அழகின் அலைகளைப் பரப்பிக் கொண்டிருந்தது. நடராஜன் கண்டு கண்டு களித்தான். இதயம் பூரித்தான். ஓர் நாள் கப்பலின் மேல் தட்டில், 'நான் மேற்கே போகிறேன்' என்று காரகா எழுதிய புத்தகத்தை கையில் வைத்துக் கொண்டு நடராஜன் கடல் அலைகள் மேலும் கீழும் விழுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். 'தனிமை கண்டதுண்டு, அதிலே சாரம் இருக்குதம்மா' என்று யாரோ அவன் காதில் ஓதுவது போல் இருந்தது. புத்த கத்தைப் படிக்கவும் மனமில்லை. இயற்கையைக் காணவும் நெஞ்சில் இனிப்பேற வில்லை. பின்னே என்ன? எதை நாடி உள்ளம் சோர்வும் சலிப்பும் கொள்ளுகிறது? இந் தக் கேள்வியைத் தன்னிடமே கேட்டுக் கொண்டான். அதற்குப் பதில் கூற வந்தவள் போல் ஸ்ரீமதி ஜின்ஜர் தோன்றினுள்! "உங்களுக்கு வந்தனம்! தன்னந்தனி யாக ஏகாந்தமாக நின்று கொண்டு என்ன செய்கிறீர் கள்?" என்ற வார்த்தைகள் முடியு முன்பே நடராஜன், சடக்கென்று திரும்பினுன். அங்கே அலங்கார பூஷி தையாக அறிமுகமில்லாத ஒரு இளமங்கை நிற்பதைக் கண்டு சற்றே திகைத்தவனுக, ஆனுல் பதிலுக்கு, "உங்க ளுக்கு வந்தனம்! ஆமாம், சுற்றியுமுள்ள, இக் காட்சி களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்ருன்.

"சமுத்திர அலைகள் புரியும் இந்த மாயா ஜாலத் திலே என்ன இன்பத்தைக் கண்டீர்களோ? இயற்கை விநோதங்களில் உங்களைப் போன்ற இளைஞர்கள் ஈடுபட லாகாதே" என்று சொல்லிக் கொண்டே இன்னும் சற்று அருகே வந்தாள். நடராஜனுக்குச் சிரிப்பு வந்தது.

சிரிப்பை அடக்கிக்கொண்டு, "உங்கள்பெயர் என்னவோ" என்றான். கேட்காவிட்டாலும் சொல்லத்தானே ஸ்ரீமதி ஜின்ஜர் வந்திருக்கிறாள். தன் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள். 'சுருக்கமாக' என்றால் ஒரு மணி நேரம் நடராஜனுக்கு பேசவே இடந்தராமல் சரமாரியாகத் தன்னைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தாள். மேலும் தன் சுய படலத்தைத் தொடர்வதற்காக வேண்டி நடராஜன் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்திலிருந்து எவ்விதமான உணர்ச்சியையும் அவள் தெரிந்துகொள்ளக் கூடவில்லையாதலால், பின்னும் கதையை ஆரம்பித்தாள், நடராஜனுக்கு அது கதைமாதிரி பட்ட தென்றாலும். தனது வாழ்க்கைக் கதை அவனது நினைவுப் படலத்திலே மெல்ல மெல்ல உருக்கொள்ள ஆரம்பித்தது. அந்த இன்ப துன்பச் சுழற்சியிலிருந்து மேலெழ வெகு நேரம் சென்றது. அக் காட்சிகளுக் கிடையே கண்ணம்மாவின் கனிந்த பார்வை அவனைக் கை கூப்பி அழைப்பது போல் இருந்தது. இந்த உலகையே மறந்து அவன் நின்று கொண்டிருக்கையில் ஸ்ரீமதி ஜின்ஜர் தன் வாழ்க்கை ஏடுகளைப் பிரித்துப் பிரித்து அவன் முன் வைத்துக்கொண்டிருந்தாள். "என்ன நான் சொல்வதைக் கேட்கிறீர்களா?" என்று அவள் கேட்டுக் கொண்டே, முதுகின் மீது தமாஷாகத் தட்டவும் தான் சுயப் பிரக்ஞை அடைந்தான். பேச்சை விட்ட இடத்தில் ஆரம்பிக்கிறவன் போல் சம்பந்த மில்லாமல் பேச ஆரம்பித்தான். "இயற்கை தன்பரம ரகசியங்களை அறிவுறுத்துவாள் என்று ஆங்கில ஆசிரியர்கள் அநேக புத்தகங்களில் எழுதியிருப்பதை நீங்கள் வாசித்த தில்லையா? இயற்கை இன்பத்தை அனுபவிக்க வயோதிகர்களாகவும் வாலிபர்களாகவும் இருக்கத் தேவையில்லை. சகலரையும் இயற்கை சரி சமான மாகப் பாவித்துத் தன் எழிலைப் பொழிந்து காட்டக் கூடியவள். தாயே, அம்மா இயற்கைத் தேவி! நீ நீடு வாழ்வாயாக!" என்றான்.

"நன்ருகச் சொன்னீர்கள், ராஜா!" என்று கூறி விட்டு, "எனக்கும் கல்யாணமாக வில்லை...என்று" ஆரம் பித்தவள் வேறு எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டு, "படிப்பின் பொருட்டு லண்டன் செல்கிறீர்கள்? இல் லையா?" என்ருள். "ஆமாம்" என்ருன். "கல்யாணமாகாத நாமிருவரும் ஒரே கப்பலில் செல்லுவது,மிகவும் சந்தோஷ கரமான சமாச்சாரம் என்று நான் நினைக்கிறேன்!" என்ருள். அதில் என்ன சந்தோஷம் இருக்கிறதென அவனுக்குத் தெரியவில்லை! "இதோபாருங்கள், கப்பலின் மேல் தட்டில் நின்று சமுத்திரத்தையே உற்று நோக்கி என்ன இன்பத்தை அனுபவிக்கிறீர்கள்? இதைவிட மேலான இன்பம் இல்லை என்ரு நினைக்கிறீர்கள்?" என்ருள்.

"அப்படியொன்றுமில்லை. சமுத்திர அலைகள் ஒன் ருேடொன்று மோதிக்கொண்டும் கட்டியணைத்துக்கொண் டும் வந்து நம் கப்பலிடம் ஏதோ ரகசியம் பேசுகின்றன இல்லையா?" என்ருன்.

"ஆகா! வெகு அழகாகச் சொன்னீர்கள்!" என்று ஆமோதித்து ஸ்ரீமதி ஜின்ஜர் குரலில் மதுரம் ததும்ப, "இதைப் பார்க்கையில் கள்ளம் கபடமிலாத இரு உள் ளங்கள் வாழ்க்கையில் அந்திய காலம் வரையிலும் இந்த அலைகளைப் போல் சதா காலமும் கட்டியணைத்து இணை பிரியாமல் இன்ப முறுவதைப் போல் ஓர் காட்சி தென் படுகிறது. அலைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு வருவதால் உண்டாகும் இசை, இனிய ராகம் போன்றது. எனக்கு உங்கள் சங்கீதத்திலும் மோகம் உண்டு. நீல கிரிக்கு சிறுவயதில் அடிக்கடி வந்து போனதால் சங்கீதத் தையும் அனுபவித் திருக்கிறேன். எனக்கு இப்படித் தோன்றுவது உங்களுக்கு எப்படிக் காட்சி தருகிறதோ?" என்ருள்.

"எனக்கும் அப்படித்தான்!" என்றான் ஒரு வார்த்தையில்.

"ஆங்கிலக் கவிதைகள் அநேகம் வாசித்திருக்கிறேன். காதல் ததும்பும் கற்பனைச் சித்திரங்கள் பல வாசித்திருக்கிறேன். இயற்கை வர்ணனை ததும்பும் புத்தகங்கள் பலவற்றை அனுதினமும் வாசித்து வருகிறேன். ஆனால், இன்றுதான் உங்கள் மூலம் சமுத்திர அலைகள் காதல் கீதத்தைப் பாடுகின்றன என்னும் இன்ப ரகசியத்தைக் கற்றுக் கொண்டேன்! அதற்காக என் நன்றியைத் தெரிவிப்பது நியாயந்தானே?" என்றாள்.

"சகோதரி, சற்று இனிமையாக பேசிக் கொண்டிருந்ததற்காக என் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் சென்று வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அப்புறம் செல்ல எத்தனித்தான்.

"ராஜா! சற்றுப் பொறுங்கள். என்ன இவ்வளவு அவசரப்படுகிறீர்? நாளையதினம் எனக்குப் பிறந்த நாள். எங்கள் நாட்டு வழக்கப்படி அதைக் கொண்டாடுகையில், அதில் நீங்களும் கலந்து கொள்ள வேண்டும். என் அறைக்கு வந்து சிறிதளவாவது-மன்னிக்க வேணும்; மது வருந்தும் வழக்கம் உங்களுக்கு உண்டல்லவா? என்னைப் பெருமைப் படுத்து வீர்கள் அல்லவா?" என்றாள்.

நடராஜனைக் கடலுக்குள் தூக்கிப் போட்டது மாதிரி இருந்தது! "அம்மணி! நான் உங்கள் அறைக்கு வருவதென்பது முடியாத காரியம். இரண்டாவது மது அருந்தும் வழக்கம் என்னிடம் இல்லை தாயே! எங்கள் நாட்டில் மது வென்னும் மகாக் கொடிய அரக்கனை நூறு அடி ஆழ முள்ள குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள். நீங்கள் நீடூழி வாழ வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்! தயவு செய்து என்னை மன்னியுங்கள். நான் சென்று வருகிறேன்" எனப் புறப்பட்டான்.

"ராஜா கொஞ்சம் பொறுங்கள். உங்கள் வாழ்த்து தலை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஐசுவரியத்திற் சிறந்த அமெரிக்காவில் மது விலக்குத் திட்டம் வெற்றி கரமாக நடைபெற வில்லை என்பது உலகறிந்த விஷயம். உங்கள் நாட்டிலும் மது விலக்குத் திட்டம் வெற்றிகர மாக நடை பெறு தென்று நான் இன்று சொல்லும் ஜோ சியத்தின் உண்மையை நீங்கள் பின்னுல் ஓர் நாளைக்கு நினைக்க நேரிடும்" என்றுள்.

"அத்தகைய கஷ்டம் எங்கள் நாட்டில் நேராதென்றே நாங்கள் நினைக்கிறோம். எங்கள் நாட்டில் நூற்றுக்கு இருபது பேர்கள் தான் கொல்லாமல் கொல்லும் எம தர்ம ராஜரின் அம்சமாகிய மதுவை அருந்துகிறுர்கள்! செல்வத்திற் சிறந்த அமெரிக்காவிலும் நாகரிகத் திமிர் கொண்ட உங்கள் நாட்டிலும் நூற்றுக்கு தொண்ணூற் றைந்து பேர் அனுதினமும் மதுவை அருந்தி மண்ணுலக வாழ்க்கையில் மதிப்பை இழந்து மடிகிறுர்கள். அதோடு குளிர்ப் பிரதேசமாகிய உங்கள் நாட்டில் மதுவை மருந் தாக உண்ணுதல் மிக்க அவசியம் என்ற நம்பிக்கை கொண்டவர்களாய் நீங்கள் வாழ்கிறீர்கள். அதற்கும் இதற்கும் வெகு தூரம்" என்றுன்.

"அதுசரி. ரசாயன முறைப்படி தயாரித்த திராட்சை ரசத்தை மது வென்றழைப்பவர்கள் மதியீனர்கள் கூட் டத்தைச் சேர்ந்தவர்கள். இப்படி நான் சொல்வதால் தாக் கிப் பேசுவதாக எண்ணுதீர்கள். தப்பு அபிப்பிராயம் கொள்ளாதீர்கள்" என்றுள் உணர்ச்சியோடு.

"மதுவை அருந்தும் மந்தகாச வண்டுகள் மதுவை திராட்சை ரசம் என்னும் மனோகரப் பெயர் கொண்டு அழைப்பது ரொம்ப பொறுத்தம் தான். மறுப்பது மதி

யீனம் தான் அம்மணி! அபிப்பிராய பேதத்தால் நீங்கள் சொல்பவைகளை நான் தப்பு அபிப்பிராயமாகவும் கொள்ளமாட்டேன்'' என்றான்.

பதிலுக்குப் பதில் பேசிக்கொண்டே போனால் விவாதம்தான் நீண்டு கொண்டு செல்கிறதே தவிர, நடராஜன் உள்ளக் கருத்தை அறிய முடியவில்லையே என்ற வருத்தம் அவள் மனசுக்குள் எழுந்தது. எப்படியும் நேரிடையாக ஆரம்பிக்க வேண்டியதே என எண்ணி, ''கப்பல் கரை சேருவதற்கு இன்னும் நான்கு தினங்களேயிருக்கின்றன. கப்பலில் முதல் தடவையாக உங்களைப் பார்த்தது முதலே கொஞ்ச நேரமாகிலும் உங்களுடன் பேசி அனுபவிக்கும் இன்பத்தைப் பெறுவேனா என்று சந்தேகம் கொண்டேன்......'' என்று மேலும் தொடருமுன், நடராஜன் இடைமறித்து, ''ஏதேது! பீடிகை பலமாக இருக்கிறதே? பலத்த பீடிகை போட்டுப் பேசுபவர்கள் சொல்வதின்னதென்று தெரியாமல் உளருபவர்கள் தான், சந்தேகமில்லை. நீங்கள் சொல்ல விரும்புவதை, சுருக்கமாக ஐந்து நிமிஷங்களில் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றான்.

''காதலர்கள் காலத்தைக் கடத்தப் பேசிக்கொண்டே போவது கண்யமான தந்திரங்களில் ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்களா?''

''காதலைப் பற்றியும் கண்ணியமான முறைகளைப் பற்றியும் எனக்கு ஒன்றுமே தெரியாது! காலதாமதமாய் விட்டது. சென்று வருகிறேன்''

''இன்னும் நீங்கள் குறிப்பிட்ட ஐந்து நிமிஷங்கள் ஆகவில்லையே! தெரியாதவர்களுக்கும் புரியாதவர்களுக்கும், தெரியவும் புரியவும் வைப்பது கற்றோர்க்கு அழகு என்று எங்கள் உபாத்தியாயர் சொல்லிக் கொடுத்திருக்கிறார்''

"உங்கள் உபாத்தியாயர் மூளையைத் திராவகத்திலிட்டு உங்கள் நகரக் கண்காட்சி சாலையில் வைப்பது உங்களைப் போன்ற மாணவிகளுக்கு அழகு! காதலர்களைப் பற்றி பேச இது சமயமல்ல'' என்ருன்.

"பெரிய அவசரக் குடுக்கையாயிருக்கிறீர்களே? ஐந்து நிமிஷமாவது என்னுடன் பேசிப் பழக ஐந்நூறு வாலிபர்கள் காத்திருக்க நீங்கள் என்னைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லையே! மிகவும் நீங்கள் அவசரப் படுவதால் என் விருப்பத்தை ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன். அதாவது, கா...த...ல்''

இந்த வார்த்தைகளைக் கேட்ட நடராஜன் திகைப்படைந்தான்; திக்பிரமை அடைந்தான். மிகவும் வெறுப்பாகவும் இருந்தது அவனுக்கு. அங்கு ஒரு கணமும் இனிமேல் நிற்க மனமில்லாதவனுய், "உன் காதலுக்கு ஏற்ற காதலன் நான் அல்ல'' என்று மட்டும் பாதி சொல்லியதும், சொல்லாததுமாகச் சென்று விட்டான்.

ஸ்ரீமதி ஜின்ஜரும் மனத் தளர்வையும், வியாகூலத்தையும் வெளிக்குக் காண்பிக்காமல், ''நாளை நாமிருவரும் அவசியம் என் அறையில் சந்திக்கலாம்'' என்று சற்று உரக்கக் காது கேட்கும்படி சொன்ஞள். அது அவனுக்குக் கேட்டதோ என்னவோ!

## இன்பக் கனவு

நடராஜன் குலம் கோத்திரம் ஒன்று மறியாமலே அவள் தன் உள்ளத்தைச் சமர்ப்பித்து விட்டாள். ஆங் கிலப் பிரபுக் குழந்தைகளின் காதலையும், விவாக ஒப்பந் தங்களையும் உதறித் தள்ளிய ஸ்ரீமதி ஜின்ஜர் கப்பலில் எத்தனையோ இந்திய வாலிபர்கள் இருந்தும், நடராஜ னிடமே மையல் கொண்டாள். இதைக் காதல் என்ற அரும்பதம் கொண்டு அழைப்பதா? உணர்ச்சிக்கு அடி மைப் பட்ட அல்லது சர்வ சாதாரணக் 'காமம்' என்ற பெயர் கொண்டு அழைப்பதா?

அன்று இரவு சரியாகத் தூங்கவில்லை ஸ்ரீமதி ஜின் ஜர். நித்திராதேவி ஸ்ரீமதியை அலட்சியம் செய்தாளா? அல்லது ஸ்ரீமதி ஜின்ஜர் நித்திராதேவியை அலட்சியம் செய்தாளோ தெரியவில்லை. புரண்டு புரண்டு படுத் தாள், தூக்கம் வந்தால்தானே? நடராஜன் பேசுவது மாதிரியே காதில் விழுந்து கொண்டிருந்தது. மனப் பிர மையை மாற்ற மருந்து? புத்தகக் குவியலின் உதவியை நாடினாள். பிரெஞ்சு ஆசிரியர் ஒருவர் எழுதியதும், கஷ் டமின்றி வாசித்து இன்பத்தை அனுபவிக்கக் கூடியது மான ஒரு மூணாந்தர நாவலை வாசித்துக் கொண்டே இர வைக் கழித்தாள்!

நடராஜன் நடந்ததை அப்போதே மறந்து 'நான் மேற்கே போகிறேன்' என்னும் புத்தகத்தில், விட்ட இடத்திலிருந்து கொஞ்சம் எடுத்து வாசித்தான்! பிறகு லேசாக ஊர் நினைவு அலைபோல் உள்ளத்தைத் தொட் டது. அந்த ஆனந்த நினைவு தீண்டியதும் கற்பனை உல கில் சஞ்சரிக்க ஆரம்பித்தான். தூக்கம் கண்களைக் கௌவியது. ஸ்ரீமதி 'தூங்காமல் தூங்கிச் சுகம்' பெற் றுக் கொண்டிருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

கப்பல் கரைசேர இன்னும் மூன்றே நாட்கள் பாக்கி இருந்தன. பிரயாணிகளில் பலர் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் தங்களுக்குச் சொந்தமான வஸ்துக்களை ஒன்று சேர்த்துத் தங்கள் பெட்டிகளில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். மற்றும் பலர் பிரயாணத்தின் முடிவைக் கூடிய சீக்கிரத்தில் அடையப்போகிறோம் என்ற உவகையுடன் இருந்தனர். இந்திரலோகப் பதவியைத் தேடி இங்கிலாந்து செல்பவர்கள் உலகத்தை இன்னும் மூன்று தினங்களில் விலைக்கு வாங்குவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கூட்டல் கழித்தல், முதலான கணித சாஸ்திர உலகிலே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.

அரை குறையாக ஆங்கில பாஷையைக் கற்றுக் கொண்ட அப்பாவிப் பிரமுகர்கள் ஆங்கிலேயர்களுடன் பதினைந்து நாட்கள் கப்பல் யாத்திரையில் கஷ்டப்பட்டுப் பழகியும் தாங்கள் ஆங்கில விற்பன்னர்கள் ஆகவில்லையே என்று ஏக்கம் கொண்டு மேலும் ஆங்கிலேயர்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள்!

பிரயாணிகள் இவ்வாறாகத் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அதே சமயம் கடல் அரசியும் தன் கவனத்தை ஒரு திசையில் செலுத்த ஆரம்பித்தாள். பார்க்கப் பார்க்கப் புயல் எழுந்தது. காற்றின் வேகம் கட்டுக் கடங்கவில்லை. இடியோசையா? அலையோசையா? அல்லது ஊழிக்கூத்தா? அலைகள் மோகன ராகக் கீதங்களை மறந்து, ஒன்றையொன்று பின்னிப் பிரிந்து, தாறுமாறாக மேலும் கீழும் கப்பலின் அடித்தட்டில் வந்து மோதின. மலை முறிவது போன்றும் மரம் முறிவது போன்றும் அண்டப் கிடுகிடுக்க அரவம் எழுந்தது. 'என்னைநேசி' கப்பல் கரையைச் சேருமா? ஏதேது! அண்ட சராசரங்களையும்

அமுக்கி ஆழ்த்துவதே போல் கடல் பயங்கரமான ஓசையைக் கிளப்பிற்று. கப்பல் திசைமாறி தன் மனம் போன போக்கில் மாலுமிகளின் உதவியின்றி செல்ல ஆரம்பித்தது. மேற்றிசையை நோக்கிச் சென்று தெற்கு வடக்காக, திக்குமுக்காடத் தொடங்கிற்று. உள்ளே இருப்பவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந் தார்கள்!

உலகத்தையே மறந்து தூங்கிக் காலம் கழித்த பலர் தங்கள் சுகமான நித்திரையினின்றும் கலைக்கப்பட்டு விழித்தெழுந்தனர். இந்த ரகத்தில் சேர்ந்த மற்றும் சிலர் தங்கள் படுக்கையின் மேல் தட்டிலிருந்து கீழே விழுந்து பிரமித்து எழுந்தனர். இந்திரலோகம் செல்ல எண்ணியவர்கள் நரகலோகத்தில் தள்ளப்படுகிறோமே என்று நடுநடுங்கிக் கொண்டிருந்தனர். ஆங்கில பாஷையில் அபரிமிதமான காதல் கொண்ட அரைப் படிப்புத் தம்பிரான்கள், தங்கள் தாய் பாஷையில் ஆர்வம் கொண்டு, தங்களுக்கு நேரும் ஆபத்தின் விபரீதத்தைப் பற்றிப் பேசிக் கொண்டனர். பல இயற்கை வாதிகள் ஆஸ்திகர்களாக மாறி, 'எல்லாம் வல்ல எம்பெருமானே' என்ற தியானத்தில் ஈடுபடலாயினர்.

கப்பல் காரியஸ்தர்கள் பலர் எவ்வளவு சமாதான வார்த்தைகள் சொல்லியும், மரணத்துக்குப் பயந்த மகான்கள் பலர் சமாதான வார்த்தைகளில் நிம்மதி கொள்ள வில்லை. ஆனால் மேலும் மேலும் அவர்களுக்கு நம்பிக்கை யூட்டும் செய்திகள் சொல்லத்தான் வேண்டி இருந்தது.

நடராஜன் தன் அறையில் உள்ளவர்களுக் கெல்லாம் ஆறுதல் சொல்லித் தேற்றி, கப்பலின் தட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் சென்று அதைரியப் பட்டவர்களைத் தைரியப் படுத்தினான். நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கை

ஊட்டினுன். தன்னுல் ஆன உதவியைச் சகலருக்கும் செய்து வந்தான். ரின்னிங்டன் சீமாட்டி தன் படுக்கையினின்றும் கீழே விழுந்து, அதனுல் நெற்றியில் ஓர் சிறு வடு ஏற்பட்டு, உதிரம் கசிய தன் சுய அறிவை இழந்தவளாய்ப் படுத்துக்கொண்டிருந்தாள். வயோதிக ரின்னிங்டன் பிரபு தமது தள்ளாத வயதில் தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் கவனியாமல், தம் மனைவி பக்கத்தில் உட்கார்ந்து சிகிச்சை செய்துகொண்டிருந்தார்.

நடராஜனுக்கு அக்காட்சி உருக்கமாயிருந்தது. பெரியவரைச் சும்மா நிம்மதியுடன் இருக்கச் சொல்லிவிட்டு சீமாட்டிக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய ஆரம்பித்தான். சுமார் ஒருமணி நேரத்தில் அம்மையார் சிறிது சிறிதாகத் தன் சுய உணர்வைப் பெற்று எழுந்து உட்காரவும் முடிந்தது. பெரியவர் எழுந்து உட்கார்ந்து நடராஜன் கையைப்பிடித்துக்கொண்டு மனமுருகச் சொன்னுர்:

"அப்பனே, நாங்கள் ஒருநாளும் இந்த உதவியை மறக்க மாட்டோம். லண்டனுக்கு வந்த பிறகு என் வீட்டை உன் சொந்த வீடுபோல் பாவித்துக் கொள்ளப்பா'' என்ருர்.

நடராஜன் திரும்பி வருகிற வழியில் ஸ்ரீமதி ஜின்ஜர் இருந்த அறை வழியாகப் போக நேர்ந்தது. ஸ்ரீமதிக்கு சதா நடராஜன் ஸ்மரணையேதான். இருந்தாலும் 'இவன் கீழான இச்சைக்கு அடிமைப் படாதவன். வாழ்க்கையில் உயரிய நோக்கங்களைக்கொண்டவன்' என்னும் விஷயங்களை நன்கு அறிந்திருந்தாள்.

கப்பல் திசை தவறித் திண்டாடிக்கொண்டு போகிறதே, சுவர்க்கமாகிய லண்டன்மா நகரைப் பார்க்காமல் பாதாளலோகத்திற்குப் போகிருேமே என்று, ஏனைய

பிரயாணிகள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்க, செல்வத்திற் சிறந்த சீமாட்டி ஜின்ஜர், கப்பல் பாதாளத்துக்குப் போவதைப் பற்றியும் வருந்தவில்லை. கோடி செம்பொன் மதிப்புடையதன் நிலபுலன்களை யெல்லாம் இழந்து, மறுகணம் நீரில் வாழ் மீன் இனங்களுக்கு இரையாகப் போகிறோமே என்பதைக்குறித்தும் விசனிக்கவில்லை. நடராஜன் தன் அறைக்கு அன்று வருவானோ, வரமாட்டானோ, வந்தாலும் தன்னை ஏற்காவிடில் என்ன செய்வது என்பதைக் குறித்தே யோசித்துக் கொண்டிருந்தாள். அறையில் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தாள் என்றாலும் நெஞ்சில் நூறாயிரம் நினைவுகள் நிறைந்திருந்தன.

நடராஜன் மற்றவர்களை விசாரித்தது போல் ஸ்ரீமதிக்கு ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டிருந்தால் தன்னாலான உதவியைச் செய்யலாம் என்று எண்ணினான். ஸ்ரீமதி ஜின்ஜரின் அறைக்குள் பிரவேசித்தான். அவன் ஜின்ஜரைக் கண்டதும் மிகவும் லஜ்ஜை அடைந்து வந்த வழியே திரும்பிப் போவதென்று தீர்மானித்தான். ஏனென்றால் உடம்பின் மேல் பட்டும் படாததுமான மிக மெல்லிய பட்டாடைகளை அம்மையார் அணிந்திருந்தது மல்லாமல், எள்ளத்தனையும் கவலையு மின்றிக் காணப்பட்டாள்.

வெளியே நர்த்தனம் செய்யும் புயல் இவளை ஒன்றும் செய்யவில்லை. இதயப் புயல்தான் ஸ்ரீமதியை வாட்டிக் கொண்டிருந்தது. அறைக்குள் நுழைந்ததும் நடராஜனுக்கு வரவேற்பு ரொம்ப பலமாக நடந்தது. "என்னைப் பொருட்படுத்தி இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு இங்கு வந்ததற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்" என்றாள் ஜின்ஜர். "நீங்கள் விசேஷமாக ஒன்றும் செய்ய வேண்டாம். கப்பல் அதிர்ச்சியில் ஏதேனும் பயப்பட்டீர்களோ? அல்லது வேறு ஏதேனும்

விபத்து நேர்ந்ததோ என்று பார்த்து விட்டு என்னாலான உதவியைச் செய்யவே வந்தேன். நீங்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகாமல் சௌகரியமாய் இருப்பதைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது'' என்றான். "என் மீது கொண்டுள்ள அபிமானத்துக்கு நன்றி. நம்மைப் போன்றவர் இறப்பதற்கு பயப்படலாமோ? 'கோழைகள் இருந்தும் ஆயிரம் தரம் மடிகிறார்கள்' என்ற ஆங்கிலப் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்களே'' என்றாள்.

"வாஸ்தவந்தான், மேலானதத்துவமும் கூட. நல்லது, உங்கள் வீரத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்'' என்றான் நடராஜன் சிரித்துக் கொண்டே.

"என்னைப் புகழ்ந்து பேசுகிறீர்கள். இதேமாதிரி என்னைக் காதலித்தால், என் வாழ்வே சித்தி பெறும்.''

"அம்மணி தயவு செய்து காதல் என்னும் வார்த்தையை அடிக்கடி என்னிடம் உச்சரிக்காதீர்கள். மிகவும் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். வேறு ஏதாவது பேசத் தயார் இல்லையானால் இப்பொழுதே இந்த இடத்தை விட்டுச் சென்று விடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்.

"உட்காருங்கள், உட்காருங்கள். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கும் வந்து விடாதீர்கள். நம்மைப் போன்ற இரு இளம் உள்ளங்கள், ஓரிடத்தில் இருக்க நேரிட்டால் காதல், அன்பு, இன்பம், என்பவைகளைப் பற்றிப் பேசாமல், இறப்பின் இரகசியத்தைப் பற்றியா பேசுவார்கள்? உங்கள் நாட்டின் பழக்க வழக்கங்களில் இதுவும் ஒரு அம்சம் போலும்! சரி, அதையும் கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்றாள்.

"எங்கள் நாட்டிலே ஒரு வயது வந்த கல்யாணமாகாத ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து, ஒரு ஏகாந்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு, பேசிக்கொண்டிருப்பதே இல்லை, அம்மணி!"

"என்ன என்ன? ஒரு ஆணும் பெண்ணும் தனியாகப் பேசுவதே குற்றமா? விசித்திரமாகத்தான் இருக்கிறது! விபரீதமான சாஸ்திரம்! மிஸ் மேயோ என்ற அமெரிக்க அம்மையார் உங்கள் நாட்டில் பெண்களுக்குச் சுதந்திரமே இல்லை யென்றும், ஆண்களின் காம இச்சைக்கும், குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதற்குமே பெண்கள் ஏற்ற கருவிகளாய் இருக்கிறார்கள் என்றும் தம் இந்திய அனுபவப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறாரே! அது உண்மையா நிஜந்தானே?" என்று கிண்டலாகப் புன்னகை தவழும் முகத்துடன் கேட்டாள்.

"மிஸ் மேயோ அம்மையார் தம் அரை குறைப் படிப்பின் தவறுதல்களை புத்தக மூலமாக வெளியிட்டு தன்னைப் போல் வடிகட்டின அசடு உலகத்திலேயே இல்லை யெனும் உண்மையை மெய்ப்பிக்கும் எண்ணத்துடன் எழுதியிருக்கிறார். மேல் நாட்டினரைப் போல் இந்தியர்களும் ஆபாசமான பழக்க வழக்கங்களுக்கு அடிமைகள் ஆகவில்லையே என்ற பொறாமையுடன் எழுதிய புத்தகத்தின் சாராம்சத்தை உங்களைப் போன்ற கற்றறிந்த மேல் நாட்டுப் பெண் மணிகள் ஒவ்வொரு நாட்டின் பழக்க வழக்கங்களிலுள்ள நன்மை தீமைகளை சீர் தூக்கிப்பாராமல், ஒரு விதமான முடிவான அபிப்பிராயத்துக்கும் வரக்கூடாதென்பதே என்னுடைய வேண்டுகோள்" என்றான்,

"பேஷ் நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. தயவு செய்து என்னை மன்னியுங்கள்" என்று சொல்லி

விட்டு தயங்கிய வண்ணம், ''என் கேள்விக்கு இன்னும் நீங்கள் பதில் அளிக்க வில்லையே......'' என்றாள்

நடராஜனும் சாந்தமாகவே, ''சகோதரி, உங்கள் உள்ளக் கருத்தை நான் உணர்வேன். என்னை ஒரு இந்தியன் என்றும், நிறத்தில், கருப்பு நிற முடையவனென்றும் பாராமல், சகல செளபாக்கியங்களையும் நீங்கள் பெற்றிருந்தும், என்னை உண்மையாக விரும்புகிறீர்கள் என்பதை உணர்வேன். ஆனால் தங்கள் காதலை ஏற்றுக் கொள்ள என்னால் இயலவில்லை. ஏனென்றால் எங்கள் நாட்டிலேயே நான் ஒரு பெண்ணைக் காதலித்து விட்டேன். என் உள்ளம் அவளுக்கு ஏற்கனவே சொந்தமாகி விட்டது என்ற உண்மை ரகசியத்தை உங்களுக்கு தெரிவித்து விடுகிறேன். ஒரு மனிதன் வாழ்க்கையில், இன்பத்திலும் துன்பத்திலும், ஒரே ஒரு பெண்ணைக் காதலித்து, மணந்து அதனால் ஏற்படும் பலாபலன்களை அனுபவிக்க வேண்டுமென்பது எனது உறுதியான தீர்மானம். இந்தக் காரணங்களால் நான் இன்று முதல் உங்களை என் சகோதரி போல் பாவிப்பதாகவே முடிவு செய்திருக்கிறேன். இந்த முடிவை, நல்ல முடிவு என நீங்கள் ஒப்புக் கொள்ள வேணும். இந்த நிமிஷத்திலிருந்து நீங்கள் என் சொந்தச் சகோதரி'' என்றான்.

ஸ்ரீமதி ஜின்ஜரின் வாழ்க்கை வீட்டிலே அறிவுத் தீபம் ஏற்றிய பிரகாசத்தை உணர்ந்தாள். கொஞ்ச நேரம் அவளால் பேசவே முடியவில்லை. பிறகு மெதுவான குரலில், ''நிரந்தரமான காதலைக் கொண்டேன் என்று நான் சொல்வதை நீங்கள் முற்றிலும் உண்மையென உணர்ந்தால் அதுவே எனக்குப் போதுமானது. உங்கள் விருத்தாந்தத்தை அறிந்தபின், உங்கள் மேல் வெறுப்புக் கொள்வதற்குப் பதில் விருப்பமே கொண்டேன்.

இன்றிருந்து உங்களை என் சகோதரராகப் பெற்ற பாக்கியத்தை நினைக்க நினைக்க உவகையே உண்டாகிறது. பார்க்கப் போனால் அன்பும் காதலும் ஒன்றேதான்! இந்த தூய அன்பு என்றும் நிலைத்திருக்கட்டும். நிலைத்தே இருக்கும். ஒரு சிறிய வேண்டுகோள் உங்கள் நல்வாழ்வுக்காக என் செல்வம் அனைத்தையும் செலவழிக்கவும் தயாராயிருக்கிறேன். இதை நீங்கள் நம்பலாம். அதோடு தயவு செய்து அதை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். எனக்கு அதைவிட ஆனந்தம் தருவதுவேறு ஒன்றுமில்லை'' என்று தன்னிரு கண்களிலும் நீர்ததும்பக் கூறினாள். அன்பின் வெள்ளம் அவள் உள்ளம் முழுதும் நிறைந்திருக்கிறதென்பதை நடராஜன் அக்கணமே உணர்ந்து கொண்டான்.

ஸ்ரீமதி ஜின்ஜரின் முக அழகுக்கு அடிமையாகாவிட்டாலும் அவள் அக அழகுக்கு அடிமையானான். தனக்கொரு கூடப்பிறந்த தங்கை இல்லையே என்று வருத்தம் அன்றோடு தீர்ந்ததெனப் பூரித்துப் போனான்.

நடராஜன் இவ்விதச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில் ஜின்ஜர் அந்த ஆபாசமான உடைகளை மாற்றிக் கொண்டு, குடும்பப் பெண் போல் அவன் முன் வந்து நின்றாள். நடராஜன் அதை கண்டு உற்சாகமாகப் பேசினான். 'சகோதரி, ஒருதாய் வயற்றில் பிறந்து, சகோதரதத்துவம் கொண்டாடுவதைக் காட்டிலும், இரு தாய்மார்கள் வயிற்றில் பிறந்து ஜாதிமத பேதமின்றி சகோதரதத்துவம் கொண்டாடி மகிழ்வது சாலச்சிறந்தது. இந்த உலகத்தின் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் பிறந்த எல்லோருமே தாங்கள் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகள் என்னும் கொள்கையுடன் வாழ்வார்களேயானால் உலக மகாயுத்தங்களுக்கும், பேராசைக்கும், இவ்வுலகில் இடமே இருக்காது.

ஆனால் பேராசைப் பேய்வசம் அகப்பட்ட இவ்வுலக ராஜீய வாதிகள் இக் கொள்கை பரவாமலிருக்கும் பொருட்டு முட்டுக்கட்டைகள் போட்டுக் கொண்டே இருப்பார்கள். அதைப்பற்றிய பிரச்னைகளை நாம் நம் முடைய முதியோருக்கும் ராஜதந்திர வாதிகளுக்கும் விட்டு விடுவோம்! நமக்குள் இனிமேல் பேதமென்பது கிடையாது. எங்கள் நாட்டுத் துரைத்தனத்தாரே என் கல்வியின் நிமித்தம் ஏற்படும் சகல செலவுகளையும் ஏற்றுக்கொண் டிருப்பதால், மனமார அளிக்க வந்த இந்த உதவியை ஏற்க அசக்தனாய் இருக்கிறேன். தவறாகக் கொள்ளாமல் என்னை மன்னிக்கவும். ஆனால் நான் விரும் பியபடியே அடிக்கடி உங்கள் மாளிகைக்கு வந்து செல் கிறேன். என்று சொல்லிஅவள் மனதைத் தேற்றி விடை பெற்றுக் கொண்டு, தன் அறையை நோக்கிக் கிளம் பினான்.

மறுநாட் காலையில் சற்று அமைதி ஏற்பட்டது. இயற்கைத் தேவி சற்று சாந்தத்தோடு விளங்கினாள். மனமகிழ்ச்சி அடைந்தவளாய்த் தன் கொந்தளிப்பை அடக்கிக் கொண்டாள். ‘என்னை நேசி’ என்னும் கப்ப லும் யாதொரு விபத்துமின்றித் தன்னை நம்பி வந்தவர்களை நடுக்கடலில் கைகழுவி விடாமல் கரை கொண்டு வந்து சேர்த்தது! பிரயாணிகள் தத்தம் இடங்களுக்குப் புறப் பட்டார்கள். நடராஜன் தன்னோடு வரமறுக்கவே, ஸ்ரீமதி ஜின்ஜர் தனக்காக வந்த மோட்டாரில் ஏறிச் சென்றாள்.

ரின்னிங்டன் தம்பதிகள் நடராஜனுக்குத் தங்கள் ஆசியைத் தெரிவித்துத் தங்கள் மாளிகைக்கு அடிக்கடி வரும்படி கேட்டுக்கொண்டு தங்கள் இல்லத்தை நோக்கிச் சென்றார்கள்.

நடராஜனும் லண்டனை அடைந்து கேம்பிரிஜ் என்னும் கிராமத்திலுள்ள கிங்ஸ் கலாசாலைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்குதான் அவன் கல்விக் கட்டம் ஆரம்பமாக வேண்டிய இடம். சகோதர மாணவர்கள் சிலர் உற்சாகமாக வரவேற்றனர்.

## நாடகமே உலகம்

நடராஜனுடைய தாய் வள்ளியக்காள் கணவனையும் சொத்துச் சுதந்திரத்தையும் இழந்தாலும் கவுண்டர் வீட்டில் மகனோடு கொஞ்சம் நிம்மதியுடன் தான் வாழ்ந்து வந்தாள். 'சென்றதினி மீளாது' என்ற சித்தாந்தத்தில் தனக்கு மாணிக்கம் போல் ஒரு மைந்தனிருக்கிறுன் அதுவே போதும் என்ற உவகையுடன் காலத்தை வெகு சந்தோஷமாகக் கழித்து வந்தாள். ஆனால் திடீரெனத் தன்மகன் தன்னை விட்டுப் பிரிந்துபோன துக்கத்தை அவளால் சகிக்க முடியவில்லை. தன்மகன் படிப்பு ஏருத மண்டு மாணிக்கமா யிருந்தால்கூட இவ்வித கஷ்டம் தனக்கு நேர்ந்திராதே யென்று அடிக்கடி நினைத்து நொந்து கொண்டாள். ஒவ்வொரு நாள் செல்வதும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. கன்றை இழந்த பசுவைப்போல் துயரக்கடலில் மூழ்கிஞள். உடம்பு துரும்பாக இளைத்து விட்டது.

நடராஜன் சீமைக்குச் செல்வதற்குச் சில மாதங்களுக்கு முன்பே வியாதியின் கொடுமை தாங்காத தர்ம சாமிக் கவுண்டர் நிலை இப்போது மிகவும் பரிதாபகரமான கட்டத்துக்கு வந்து விட்டது. தான் திடகாத்திரத்துடன் இருந்த வரையிலும், தமது நில புலன்களை யெல்லாம், பிறர் உதவியின்றித் தாமே கண்காணித்து வந்தார். யாரேனும் உதவி செய்ய முன்வந்தாலும் அவர்கள் உதவி தனக்கு வேண்டியதில்லை யென்று வீராப்புக் கொண்டு தம் தேகபலத்தில் பலத்த நம்பிக்கை கொண்டவராய்த் தாமே ஓய்வு ஒழிச்சலின்றியும், காலாகாலங்களில் சரியான உணவின்றியும் எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார். அதன் பலனுக தற்போது கவுண்டரது திட

காத்திரமான உடல், ஓய்வு எடுத்துக் கொள்ளும் பொருட்டு கவுண்டரைப் படுக்கையில் தள்ளியது! கவுண்டரின் உடல்தான் ஓய்வு எடுத்துக் கொண்டதே ஒழிய அவரது உள்ளம் ஓய்வு கொள்ளவில்லை. அது பின்னும் வேகத்துடன் ஓடியாடி வேலை செய்து கொண்டுதான் இருந்தது!

தாம் திடீரென்று கண்ணை மூடி விட்டால் தமக்கப் புறம் இச் சொத்தைக் கண் காணித்து வர ஒருவரும் இல்லையே என்று ஏக்கம் கொண்டார். வளர்ப்புக் குழந்தை நடராஜன் வசம் ஒப்புவிக்கலாம் என்றாலோ பையன் மேல் படிப்பில் மோகம் கொண்டு மேல் நாட்டுக் குப் போய் விட்டான். திருப்பி வந்தாலும் பெரிய 'இங் கிலீஷ் துரை'யாகவே மாறி வருவான். பட்டிக் காட்டில் வாழ இசையாமல் பட்டினக்கரையில் வாழ இச்சை கொள்வான். படித்து வந்த பையன் குடித்தன வாழ்க் கையில் பற்றுக் கொள்ள மாட்டானே. இருந்தாலும் மேல் படிப்பிற்குப் போக நமது அனுமதி பெற்றுத்தானே சென்றான்? ஒரு வார்த்தை போக வேண்டாம் என்று சொல்ல மனம் துணிந்திருக்கக் கூடாதா? கல்வியும் வேண்டியதில்லை, கில்வியும் வேண்டியதில்லை என்று தான் சொல்ல புத்தி வந்ததா? நில், என்றால் நிற்கவும், உட் கார் என்றால் உட்காரவும் செய்யக் கூடிய உத்தமக் குழந்தையாயிற்றே? கொஞ்ச காலமென்றாலும் குடித் தனத்தை எவ்வளவு ஒழுங்காக நடத்தினான்? இந்தப் பாழும் வியாதி, என்னைத் தொத்திக் கொண்டே தொந் தரவு செய்து கொண்டு இருக்கும் என்று நினைத்திருந் தால் தானே பையனை ஊரை விட்டுப் போகாமல் இங் கேயே நிறுத்தி வைத்திருக்கலாம். இப்பொழுது தான் என்ன, வைத்தியர்கள் நிலைமை கேவலமாகி வருகிற தென்று சொன்னால், தந்தி கொடுத்து அழைத்து விட

லாமே? இப்படியாக எண்ணுத எண்ண மெலாம் எண்ணி எண்ணி ஏங்கினர். சதாகாலமும் சிந்தித்துக் கொண்டே தூக்கத்தைத் துறந்தார். எனவே கவுண்டர் தம் வியாதியை அதிகமாகச் சட்டை செய்யாமல், நடராஜன் பிரிந்து சென்றதைக் குறித்த பிரிவுப் பிணியால் அதிகமாக வருந்தினர்.

'ஈசன் விட்ட வழி' யென்று தம் மனதைத் தேற்றிக் கொண்டார். ஒருவரும் அறியாதவாறு வக்கீலைக் கூட்டி வந்து தமக்கு ஏதேனும் நேரிடின் தமது சொத்துக்கள் அனைத்திற்கும் நடராஜனே காரியஸ்தனுக இருந்து சகல வரவு செலவுக் கணக்குகளைக் கண் காணித்து நடத்த உரிமை பெற்றவன் என்பதாக ஒரு உயில் எழுதச் சொன்னுர். கவுண்டரின் இஷ்டப்படியே வக்கீலும் ஒரு உயிலைத் தயார் செய்து கவுண்டர் கையெழுத்திட்ட பத்திரத்தை ரிஜிஸ்டரும் செய்து விட்டார். இதற்கப்புறம் கவுண்டர் மனச் சாந்தி அடைந்ததுமல்லாமல் சிறிது சிறிதாக குணமாகியும் வந்தார்.

கண்ணம்மாவின் உள்ளம் வெயிலில் போட்ட ரோஜா மலரைப் போல் வாடிச் சோர்ந்தது. இருந்தாலும் தன் மனக் கவலையை பிறர் அறிய வெளிக்குக் காட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் இன்னும் வரவில்லை! மேலும் நோயால் வருந்திய தன் தந்தையாரையும், வள்ளியக்காளையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வேண்டிய பணி விடை செய்வதில் ஈடுபட்டிருந்தாள்.

அண்ணன் மேல் அதிருப்தி கொண்டு சென்ற செல்லக்காள், தன் மகனுக்குப் பெண் கொடுத்தால் ஒழிய அண்ணன் வீட்டை இனிமேல் எட்டிப் பார்ப்பதில்லை என்னும் முடிவான முடிவுக்கு வந்து விட்டாள். வீதியில்

போகிற வருகிற வம்புகளை விலை கூறி விலைக்கு வாங்கு வதில் தன் முழு கவனத்தையும் செலுத்தி வந்தாள். செல்வத்திற் சிறந்த செல்லக்காளைச் சம்பந்தியாக அடை வதற்கு அம்மையார் குணமறிந்த அவ்வூர் வாசிகள் இணங்கவில்லை. ஏழைக் குடும்பங்களில் வயதான பெண் களை அநேக தாய்மார்கள் வைத்துக் காத்துக் கொண் டிருக்க, செல்லக்காள், 'ஏழைப் பெண்கள் அறிவில் சிறந் தவர்களாயிருந்தாலும் பெண்ணினத்தைச் சேர்ந்தவர் கள் அல்ல' என்று உதறித்தள்ளி விட்டாள். தன்மக னுக்குக் கல்யாணம் செய்து வைத்து, தம்பதிகள் இனிது வாழக் கண் குளிரப்பார்த்து அனுபவிக்க வேண்டும் என் பதல்ல அவள் விருப்பம். தன் திருக் குழந்தையை ஓர் பொம்மை போல் மணப்பந்தலில் உட்கார வைத்து, தான் செல்வத்தை மணந்து இன்புற்று வாழவேண்டும் என்பதே அவள் விருப்பம்.

தன் முயற்சியால். தக்க இடத்தில், பெரும் பணத் தைச் சீதனமாகக் கொண்டு வரும் மருமகள் தனக்குக் கிடைக்கவில்லை என்று செல்லக்காள் சிறிதும் வருத்தப் படவில்லை. மகனுக்கோ 'கங்கணயோகம் இன்னும் வர வில்லை, காத்திருந்து தான் பார்ப்போமே' என்று தன் மன தைத் தேற்றிக் கொண்டிருந்தாள். 'ஓடு மீன் ஓட உரு மீன் வருமளவும் வாடியிருந்த' செல்லக் கொக்குக்கு, செல்வத்திமிர் கொண்ட மீன் ஒன்றும் தூண்டியில் அகப் பட்டது. நூறுகாணி நிலங்களுக்கும் குறைவாய் இருந்த ஒரு மிராசுதார், தம்மைத்தாமே ஜமீன்தாரர் என்ற பெயர் வைத்து அழைத்த வராய்த் தம் அருந்தவப் புதல்வி 'அழகு ரத்தினம்' என்ற பெயர் கொண்டவளைத் திரிபுர சுந்தரன் என்கிற வரனுக்குக் கொடுக்க ஆவலுடன் இருப்பதாக கடிதம் எழுதியிருந்தார். அதிசயமான இக் கடிதம் செல்லக்காளுக்கு அதிசயமாக இருந்தது.

மகனையும் கேளாமல் கணவன் அனுமதியையும் பெறுமல் வீட்டுக் காரியஸ்தன் மூலம் ஆனந்தத்துடன் மாப்பிள்ளை வீட்டார் இச் சம்பந்தத்தை வரவேற்பதாக எழுதி விட்டாள். கல்யாணமும் அதிவிமரிசையாக நடந்தேறியது! சம்பந்திகளைப் பொறுத்த வரையில் சரியான ஜோடிகள் என்றே சொல்ல வேண்டும்! தம்பதிகளைப் பொறுத்த வரையில் மிக ஏமாற்றகரமான திருமணம் என்றே சொல்ல வேண்டும்! ஏனெனில் கல்யாணமான சில தினங்களில் பெண் பெரும் செவிடு என்பதை மாப்பிள்ளை உணர்ந்தான். மாப்பிள்ளை மிருகத்தனம் வாய்ந்த 'முரடு' என்பதை மணப் பெண் உணர்ந்தாள்.

செல்லக்காள் ஜமீன்தாரைச் சுரண்டப் பார்த்தாள். ஜமீன்தார் செல்லக்காளைச் சுரண்டப் பார்த்தான். இரு திறத்தார் எண்ணமும் ஈடேறவில்லை!

இந்தக் கலியாண விமரிசைகளுக்கும், தர்மசாமிக் கவுண்டர் குடும்பத்திற்கு யாதொரு சம்பந்தமுமில்லை; பங்குமில்லை. நேரில் சென்று தன் அண்ணனை அழைக்கா விட்டாலும், திருமணத் திருத்தாளை யேனும் தபால் மூலம் அனுப்பியிருக்க வேண்டும். கோபாக்கினியில் மூண்டு செல்வச் செருக்கில் சிக்குண்ட செல்லக்காள் இம்மாதிரி செய்தால் தான் இதுபரியந்தம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துச் சேகரித்த 'நல்ல பெயர்' போய் விடுமே என்று பயந்து, அண்ணனின் விட்டைக் குறித்த விவரங்களையே மறந்து தன் மகன் கல்யாணத்தை நிறைவேற்றி வைத்தாள்.

## தேர்தல் திருவிழா!

நடராஜனுக்குக் கொஞ்ச நாள் எல்லாமே ஒரே ஆச்சரியமாக இருந்தது. லண்டனுக்கு வருமுன்பே அக் கலாசாலையைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிருன். உலக சரித்திரத்தில் மிகப் பிரசித்தி பெற்ற கலாசாலை களில் இதுவும் ஒன்று. இக்கலாசாலை நவீன நாகரிக கட்டிட சாஸ்திர முறைப்படி அமைக்கப் பட்டதல்ல. பண்டைக்கால ரீதிப்படி அமைக்கப்பட்ட பழமையான கட்டிடம். ஆயிரக்கணக்கான மாணவர்களை வாழ்க் கையில் வெற்றி பெறுவதற் கென்றே தயார் செய்து, அரங்கேற்றி தன் ஆசிகளுடன் அனுப்பிய பெருமையைக் குறித்து, கட்டிடத்தில் பொதியப்பட்டுள்ள, கல்களும் மண்களும், செங்கல்களுட்படவாயில்லாப் பொருள்களும் உவகை கொண்டு இன்றும் பூரிப்படைகின்றன! என் றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிருன்.

இதே கலாசாலையில் பயின்ற நம் தாய் நாட்டு இந் திய மாணவர்கள் பலர் கலாசாலையின் பரீட்சைகளில் தேறி இன்றும் நமது அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றனர். கல்வியைக் குறித்த வரையில் நம் நாடு பிற்போக்கான நாடு என்று பிரித்துக் காட்டு வது முட்டாள் தனமாகும். கற்றுக் கேட்டறிந்த கல்வி களை இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு நாடுகளும், பாரபட்ச மின்றியும், பொருமையின்றியும், பிற நாடுகளோடு பங் கிட்டு அனுபவிப்பதே உலக சமாதானத்தின் அடிப்படை யான கொள்கை யாகும்.

நடராஜன் சில நல்ல வழக்கங்களைத் தெரிந்து கொண் டான். ஆங்கிலக் கலாசாலைகளின் முதன்மையான நோக் கமே மாணவர்களை உண்மை மாணுவர்களாகச் செய்து,

மனிதர்களாக அவர்களை வெளியே அனுப்புவதுதான். ஆனால் இந்த நல்ல வழக்கத்தை மற்றவர்கள் விஷயத்தில் காட்டாததற்கு வருந்தினான். ஊருக்கு உபதேசம் பண்ணும் படலத்தை அவர்கள் முதலில் ஒழித்துக் கட்ட வேணும். எண்ணங்களை பகிரங்கமாக வெளியிடுவதற்குரிய வசதிகளையும் அதற்குப் போதுமான உடல் வலிமையையும் அளிக்கின்றனர். பரந்த வெளிகளில் மாணவர்கள் உற்சாகமாக விளையாடி, உல்லாசமாகக் காலம் கழிப்பதும், கல்வி கேள்விகளின் ஒரு பகுதியாகும். கற்றுக் கேட்டவைகளை உணராமலும், சரியாக அர்த்தம் செய்யாமல், அனர்த்தம் செய்து கொண்டு வியர்த்தமாகக் காலம் கழிக்கும் மாணவர்கள் இக் கலாசாலைகளில் காலம் தள்ளுவதே மிகக் கஷ்டம்!

நல்ல இடத்திற்கு வந்து சேர்ந்தோம் என்ற எண்ணம் திருப்தியைத் தந்தாலும். தாய் நாட்டையும்—தாய் நாட்டுக் கல்வியையும் எண்ணினால் உளம் சோரும். இந்தக் கலாசாலையில் கல்வி பயின்ற மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கொழுத்த பிரபுக்களின் மக்கள். சிலர் நடுத்தர சொத்துக்களையுடைய சர்க்கார் உத்தியோகத்தில் உயர்தர பதவியி லிருப்பவர்களின் புத்திரர்கள். அவனைப் போன்ற ஆசாமிகள் சிலரையும் அங்கு சந்தித்தான். ஒருவிதத்தில் அவனுக்கு அவர்களைக் காண திருப்தியாகவே இருந்தது.

நடராஜன் கலாசாலையில் சேர்ந்து ஆறுமாதங்கள் ஆகிவிட்டன. மற்ற உணவு உடைகளில் ஒன்றும் அப்படி முற்றும் மாறிவிட வில்லை. சாதாரண துணிகளை அவன் அணிந்து கொண்டாலும், பகட்டான பட்டு உடைகளை அவன் அணிந்தாலும், அவன் தோற்றத்தில் தாழ்வையோ அல்லது உயர்வையோ காண்பது கடினம். எல்லாரோடும்

சகஜமாகப் பேசிப் பழகியதால் யாவரும் விரும்பினர். சக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இவனிடம் மதிப் பேற்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

கேம்பிரிட்ஜ் கலாசாலையில் ஒவ்வொரு வருஷமும், கலாசாலையின் சங்கத்துக்கு காரியதரிசியை மாணவர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பது வழக்கம். நமது தமிழ் நாட்டில் பதினுயிரம் வோட்டர்கள் கொண்ட ஒரு தொகுதியில் போட்டி போட்டு, வெற்றி பெற்று சட்டசபைகளில் உட்காருவது தற்காலத்தில் குழந்தை விளையாட்டாக இருக்கிறது. ஆனால் ஒரு ஆயிரத்துக்குக் குறைவான மாணவர்களே உள்ள இக் கலாசாலையில் நடைபெறும் வருஷாந்திர விழாவில் போட்டிபோட்டு வெற்றி பெற்று வருவது மிகக் கடினமான காரியம்! சங்கத்துக்கு ஆங்கிலப் பிரபுக்கள் மக்களேயே காரியதரிசியாகத் தேர்ந்தெடுப்பது வழக்கம். இந்தக் கல்லூரியில் வாசித்த இந்திய மாணவர்கள் தங்கள் கனவிலும்கூட இப்பதவிக்கு ஆசைப்பட மாட்டார்களாம்.

நடராஜன் ஓர்நாள் தன் அறையில் உட்கார்ந்து ரின்னிங்டன் பிரபுவைச் சந்தித்து நாளாயிற்றே என எண்ணிக் கொண்டிருந்தான். சில ஆங்கில மாணவர்கள் அப்போது அவன் அறைக்குள் நுழைந்து சிந்தனையைக் குலைத்தனர். கலாசாலையின் சங்கக் காரியதரிசியாக மாணவர்கள் நடராஜனையே போட்டியின்றித் தேர்ந்தெடுப்பதாகத் தீர்மானித்த விஷயத்தை தெரிவித்தார்கள். அந்தச் செய்தியைக் கேட்டநடராஜன் ஆச்சரியத்தில் மூழ்கினுன். அந்தப் பெரிய ‘பதவி’ யை எண்ணி ஆச்சரியப்படவில்லை. நல்லதைத் தெரிந்து கொள்ளவும், பாராட்டவும் இவர்களுக்கு முடிகிறதே என நினைத்துவியந்தான். ஏற்பதா மறுப்பதா? அந்தப் பதவியை நிர்வகிக்கும் அந்தஸ்து

தன்னிடம் இல்லை யென்று, மறுத்து விடுவதா? அது நன்றாயிராதே என்றே யோசித்துக் கொண்டிருந்தான். மாணவர்களின் பிரதிநிதிகளாக வந்தவர்கள் 'முடியாது' என்று பதில் வந்தால், அதை,நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தயாராயில்லை. நீ ஒத்துக் கொண்டதாக நாங்கள் தீர்மானம் செய்து விட்டோம்! என்று சொல்லிக்கொண்டு, நடராஜன் பதிலை எதிர் பாராமல் சென்று விட்டார்கள்.

தேர்தலுக்கு முந்திய நாள் வரையிலும் போட்டியாக யாரும் நிற்கவில்லை யாதலால், நடராஜனே காரியதரிசியாய்விட்டான் என்று அவன் ஆதரவாளர்கள் கோட்டை கட்டிக் கொண்டிருந்தனர். தேர்தல் தினத்தன்று நடராஜனுக்கு எதிராக ஒரு பிரபல ஆங்கிலப் பிரபுவின் மகனும் போட்டியாக நிற்கிறான் என்னும் விஷயம் ஊர்ஜிதமாயிற்று. இரண்டு கட்சியினரும் மும்முரமாக வேலை செய்தனர். பிரபுவின் மகன் ஏராளமாகச் செலவு செய்து தம் நண்பர்களுக்கு தேநீர் விருந்துகளும், மது விருந்துகளும் தடபுடலாக அளித்தான். இலவசச் சம்பளத்தில் கல்விகற்கும் நடராஜனுக்குச் செலவு செய்ய விருப்பமுமில்லை, செலவு செய்யச் சக்தியுமில்லை. மற்றவர்கள் செலவு செய்வதாகச்சொல்லியதையும் வேண்டாம் என்று கண்டிப்பாக மறுத்துவிட்டான்.

பிரபுவின் புத்திரன் புன்னகை தவழும் முகத்தோடு சில பொருத்தமற்ற விஷயங்களைத் தன் நண்பர்கள் அர்த்தம் புரிந்து கொள்ளாதவாறு வெகு தடபுடலாகப் பேசிக் கொண்டிருந்தான். தன் சட்டைப் பைகளுக்குள் தன் இருகரங்களையும் அழுத்தி, கழுத்துப் பட்டையையும் மேல் அங்கியையும் அடிக்கடி சரி செய்து கொண்டே இருந்தான்!

கடைசியாக 'ஓட்' எடுக்கப்பட்டது. நடராஜன் தேர்ந்து எடுக்கப்பட்டதாக 'ஓட்' எண்ணி முடிந்ததும் அறிவிக்கப்பட்டது. இந்திய மாணவர் ஆனந்தத்துக்கு அளவில்லை. நடராஜன் மற்ற மாணவர்களுக்கும் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டான். தான் கருதும் முற்போக்கான காரியங்களைச் செய்ய எல்லோருடைய ஒத்துழைப்பையும் வேண்டிக் கொண்டான். மேல் நாடுகளில் ஓட்ட ஆட்ட விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் தோல்வி மனப்பான்மைக்கு இடம் கொடுப்பதில்லையாதலால், ஆங்கிலப் பிரபுவின் மகன் தன் தோல்வியை முற்றிலும் மறந்து, நண்பனை மிகவும் பாராட்டி பேசியது மல்லாமல் நடராஜனை இந்த பதவி வகிக்க தகுதியுள்ளவன் என்று பகிரங்கமாகவும், கள்ள கபடமின்றியும் சொன்னான். இதைக்கேட்டு நடராஜனைப் போல் மற்றவர்களும் மகிழ்ந்தார்கள்.

# பராமுகம் ஏனம்மா!

கண்ணம்மா பெரிய டாக்டரைப் போல் நோயைக் குணப்படுத்துவதில் பெரிதும் ஈடுபட்டிருந்தாள். தன் அன்பனை ஆசைத் தேனமுதை நினைக்கவும் அவளுக்கு நேரமில்லை. காரியமாக இருக்கையில் மறந்திருந்தாலும் தனிமையில் அவனைப் பிரிவுத் துயர் வாட்டாமல் விட வில்லை. இன்னும் எத்தனை நாள் ஆகுமோ வருவதற்கு? சீக்கிரம்வந்து சேர்ந்துவிட்டால் இந்தத் தாபமும் தவிப் பும் மாய மாய் மறைந்து விடுமே!

சாதாரணமாக உலகில் சந்தோஷத்தையோ, துக்கத் தையோ பகிர்ந்து கொள்ள மூன்றும் மனிதர்களையும் சேர்த்துக்கொள்வது சிலரது வழக்கம். சொன்னால் குறை தீரும் என்பதும் பழமொழி. கண்ணம்மாவும் தன் மனக் கஷ்டத்தை பிறருக்கு எடுத்துச் சொல்ல நினைத்தாள். ஆனால் அவள் துக்கத்தைக் கேட்டு ஆறுதல் கூற அங்கு தக்க தோழியர் யார் இருக்கிறார்கள்? அருகிருக்கும் காளியைச் சரணடைந்தாள் தினம் காளி கோயிலுக்குச் சென்று வந்தாள். மழை வரும் போலிருந்ததால் கோவிலுக்கு வழக்கமாக வரும் சிலரும் அன்று வரவில்லை. வழக்கத்திற்கு மாறாக நடக்க விருப்ப மில்லாத சிலர், வழக்கம் போல் கோயிலுக்கு சென்று வீடு திரும்பினர். கண்ணம்மா கோயிலின் பிரகாரத்தை அடைந்த பொழுது அங்கு ஒருவரும் இல்லை.

தனது துயரத்தை அன்னை பராசக்திக்கு அச்சமின்றி வெளியிடுவதற்கேற்ற சமயம் அது. மனசில் பொங்கும் வேதனையைக் கொட்டி தீர்த்தாள். "தாயே! எல்லாம் தெரிந்த உனக்கு நான் சொல்லித்தெரிய வேண்டுமென்பது

ஒன்றுமில்லை! தெரிந்தும் தெரியாதவள் போல் பாசாங்கு செய்து, திரிசூலத்தைத் திருக்கரத்தில் ஏந்தி புன்னகையுடன், கண்களை மூடி, உலகத்தில் சகலமும் சரிவர நடக்கிறதென்று நினைப்பது உனக்கு வழக்கமாய்ப் போய்விட்டதே, அம்மா! அவர் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? அவரை பிரியவைத்து, வேடிக்கை பார்ப்பது உனக்கு நீதி தானே? வலது பாதத்தைக் கீழே ஊன்றி, இடது பாதத்தை வீசி நர்த்தனம் புரியும் நடராஜனைப் பாராமல் நீ ஒரு கணமேனும் வாழமாட்டாய் என்று சொல்லுகிறார்களே! நம்மிருவர்களில் வித்தியாசம் ஏதுக்கம்மா! நீ நர்த்தனம் புரியும் நடராஜனைக் காதலிக்கிறாய். நான் யாரைக் காதலிக்கிறேன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இதில் வித்தியாசமில்லை என்பது நீயும் நானும் அறிந்த விஷயம்! ஏன் உலகமே அறிந்த விஷயம். நீ உன்கணவனோடு இன்புற்று வாழ்வதை நான் சகிப்பது எப்படி? நான் என் காதலனை ஏழாயிரம் மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள சீமைக்கு அனுப்பி, வருந்தி வாழ்வதை நீ எப்படி சகிப்பாய்? உன்னைச் சரணாகதியடைந்த ஏழையென்னைக் காத்தருள்வது, சிவகாமியாகிய உந்தன் பொறுப்பு. இன்னும் பராமுகம் வேண்டாம். அம்மா தாயே!'' என்று கூறினாள். அதேசமயம் காளியின் கருணை போன்று சிறு மழைத்துளிகளும் விழத்தொடங்கின. அம்மழைக் கருக்கிருட்டில் யாரோ இப்பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தது இவளுக்கு எப்படித் தெரியும்?

அன்று மழையில் நனைந்ததாலும், மனக்கோளாறினாலும், அவள் உடல் நிலை கெட்டது. சாப்பாடும் சரியாகச் சாப்பிடுவதில்லை. காலையில் படுத்த படுக்கையாக இருந்தாள். எழச் சக்தியில்லை. வள்ளியக்காளும் கவுண்டரும் இதனால் படாத பாடு பட்டார்கள். உடனே வைத்தியபரீட்சையில் தேர்ந்து, பட்டம் பெற்றபல ஆங்கிலப் பண்டி

தர்கள் வந்து, இருமல் ஜுரம் என்று சொல்லி இங்கிலீஷ் மருந்துகளைக் கொடுத்துச் சென்றனர். இம்மருந்துகள் வியாதியைக் குணம் செய்வதற்கு பதிலாக அதிகப்படுத்தின! தமிழ வைத்திய ரத்தினங்கள் வந்து 'தருமம் தலை காக்கும்' என்று சொல்லி, சில மாத்திரைகளைக் கொடுக்குமாறு கொடுத்துச் சென்றனர். மாத்திரைகள் மன வியாதியை அதிகப்படுத்தின! இதிலும் குணமேற்படாததைக் கண்டு, பெற்றோர்கள் மந்திர மாயக்காரர்களைத் தருவித்துக் காண்பித்தனர். இந்தப் பிரகஸ்பதிகள் 'மந்திரமாவது, மாயமாவது, எல்லாம், 'திருநீறு' என்று சொல்லித் திருநீறைச் செல்வியின்மேல் தெளித்துச் சென்றனர். பெற்றோர்கள் தமக்குத் தெரிந்தும் தெரியாததுமான பல முறைகளைக் கையாண்டும் வியாதி குறைந்தபாடில்லையே என்று கவலையுற்றவராய் இருந்தனர்.

அன்றிரவு வியாதியின் கொடூரம் அதிகமாகி விட்டது. அவள் பிரக்ஞை இன்றிப் பிதற்றத் தொடங்கினாள், இடையிடையே "நடராஜன்...நடராஜன்" என்று விட்டு விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்ட போதுதான் வள்ளியக்காளுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக சங்கதி விளங்கலாயிற்று. அதே சமயம் பார்க்க வந்த சிறு பெண்களில் ஒன்று முந்தின நாள் காளி கோவிலில் தான் கேட்ட 'முறையீட்டை' பகிரங்கமாக வீட்டிலுள்ளவர்களிடம் சொல்லி விட்டது. அதற்கு என்ன தெரியும்? இருந்தாலும் அதுவும் ஒரு நல்ல காரியத்தையே செய்தது. அப்போதுதான் எல்லாச் சங்கதியும், திலகக்காளுக்கும் வள்ளியக்காளுக்கும் தெளிவாகத் தெரிந்தன. இந்த மனக்கவலைக்கு மாற்று வெறும் மருந்தல்ல என்பதைக் கண்டு கொண்டனர். 'மாதர் உரைத்தல் வழக்கமில்லை' என்ற வாக்குப்படி கண்ணம்மா சொல்லா விட்டாலும், அவள் மனதை அறிந்து கொண்டு விட்டனர்.

மனைவி மூலம் முழுவிவரங்களையும் அறிந்த கவுண்டர், மெய்மறந்து ஆழ்ந்த யோசனைகளில் ஆழ்ந்தார். மகளை துறப்பதைக் காட்டிலும் மருமகனை அடைவதே மேல் என்ற முடிவுக்கு வந்து நடராஜனை உடனே சீமையிலிருந்து புறப்படச் செய்வதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டார். நடராஜன் விரைவில் வந்துவிடுவான் என்பதை அறிந்த கண்ணம்மாளுக்குத் தெம்பாக இருந்தது. அசதி யெல்லாம் பறந்தோடிவிட்ட மாதிரி இருந்தது. பட்டமரம் துளிர்ப்பதைப் போல், அந்த பாவை உள்ளம்மலர வாரம்பித்தது.

# எங்கள் நாடு

கிங்ஸ் கலாசாலையின் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடராஜன் ஒரு மாலை வேளை லார்டு ரின்னிங்டன் பிரபுவின் மாளிகைக்குச் சென்றான். தம்பதிகள் இருவரும் அவனை அன்புடன் வரவேற்று உபசரித்து, அளவளாவிக் கொண்டிருந்தனர். காரியதரிசியான செய்தியை பிரபு மிகவும் சந்தோஷமாக வரவேற்று நடராஜனுக்கு தம் ஆசியைத் தெரிவித்தார். நடராஜனும் மகிழ்வோடு பிரபுவைத் தம் கலாசாலைக்கு வந்து பிரசங்கம் செய்து கலாசாலையையும் தன்னையும் கௌரவிக்குமாறு மிகவும் வேண்டிக் கொண்டான். பிரபு சிரித்துக் கொண்டே 'இப்போதெல்லாம அது என்னத்திற்கு,என்று சொல்லி ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். தமது தள்ளாத வயதில் தற்காலத்திய வாலிபர்களுக்குப் பிரசங்கம் செய்ய எத்தனிப்பது அதிகப் பிரசங்கித்தனமாகும் என்று அஞ்சியே அவர் இணங்கவில்லை.

நடராஜனும் பிரபுவும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது இந்திய சர்க்காருக்கு உதவிக் காரியதரிசியாக லண்டனில் வேலை பார்க்கும் ஸ்மித் என்பவர் பிரபுவைப் பார்த்துப் போக வந்தார். பிரபு நண்பர்கள் இருவரையும் ஒருவர்க் கொருவர் அறிமுகம் செய்து வைத்தார். பிரபுவின் வேண்டுகோளுக்கும், நடராஜன் வேண்டுகோளுக்கும் இணங்கி, ஸ்மித் ஆனந்தமாக கிங்ஸ் கலாசாலையின் சங்கத்தில் தலைமை வகித்துப் பேசுவதாக ஒப்புக் கொண்டார். ரின்னிங்டன் பிரபுவின் கட்டளையின் மேல் நடராஜனே அன்றைய கூட்டத்தில் "எங்கள் நாடு" என்பதைக் குறித்து ஓர் சொற் பொழிவு நிகழ்த்துவதாகவும் தீர்மானம் செய்யப்பட்டது.

காரியதரிசியாகிய நடராஜனே முக்கிய சொற்பொழி வாளன்! இதைக்கேட்ட சகோதர மாணவர்களுக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. கூட்டம் கூடும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தனர். தன் சகோதர மாணவர்களின் உதவியால் ஏராளமான அச்சிட்ட அழைப்புத் தாள்களை, காமன்ஸ் சபை, லார்டு சபை அங் கத்தினர்களுக்கும், முக்கியமான சர்க்கார் உத்தியோகஸ் தர்களுக்கும் அனுப்பிவைத்தான் லார்டு ரின்னிங்டன் தம்பதிகளுக்கும், ஸ்ரீமதி ஜின்ஜருக்கும் கூட ஆம், சகோ தரி ஜின்ஜரையும் மறக்காமல் அழைப்புத் தாள்களை அனுப்பி வைத்தான். அதோடு அவர்கள் அவசியம் குறிப்பிட்ட தினத்தில் கூட்டத்திற்கு வந்து தன்னைக் கௌரவிக்கவேண்டும் என்றும் கடிதங்களும் எழுதினான்.

கிங்ஸ் கலாசாலையின் கலாமண்டபம் அழகிய தோர ணங்களாலும், கொடிகளாலும், அலங்கரிக்கப் பெற்றி ருந்தது. அடேயப்பா! பார்ப்பதற்கு அது மாணவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரும் கல்யாணத்தை நடத்தி வைக்கும் வைபவம் போலிருந்தது. நடராஜ னுக்கு ஒழிச்சல் ஏது?

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாகவே கூட்டம் கும் பல் கும்பலாகக் கூடிற்று. விதவிதமான ஆடை அலங் காரங்களுடன் ஆண்களும் பெண்களும் திரள் திரளாக வந்தனர். அழைப்பிற் கிணங்கி, காமன்ஸ்சபை லார்டு சபை அங்கத்தினர்கள் தங்கள் மனைவி மக்களுடன் வந்து தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தனர். லார்டு ரின்னிங்டன் தம்பதிகளும், ஸ்ரீமதி ஜின்ஜரும் இக் கூட்டத்திற்கு வந்திருந்தனர் என்று சொல்லத் தேவையில்லை! குறிப்பிட்ட நேரத்துக்கு முன் பாக வந்து காத்திருந்தவர்கள் அடிக்கடி கலாசாலையின்

கடிகாரத்தைப் பார்த்த வண்ண மிருந்தனர். மணி சரியாக ஐந்து அடித்ததும், நடராஜனும் கல்லூரித் தலைமை உபாத்தியாயரும், ஸ்மித்துடன் வந்து மேடை மீது ஏறி உட்கார்ந்தனர்.

தலைமை ஆசிரியர் பிரதமப் பிரசங்கியான நடராஜனை சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஸ்மித் முதலில் தம் முன்னுரையில் கலாசாலையின் வைபவத்தில் தமக்கு ஓர் பங்கு கொடுத்துக் கௌரவித்த நிர்வாகிகளுக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவித்து விட்டு நடராஜனை "எங்கள் நாடு" என்னும் விஷயத்தைப் பற்றிச் சொற்பொழி வாற்றுமாறு வேண்டிக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

நடராஜன் பதட்டமின்றி, மிகவும் அடக்கமாகவும், ஒடுக்கமாகவும் எழுந்தவுடன் சபையில் ஒரே கரகோஷ ஆரவாரம் எழுந்தது. நடராஜன் அன்னிய ஆடையை அன்று பகிஷ்கரித்து, வரும் போது கொண்டு வந்திருந்த கைத்தறி ஆடையால் ஆகிய கால் சட்டையையும், சொக்காயையுமே அணிந்து கொண்டிருந்தான். பார்ப்பதற்குப் பகட்டு இல்லாத ஆடை. ஆனால் சுய அறிவைத் தூண்டும் ஆடை. சாதாரண உடையை அவன் அணிந்திருந்த தால், பேசுவதற்கு முன்னால் 'ஆடை திருத்தி' அரை மணித் தாமதம் செய்ய வேண்டிய ஆவசியம் ஏற்படவில்லை. சபையைச் சுற்றித் தன் பார்வையை ஒருதரம் செலுத்திவிட்டு, நேராகக் கூட்டத்தைப் பார்த்துப்பின் வருமாறு பேசத் தொடங்கினான். "உங்கள் எல்லோருக்கும் முதலில் என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தப் பிரம்மாண்டமான கூட்டத்தைத் காணவும் எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது. முதலில், "எங்கள் நாடு" என்ற தலைப்பைப்

பார்த்ததும், எங்கள் நாட்டின் சுதந்திரத்தில் நீங்கள் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்? என்று தான் கேட்கத் தோன்றிற்று. ஆனால், நீங்கள் இன்று அரசியல் பிரசங்கம் ஒன்றையும் என்னிடம் எதிர்பார்க்காதீர்கள். அரசியல் வாதிகளுக்கும், ராஜ தந்திரிகளுக்குமே அதை விட்டு விடலாம்'' என்று சொல்லி, நிறுத்தி விட்டு சபையை ஒரு முறை சுற்று முற்றும் பார்த்தான். கைதட்டும், கரகோஷமும் சபை அதிரும்படி கேட்டது, 'சரி தான். ரசிக்கிறார்கள்' என்று முடிவுக்கு வந்து, மேலும் உற்சாகமாக ஆரம்பித்தான்.

"எந்த நாட்டு மக்களும் எவருடைய சுதந்திரத்திலும் குறுக்கே நிற்கக்கூடாது. எனக்கும் சில ஆங்கிலேய நண்பர்கள் இருக்கிறார்கள். வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த அவர்களும் இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். உங்கள் நாடு, அன்னியர் வசப்பட்டு, அனாதரவான நிலைமையில் இருந்தால்—உங்களுக்குப் பேசத் தோன்றுமா? பிரசங்கம் செய்யத் தோன்றுமா என்று நான் கேட்கிறேன். என்ன, பதில் சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டு விட்டு, ஒரு பார்வை பார்த்து விட்டு மேலும் தொடங்கினான்.

''செல்வத்திற் சிறந்தது எங்கள் நாடு. கல்விச் செல்வம், பொருட் செல்வம் இரண்டையுமே குறிக்கிறேன். எங்கள் நாடு என்றுமே வளமுள்ள நாடு. ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக கலை, நாகரிகம் இவைகளுக்கு இருப்பிடமாகவும், வழி காட்டியாகவும் விளங்கி வந்திருக்கிறது எங்கள் நாடு. தத்துவ விசாரணை, வேதாந்தம் இந்தத் துறையிலே பக்குவப் பட்ட பெரியார்கள் அதன் எல்லையையே எட்டிப் பார்த்திருக்கிறார்கள். 'சத்தியம்' ஒன்றே எங்கள் ஜீவநாடி. எங்களிடம் உள்ளதை அள்ளி

அள்ளிக் கொடுக்க வேணும் என்பதே எங்கள் நாட்டாரின் கொள்கை. ஆனால் அப்படிப் பட்ட உத்தமர்களை நியாயத்திற்குக் கட்டுப் பட்டவர்களை நீங்கள் எவ்விதம் நடத்தி வருகிறீர்கள்? சுதந்திரமாக ஆயிரக் கணக்கான வருஷங்களாக வாழ்ந்து வந்த மக்களுடைய சுதந்திரத்திலே......'' என்று அவன் பேசிக் கொண்டு போகையில் சில பெரிய பிரபுக்களின் கண்களில் நீர் நிறைந்தது!

அந்தச் சமயம் ஒரு குரல் ''பிரசங்கியாரே! உங்கள் பேச்சு வன்மையைப் பெரிதும் பாராட்டுகிறேன். இவ்வுலகக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வழிதான் சொல்லுமே'' என்று கேட்டது.

இதற்கும் சபையில் பலத்த கரகோஷம் ஏற்பட்டது! நடராஜன் இக் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறான் என்பதைக் கேட்கப் பலர் ஆவலுடன் காத்திருந்தனர். ஸ்ரீமதி ஜின்ஜருக்கு இது வேதனையாக இருந்தது. 'ஆங்கிலச் சபையோர் தக்க பதில் அளிக்காவிட்டால் சிரித்து ஏளனம் செய்வார்களே' என்றெல்லாம் சிந்தித்து, ஆனாலும் தக்க பதில் தருவான் என நம்பியிருந்தாள் ஸ்ரீமதி ஜின்ஜர்.

புன்னகை தவழும் முகத்துடன் நடராஜன் கம்பீரமாக, ''தலைவரவர்களே! சகோதர சகோதரிகளே! இக் கேள்வி கேட்ட சகோதரர் ஒரு அவசரக் குடுக்கை. அவரை நான் குற்றம் குறை கூறவில்லை. மிகப் பொருத்தமான கேள்வியை தகுந்த சமயத்தில் கேட்டபெருமை அவருடையதே! என் சகோதரருக்கு வந்தனம் உரித்தாகுக. வியாதியின் குணத்தை அறிந்த வைத்தியன் நிச்சயமாக அதை நிவர்த்திப்பதற்கு தக்க மருந்தையும் கொடுப்பான். வியாதியின் குணத்தை அறியாத வைத்தியர்கள் மழுப்பல் செய்து, தம்மைக் காட்டிலும் அனுபவமுள்ள

வைத்தியரைக் கொண்டு சிகிட்சை செய்வதே மேல் என்றும் கூறுவர். இது நீங்களும் நானும் அறிந்த விஷயம். வைத்திய சாஸ்திரத்தின் முறையைப் பற்றியும், பல வித வியாதிகளின் அந்தரங்கத் தன்மையைப் பற்றியும் எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் பஞ்சத்தில், பசிப் பிணியில், வாழும் இவ்வுலக மக்களின் வியாதியைப் பற்றியும் அதைச் சிகிட்சை செய்வதற்கேற்ற மருந்துகளையும் கண்டு பிடிப்பது, உலக ராஜ தந்திரிகளின் கையில் இருக்கிறதென்பது என் சொந்தக் கருத்து. அவர்கள் சரியாக அதைக் கைக் கொண்டால் துன்பமும் துயரம் பறந்தோடி விடும். கேள்வி கேட்க வேண்டிய சிரமமே ஏற்படாது!''

ஸ்ரீமதி ஜின்ஜர் உள்பட எல்லோருமே இதனால் மகிழ்ச்சி அடைந்தினர். ரின்னிங்டன் தம்பதிகள் தங்கள் அபிப்பிராயங்களைப் புன்னகை தவழும் தங்கள் முகவிலாசங்களில் பரிமாறிக் கொண்டனர். சபையில் மற்றும் பலர் நடராஜனின் நுண் அறிவை மெச்சிப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தனர். சகோதர மாணவர்கள் தங்கள் சகோதர வாஞ்சையால் ஆனந்த நர்த்தனம் புரிந்து கொண்டிருந்தனர்.

நடராஜன் மீண்டும் உணர்ச்சியுடன் பேசினான். ''உலகத்தில் விளைவுப் பொருட்களையெல்லாம் அறிந்து நிர்ணயிப்பதற்கு, உலகப் பிரதி நிதிகள் அடங்கிய கமிட்டி நிர்ணயிக்கப் படவேண்டும். அப்போது பஞ்சமும் பசிப்பிணியும் தலை காட்டுமா? இந்தக் கமிட்டியின் முக்கிய வேலைகள், உலக விவசாயப் பொருட்களை ஒவ்வொரு வருடமும் / விளைச்சலுக் கேற்றவாறு அளவெடுத்து, உலகத்திலுள்ள பல நாடுகளுக்கும் பாரபட்சமின்றிப் பங்கிடு செய்தல். இப் பண்டங்களுக்கு அந்

தந்த தேசத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு விலைவாசிகளை நிர்ணயித்தல். உணவுப் பொருள்கள் மிகுதியாக வுள்ள நாடுகளிலிருந்து, பாரபட்சமின்றி ஏற்றுமதி செய்து அனுப்புதல். கொள்கைகளை நம் ராஜ தந்திர நிபுணர்கள் சுயநலம் கருதாது கடைப் பிடித்தார் களே யானால், பஞ்சத்திற்கும், பசிப் பிணிக்கும் இடம் ஏற்படாமல் செய்யலாம். சிறந்த பொருளாதார நிபுணர் களின் கருத்தும் இதுவேதான். அதில் எனக்கும் நம்பிக் கையுண்டு. உங்களுக்கும் என் நண்பர் பொறுமை யற்ற வருக்கும் இதில் நம்பிக்கை ஏற்படவேண்டு மென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எங்கள் நாட்டைப் பற்றிப் பேச விரும்பிய நான் உலகத்தின் மற்றைய நாடு களைப் பற்றியும் பேசியதை சபையோர்களாகிய நீங்கள் பொறுத்துக் கேட்டுக் கொண்டிருந்ததிற்கு என் நன்றி''

பிரசங்கத்தை முடித்துக் கொண்டு தன் ஆசனத்தில் அமர்ந்தான். பலத்த கரகோஷம் ஏற்பட்டது. சிலர் தங்கள் குல்லாய்களை எடுத்து வீசி யெறிய ஆரம்பித் தனர்.

மற்றும் சிலர் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். ஆங் கில மாணவர் சிலர் வெடிமருந்துகளை வெளிப் பிரகாரத் தில் கொழுத்திப் 'பட்பட்' என்றும் சப்தத்தைக் கிளப் பினர். கிங்ஸ் கலாசாலையின் கலாமண்டபமே கவிழ்ந்து விழுவது போலிருந்தது, மிகக் கோலாகலமாக!

தலைமை வகித்த ஸ்மித் பெருமிதத்தோடு நடரா ஜனை மிகவும் பாராட்டிப் பேசியது மல்லாமல் தம் வாழ் நாளில் இதைப் போன்ற இன்சுவை பொருந்திய பிரசங் கத்தைக் கேட்டதே இல்லை யென்று சொன்னார். எளிய நடையில், ஆங்கில சொற்றொடர்களை உற்சாகத்துடன் உச்சரித்து நம்மை இது வரையிலும் பரவசப்படுத்திய

பிரசங்கிக்கு நம் நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இருபது நிமிஷங்களுக்குப் பதிலாக இருபது நாட்கள் ஒன்று கூடிப் பேசினாலும், பிரசங் கத்தை மெய்மறந்து அனுபவிக்க நான் தயராயிருக் கிறேன். காதுக்கு இனிமை அடடா! வார்த்தை கிடைக்க வில்லையே மேலும் புகழ!''

நண்பர் ஸ்மித், மீண்டும் பேசுகையில், ''நமது பிர சங்கியார் கலை, நாகரிகம், பஞ்சம், பசிப்பிணி, சுதந் திரம் வரை வந்து விட்டார்! சுதந்திரத்தை அளிப் பது நியாயம். ஊருக்கு ஒரு நீதியும், உலகுக்கு ஒரு நீதியும் கூடாது. உலகப் பஞ்சத்தை நிவர்த்தி செய் வதற்கு, உவந்து அளித்த புத்திமதிகளை நாம் சிந்திக்க வேண்டும். சிந்திப்பதோடு பரிகாரமும் தேடவேண்டும்'' என்று சொல்லி உட்காந்தார். ஆரவாரத்துடன் கூட் டம் இனிது கலைந்தது.

கூட்டம் கலைந்த பின்னும் நண்பர்கள் பலர் கைகு லுக்கி பாராட்டித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ரின்னிங்டன் தம்பதிகள் இன்பசாகரத்தில் மூழ்கியவராய் அவனைத் தழுவி பாராட்டுதலைத் தெரிவித்தனர். ஸ்ரீமதி ஜின்ஜா நடராஜன் தன் மாளிகைக்கு, வாக்குக் கொடுத்த படி வரவில்லையே என்று உரிமை பாராட்டிக்கடிந்து பேசி ளுள். நடராஜன் மறுதினம் தவருமல் வருவதாக வாக் களித்து சகோதரியை அனுப்பி வைத்தான்.

அடுத்த நாள் லண்டனில் வெளியான தினசரிப் பத் திரிகைகளி லெல்லாம், நடராஜனுடைய பிரசங்கத்தை கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்தன. சில பத்திரி கைகள் பிரசங்கம் பற்றி காரசாரமான தலையங்கம் கூட எழுதி இருந்தன!

## கண்கவர் காட்சிகள்

காலை நேரம். 'ஜில்' லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. நடராஜன் அவசர அவசரமாக பேட்டர்சி என்னும் கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். ஸ்ரீமதி ஜின்ஜரின் மாளிகையை அடைந்ததும் மாளிகையின் தோற்றத்தைக் கண்டு மயங்கி நின்றான். வாசல் காவலாளன் நடராஜன் தோற்றத்தையும், உடையையும் கண்டு சிறிது சந்தேகம் கொண்டு அவனை உள்ளே விட மறுத்துவிட்டான். வெளிவாசலில் குரலைக் கேட்டதுமே ஸ்ரீமதி ஜின்ஜர் ஓடோடியும் வந்தாள். நடராஜனைக் கை குலுக்கி உள்ளே அழைத்துச் சென்றாள்!

இருவரும் கப்பலில் இருந்து வந்தது முதல் நடந்த சம்பவங்களைத் தேநீர் அருந்திக் கொண்டே சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனர். சகோதரி ஜின்ஜர், நடராஜன் வாக்கு வன்மையைப் பெரிதும் பாராட்டிப் பேசினாள். தேநீர் அருந்திய பிறகு மாளிகையைச் சுற்றிக் காண்பித்தாள். ஆங்கிலேயர் குடித்தனத்தை நடத்தும் முறைகளை விளக்கிச் சொன்னாள்.

நடராஜன் தான் இன்னும் ஆங்கிலேய நடனம் கற்றுக் கொள்ள வில்லை, கற்றுக்கொள்வதாக உத்தேசமுமில்லை என்று சொல்லிய செய்தி ஸ்ரீமதி ஜின்ஜரை வியப்பில் ஆழ்த்தவில்லை. ஆங்கில நாட்டில் வாழ்ந்து, ஆங்கிலேயர்களோடு தினமும் பழகி, ஆங்கிலேயர் ஜீவநாடியாகக் கருதும், ஆங்கில நடனத்தை கற்றுக்கொள்ள உத்தேசமில்லை என்னும் செய்தி, ஜின்ஜருக்கு அதிசயம் விளைவித்திருக்க வேண்டும். ஆனால் நடராஜன் மனப்பக்குவத்தை அறிந்த அவளுக்கு அது ஆச்சரியம் தரும் செய்தியாயில்லை.

இந்திய மாணவர்கள் சிலர், இங்கிலாந்து போவதற்கு முன்பு ஆங்கில நாட்டியக் கலைகளில் தேர்ச்சி பெற்றே செல்லுகின்றனர். இன்னும் சிலர் இங்கிலாந்தில் இதைத் தம் முதல் பாடமாக கருதி நாட்டியத்தைக் கற்றுக்கொள்ளுகின்றனர். நாட்டியம் தெரியாவிட்டால் ஆங்கில நாரீமணிகளிடம் தாங்கள் உறவாடுதல் முடியாதென்ற முட்டாள் கொள்கையின் அனர்த்தத்தில் இதுவும் ஒன்று. ஆனால் இயற்கையிலே களியாட்டத்தில் அருவெறுப்புக் கொண்ட நடராஜன் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து மதுவை அருந்தி, மதி மயங்கி, ஆடிக் குதிக்கும் நாட்டியத்தில் தன் கவனத்தைச் செலுத்த இஷ்டம் கொள்ளவில்லை. மேலும் ஆங்கிலேயர்களிடம் பழக இவ் வித்தை அவசியமில்லை யென்பதையும் தெரிந்து கொண்டான்.

சகோதரி ஜின்ஜருக்கு லளித கலைகளில் ஆர்வம் இருந்ததால், நம் தமிழ் நாட்டில் திகழும் பரதநாட்டியப் பண்புகளை, விளக்கிச் சொல்லி அதில் அவள் தன் கவனத்தை கொஞ்சம் செலுத்துமாறு வேண்டிக் கொண்டான்! பரத நாட்டியக் கலை இன்னதென்பதை அறியாத ஜின்ஜர், அதை உற்சாகமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

காவியம் ஓவியம் முதலிய விஷயங்களைப் பற்றியே நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கு கண்ட சில சித்திரங்களை வெகுவாக நடராஜன் பாராட்டினான்: பேச்சு வாக்கில் நடராஜன் இன்னும் லண்டனைச் சுற்றிப் பார்க்கவில்லை என்பதைக் கேட்டு ஸ்ரீமதி 'சிரிசிரி' என்று சிரித்தாள். மறுநாள் லண்டன் காட்சிகளைக் கண்டு களிப்பது என்ற தீர்மானத்திற்கு வந்தனர். மத்தியானச் சாப்பாடுகூட இந்திய முறைப்படியே தயாரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நடராஜனுக்கு பரம திருப்தி ஏற்பட்டது.

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு இருவரும் புறப்பட்டனர். அழகிய விலையுயர்ந்த ரோல்ஸ் ராய்ஸ் காரை ஸ்ரீமதி ஜின்ஜர் ஓட்ட ஜின்ஜருக் கருகில் நடராஜன் உட்கார்ந்து காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே சென்ருன். லண்டனை நோக்கி கார் ஓடிக் கொண்டிருந்தது. வழியில் ஜின்ஜர், சகோதரனுக்கு லண்டனில் உள்ள சில விசேஷமான இடங்களை யெல்லாம் குறிப்பிட்டுக் காண்பித்து அதன் வரலாறுகளை விளக்கிக் கொண்டே சென்ருள். வழியிலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் அருகில் வந்ததும் ஜின்ஜருக்கு நேர் எதிர் முகமாக வந்த, கார் ஒன்று லேசாக, ஜின்ஜரின் கார்மீது மோதியது. மிகலேசாக மோதியதால் இரு கார்களுக்கும் அதில் உட்கார்ந் திருந்தவர்களுக்கும், யாதொரு அபாயமும் ஏற்படவில்லை. ஆனுலும் எதிர்ப்புறமாக காரை ஓட்டிவந்து இடித்துத்தாக்கிய ஆங்கிலேயர், தம் மேல் குற்றமில்லை என்பதை நிரூபிக்க, ஜின்ஜரைக் கடுமையாகப் பார்த்து, ''தயவுசெய்து, இனிமேல் காரை ஓட்டும்பொழுது கவனத்தைகாரின் மேலேயே செலுத்தி ஓட்டவும். உள்பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நண்பரிடம் சாவதானமாகப் பேசிக் கொள்ளலாம். ஞாபகம் இருக்கட்டும்'' என்ருர்.

இந்த மிரட்டலுக்கு ஜின்னர் சற்றும் பயப்படவில்லை. ரொம்ப சாவதானமாக அக்கனவானை நோக்கி ''நீங்கள் தயவு செய்து எதிரில் தெரியும், பைத்தியக்கார ஆஸ்பத்திரியில், சிலகாலம், தங்குவீராளுல் இவ்வித ஆபத்துக்கள் ஏற்படாதென்பது என் நம்பிக்கை. ஞாபகமிருக்கட்டும்'' என்று சொல்லிக் கொண்டே காரை ஓட்டிச் சென்ருள்.

நடராஜன் குலுங்கக் குலுங்க நகைத்தான். ''சரியான சூடு!'' என்று தட்டிக் கொடுத்தான். செயின்ட் பால்

என்று பிரசித்தி பெற்ற ஆலயத்துக்குச் சென்று, நெல்சன் வில்லிங்டன், ரெய்னுல்ட்ஸ், போன்ற புகழ் பெற்ற ஆங்கிலேய அறிவாளிகளின் கல்லறைகளை தரிசினம் செய்தார்கள். பிறகு, பிரசித்தி பெற்ற 'பிளீட் தெரு' 'பக்கிங்ஹாம்' அரண்மனையை யெல்லாம் கடந்து 'ஹைட்பார்க்கை' அடைந்தனர்.

'ஹைட் பார்க்' லண்டன் வாசிகளும், தூரதேசத்துப் பிரயாணிகளும் சற்றுத் தங்கி 'இளைப்பாறிப்' போவதற்கான சகல வசதிகளுடன் அமைந்த ஓர் சிங்காரப் பூங்காவனம். தலைநகரின் தலைமை பெற்ற இடத்தில், தனிச்சிறப்புடன் விளங்கும் இப் பூங்காவனத்தின் காட்சியே காட்சி! இளம் காதலரின் இதய கமலங்கள் 'இங்குதான் மலர்ச்சி பெறுகின்றன! பகலென்றும் இரவென்றும் பாராமல், காலத்தைக் கழிக்க ஏற்ற இடம். ஜின்ஜரும் நடராஜனும் பூங்காவனத்தைச் சுற்றிச் சுற்றிப்பார்த்து வருகையில், பூங்காவனத்தின் ஓர் பக்கத்திலுள்ள நீரோடையின் அருகே, ஓர் இந்திய வாலிபனும், ஓர் அழகிய ஆங்கில நங்கையும் கைகோத்து உட்கார்ந்து கொண்டு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். இதைக் கண்ட ஜின்ஜர், சகோதரனுக்குக் காதலர்களைச் சுட்டிக்காட்டி, "ஜாதிமத பேதமின்றி இவ்விருவரும் எவ்வளவு சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள், பார்த்தீர்களா!" என்றாள்.

நடராஜன் சகோதரியை நோக்கிச் சிரித்துக்கொண்டே, "அம்மா, கிழக்கும் மேற்கும் இந்த பூங்காவனத்தில், என்ன சொகுசாகச் சந்திக்கிற தென்பதை இன்றுதான் கண்குளிரக்கண்டேன்! கிழக்கையும், மேற்கையும் ஒன்று சேர்க்கும் பொருட்டு, எங்கள் தாய்நாட்டிலிருந்து வந்த தூது கோஷ்டியில் இவரும் கூட ஓர் அங்கத்தின

ராய் இருப்பாரென்று நான் நினைக்கிறேன்! இங்கு அவர் மேற்கொண்டுள்ள காரியத்தை மங்களகரமாக முடித்துத் தாய்நாடு திரும்ப ஆண்டவன் அருள்புரிவாராக" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்து சென்றான்.

"உங்கள் நாட்டில் இதைப் போன்ற பூங்காவனங்கள் உண்டா! இருந்தால் ஆண்களும் பெண்களுமாக நீங்கள் அனுதினமும் ஒன்று சேர்ந்து விளையாடிக் காலத்தை எங்களைப் போல் போக்குகிறீர்களா? இல்லையானால் மாலை நேரத்தை நீங்கள் எப்படிப் போக்குகிறீர்கள்?" என்றாள்.

"இதைவிட மிக உன்னதமான இயற்கை வனப்புடன் கூடிய பூங்காவனங்கள் எங்கள் நாட்டில் மலிந்து கிடக்கின்றன. மாலைப் போதைப் பற்றிக் கேட்டீர்களே? எங்கள் நாட்டினர் உங்கள் நாட்டினரைப்போல் பெரும்பான்மையோர் பூங்காவனங்களுக்கு மாலையில் போவதில்லை. போகின்ற சிறுபான்மையோர் தங்கள் மனைவி மக்களுடன்தான் செல்வார்களே அல்லாமல், காதலி காதலனாகச் செல்லும் வழக்கமில்லை" என்றான்.

"அதுசரி, காதலியும் காதலனுமாக பூங்காவனம் சென்று இன்பம் அனுபவிப்பதில் தப்பு ஏதாவது உண்டா?" என்று கேட்டாள்.

"காதலியும், காதலனும் பகிரங்கமாக நாலுபேர் நடமாடும் பூங்காவனம் போன்ற இடங்களில் தங்கள் காதல் மகிமையை உலகத்தாருக்கு உணர்த்தும் உன்னதக் கொள்கையில் எங்களவர்களுக்கு நம்பிக்கையில்லை! இரண்டாவதாக காதலென்னும் பெயரால் கண்ட இடங்களில் கட்டித்திரிந்து கொண்டிருப்பது அழகல்ல என்று அவர்கள் எண்ணுகிறார்கள்" என்று சிரித்துக் கொண்டே சொன்னான். ஸ்ரீமதி பதில் பேசவில்லை.

இன்னும் சற்று தூரத்தில் ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம் கூடி, பல பிரசங்கிகள் மேடை மீதேறி பிரசங்கமாரிகள் பொழிவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஹைட்பார்க் என்னும் இவ் அழகிய பூங்காவனத்தில் அனுதினமும், மாலை வேளைகளில், ராஜீய சம்பந்தமான பிரச்னைகளைக் குறித்தும், மதசம்பந்தமான பிரச்சினைகளைக் குறித்தும், பல பிரசங்கிகள் பிரசங்கம் செய்து, தங்கள் கொள்கைகளைப் பரப்பி வருகிறார்கள்! பிரசங்கம் செய்வதில் அனுபவம் பெறாதவர்களை, அதிகப் பிரசங்கிகளாகச் செய்து, 'பட்டம்' கொடுத்து அனுப்புவது, இப் பூங்காவனத்தின் விசேஷ வேலைகளில் ஒன்றாகும்!

மிதவாதக் கட்சி அங்கத்தினரில் ஒருவர் அன்று 'தொழிற் கட்சியார் செய்த தவறுகள்' என்னும் விஷயத்தைக் குறித்துப் பேசி பெரு முழக்கம் செய்து கொண்டிருந்தார். மற்ற பகுதிகளில் நடக்கும் பிரசங்கங்களைக் காட்டிலும் இவ்விடத்தில் ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது.

ஆதலால் இவர்கள் இருவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். "இந்தியாவைப் பொறுத்தவரையில் தொழிற்கட்சியார் செய்த தவறுதல்களை என்னவென்று சொல்வேன்? எப்படிச் சொல்வேன்?" என்று ஒரு ஐந்து நிமிஷம் பிரசங்கி பேசினார். பின்பு "அநியாயம், அக்கிரமம்" என திருப்பி திருப்பி ஐந்து நிமிஷநேரம் சாதகம் பண்ணினார். இடையிடையே கண்களில் நீர் வடித்தார். "நாங்கள் அரும்பாடுபட்டு சேகரித்துக் காத்துவைத்த பொன்வாத்தைக் கொன்று விட்டார்களே! கொன்று விட்டார்களே!" என்னும் சரணத்தை வித விதமாகத் திருப்பி, சுருதி சேராமல் அபத்த சாரீரத்தில் அஞ்சல்

செய்து கொண்டிருந்தார். பிரசங்கியார் பேசுவ தின்ன தென்று தெரியாமல், புரியாமல், பிரசங்கம் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தவித்துக் கொண்டிருந்தது மல்லாமல், தங்கள் பொறுமையையும் இழந்தனர். கூட்டத்தில் நின்று கொண்டிருந்த நடராஜன், கேட்கச் சகியாதவனாய் பிரசங்கியாரை நோக்கி, ''என்ன தவறுதல்கள் செய்து விட்டார்கள் என்பதை சுருக்கமாகச் சொல்லுங்கள் துரையே!'' என்று கேட்டான். ஆங்கிலேயர்கள் அனைவரும் நடராஜனையே கவனித்ததுமல்லாமல், 'சபாஷ்' களும் போட்டனர்.

பிரசங்கியாருக்கு உண்டான கோபத்துக்களவே யில்லை. தம்மைத்தாமே அடக்கிக் கொண்டு நடராஜனை நோக்கி, ''விஷயம் பெரியது உடனே சொல்வதும், சுருக்கமாகச் சொல்வதும் முடியாத காரியம்'' என்று சொல்லி நிறுத்திக்கொண்டார்.

எல்லோரும் சிரித்தார்கள். இவர்களும் சிரித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

லண்டனில் முக்கியமாகப் பார்க்கக்கூடிய காமன்ஸ் சபை, லார்டு சபைகளின் கட்டிடஙகளையும், வெஸ்ட் மின்ஸ்டர் ஆலயத்தையும் காண்பித்து விட்டு, அந்தி நேர மாகி விட்டபடியால் நடராஜனை கிங்ஸ் கலாசாலைக்கு நேராக அழைத்துச் சென்றாள். நடராஜன் கீழே இறங்கியதும், ''சரி. நான் சென்று வருகிறேன். அடிக்கடி வாருங்கள். உங்கள் சொந்த வீடு போல் பாவித்துக் கொள்ளுங்கள்'' என்று அன்போடு சொன்னாள். இரண்டு நாளில் மீண்டும் வருவதாகச் சொன்னான் நடராஜன். அதைக் கேட்டு விதி சிரித்திருக்க வேண்டும்! ஏனென்றால் அவனை எதிர்பார்த்து ஒரு தந்தி காத்திருந்தது.

## தலைக்கு வந்தது......

அறைக்குள் நுழைந்த நடராஜன் அவசரமாகத் தந்தியைப் பிரித்துப் பார்த்தான். நடுக்கமென்பது இன்னதென்று இதுவரை அறியாத கைவிரல்கள் நடுநடுங்கின. புன்னகை தவழும் முகம் தன் பொலிவை இழந்தது. கண்கள் ஒளி இழந்தன. நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. அந்த அவசரத் தந்தி ஊரில் இருந்து தான் வந்திருந்தது. அதிலும் மிக முக்கியமான செய்தியைத் தாங்கி அத்தந்தி வந்திருந்தது.

"கண்ணம்மா உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிருள். இறப்பதற்கு முன் வந்து பார்க்கவும்."

இது கனவா? பிரமையா? அவன் தலை சுழன்றது. பெருத்த பேரிடி இடித்த அதிர்ச்சியை அடைந்தான் அவன்.

மேற்கொண்டு சிந்தித்து என்ன பயன்? தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். உடனே பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான். தலைமை உபாத்தியாயர் இல்லத்திற்குச் சென்று, தந்தியை அவர் கையில் கொடுத்தான். தந்தியைப் படித்த ஆசிரியர் தம் அனுதாபத்தைத் தெரிவித்தார். நடராஜன் ஆகாயக் கப்பலில் போவதற்குரிய சகல சௌகரியங்களையும் செய்வதாக வாக்களித்தார். அதைக் கேட்டு சற்றே நிம்மதி யடைந்தான்.

அவன் கண்ணே மூடவில்லை, கண்கள் உறங்கக் காரணமுண்டோ? கண்ணம்மாவின் இனிய நினைவுகளே இதயத்தில் நிறைந்திருந்தன. "என்று காண்போம்,

கான மழையைக் கேட்டு வரண்ட உள்ளம் குளிருமா? அன்னை...... பாவம். அவள் எவ்விதம் துடித்துத் துய ரப் பட்டுக் கொண்டிருக்கிறாளோ? அவர்களை யெல்லாம் பார்த்துப் பரவசப் படுவேனா? இந்தக் கண்கள் காணு முன் முடிவற்ற தூக்கத்தில் மூழ்கி விடாதே'' என்று சொல்லிக் கொண்டான். அவன் சொல்லுக்குப் பதில் சொல்ல அங்கே யார் இருக்கிறார்கள்?

## மனம்போல் மாங்கல்யம்

எதிர் பார்த்தபடியே, மறு நாள் ஆசிரியர் முயற்சியால் ஆகாயக் கப்பலில் நடராஜனுக்கு இடம் கிடைத்தது. புறப்படு முன், ரின்னிங்டன் தம்பதியார்களுக்கும், ஸ்ரீமதி ஜின்ஜருக்கும், தான் அவசரமாக இந்தியாவுக்குப் போகும் காரணத்தைக் கடித மூலமாகத் தெரிவித்து விட்டான். வேறு நண்பர்களுக்கு எழுத நேரமில்லை. கையும் ஓட வில்லை. விமானத்தில் ஏறி உட்கார்ந்ததும், விமானத்தோடு போட்டி போட்டுக் கொண்டு அவன் உள்ளம் பறந்து வந்து கொண்டிருந்தது.

நடராஜன் எப்படிச் சென்னை வந்து சேர்ந்தான் என்பது அவனுக்கே தெரியாது! சென்னையிலிருந்து, தன் ஊர் போவதற்கு மாலைவரை காத்திருக்க வேண்டும். மாலையில் தான் மெயில் புறப்படுகிறது. மெயில் ஏறி மறு நாள் காலை ஈரோட்டை அடைந்தான். விடியற் காலையில், பஸ் ஒன்று புறப்படுகிறதாதலால் எட்டு மணிக்குள் வீட்டை அடைந்தான். முதலில் யார் தென்படுகிறார்கள் என்று ஆவலோடு பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக் கொண்டே அவசரம் அவசரமாக வீட்டிற்குள் நுழைந்தான். பெட்டி படுக்கையைத் தூர எறிந்து விட்டு, கண்ணம்மா படுத்திருக்கும் அறை நோக்கி அவன் கால்கள் சென்றன.

தூய வெள்ளைக் கம்பளத்தின் மீது அன்றலர்ந்த மலர்போல் கண்ணம்மா படுத்திருந்தாள். மாதுளை மொக்குப்போல் குவிந்த தோற்றம். கண்களில் அதே பழைய ஒளி. அப்பாடி, இப்போதுதான் நடராஜனுக்கு போன உயிர் திரும்பி வந்தது!

"வந்து விட்டீர்களா?" என்றாள். ஆகா! அந்தக் குரலில்தான் என்ன ஆனந்தம்! என்ன இனிமை! எட்டு ஆயிரம் மைல் போனாலும்தான் இந்த ஆனந்தத்திற்கு எங்கே போவது? சுலபத்தில் அது கிடைத்தா விடும்?

கொஞ்ச நேரம் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. வாய் திறந்து பேசாவிட்டாலும் அவர்கள் உள்ளங்களும் கண்களும் எவ்வளவோ பேசிக் கொண்டன!

அன்று வீட்டில் ஒரே கொண்டாட்டம். வெகு கோலாகலமாக இருந்தது. அன்னை வள்ளியக்காளும், திலகக்காளும் கவுண்டரும் ஓயாமல் நடராஜனுடைய பிரயாணத்தைப் பற்றியும், மேல்நாட்டு அனுபவங்களைப் பற்றியுமே உற்சாகமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நடராஜனுக்குச் சொல்லிச் சொல்லி, போதும் போதும் என்று ஆகிவிட்டது!

மறு வாரமே கவுண்டர், நடராஜன் கண்ணம்மா திருமண ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டார்.

நடராஜன் திருமண அழைப்பிதழ்களை லண்டனிலுள்ள தன் நண்பர்களுக்கெல்லாம் அனுப்பிவைத்தான். ரின்னிங்டன் தம்பதிகளுக்கும், சகோதரி ஸ்ரீமதி ஜின்ஜருக்கும் கலியாணப் பத்திரிகைகள் போய்ச் சேர்ந்தன!

அன்று மாலை தோட்டத்தில் ஏகாந்தமான ஓரிடத்தில் கண்ணம்மாவும் நடராஜனும் உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் உள்ளத்தின் எதிரொலி போல் ஓர் இன்னிசை எங்கிருந்தோ எழுந்தது:

**"பட்டமரம் துளிர்க்கின்ற பருவமடா பருவம்**
**பாவை உளம் மலருகின்ற தருணமடா தருணம்"**

"ஆகா!" என்றான் நடராஜன்.

"அற்புதம்" என்றாள் கண்ணம்மா.

"நாமும் பாடலாமா?" என்று கேட்டான் நடராஜன்

"இப்போது நாம் பாடிக்கொண்டு தானே இருக்கிறோம்? நம் உள்ளங்கள் பாடுவது உங்கள் காதுக்குக் கேட்கவில்லையா?" என்று சொல்லிவிட்டுக் 'கலகல' வென நகைத்தாள் கண்ணம்மா.

# புதுமலர் நிலையம்

## அடுத்து வரும் மலர்கள்

சித்திர மடல் ... "தூரன்"

அரசியலும் மாணவரும் ... க. அருணாசலம்
(மகாத்மா காந்தி)

சுதந்திரம் ... ஆர். திருஞானசம்பந்தம்
(நாவல்)

வானவில் ... கே. விஜயராகவன்
(நாவல்)

கமலா முதலிய சிறுகதைகள் ... ஆர். திருஞானசம்பந்தம்
(இரண்டாம் பதிப்பு)

விபரங்களுக்கு

## புதுமலர் நிலையம்

திருச்சி ரோடு : : கோயமுத்தூர்.

# சிலப்பதிகாரம்

## (புகார்க்காண்டம்)

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்

**எழுதிய உரையுடன் தயாராகி விட்டது**

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருன சிலப்பதிகாரத்தின் இனிமையையும் நயத்தையும் எளிதில் எல்லோரும் இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

நமது கலை, நாகரிகம் இவற்றின உயரிய பண்பாட்டுக்கு அத்தாட்சியாக இது விளங்குகிறது.

தமிழ் அறிஞர்களான திரு எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், திரு ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களும் முறையே சிறப்பான முன்னுரை, மதிப்புரை தந்து, நூலின் சுவையை அனுபவிக்கச் செய்திருக்கிருர்கள்.

*விலை ரூ. 5—0—0*

**விபரங்களுக்கு**

# புதுமலர் நிலையம்

**திருச்சி ரோடு : : கோயமுத்தூர்.**

# குங்கும அலங்காரி

ஆசிரியர்

**எ. ஷண்முகம் பி. ஏ.**

பிரமன் படைப்பிலே அவள் பேரழகி. சங்கீதத்தைப் போல் இனிமையும், மலரைப் போல் மென்மையும் கொண்ட அவளது உள்ளத்திலே பெரும் புயல் ஒன்று மூண்டெழுகிறது. காதல்வழி காடுமுரடென்று தெரிந்தும், இறுதி வரை தன் ஒரே லட்சியத்தில் கருத்தூன்றி நிற்கிறாள். அந்தச் சோகச் சித்திரத்தின் இனிய கனவே குங்கும அலங்காரி.


**புதுமலர் நிலையம்**

திருச்சி ரோடு

கோயமுத்தூர்